உ

கடவுள்துணை.

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

நான்காந்தொகுதி.

பத்திராசிரியர் — மு. இராகவையங்கார்.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1905 1906.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்.— } ரா. இராகவையங்கார்,
சேது ஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-ச.] விசுவாவசுஞு கார்த்திகைமீ [ப[illegible]-க.

## உள்ளுறை.

திருத்தக்கதேவரும், கம்பரும்.—பத்திராசிரியர் க
உகாரவீற்றுவினைப்பகுதி.—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை [illegible]
இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்.—ஸ்ரீமத்-சி. கணேசையர் [illegible]
செய்யுள்.—ஸ்ரீமத்-தி. செல்வக்கேசவராய முதலியார், M. A., கஎ
மகாபாரதச்செய்யுட் பாடாந்தரம்.— } ஸ்ரீமத்-சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயர் உச
நாலாராய்ச்சி.—ஸ்ரீமத்-அ. மாதவையர், B. A., உஅ
தாயுமானவர் வரலாறும் அவர் மதகொள்கையும்.— } ஸ்ரீமத்-கல்குளம் குப்புசாமி முதலியார், B. A., ௩௫
புத்தகக் குறிப்பு.—பத்திராசிரியர் ௩௬
திருவாரூருலா (முற்றும்)—ஸ்ரீமத்-வே. சாமிநாதையர் சக
தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியர்.— } பத்திராசிரியர் ௬எ
இயற்கைப்பொருட்பாடம்.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியார் ௫௫
சுகசந்தர்சனதீபிகை (முற்றும்).—பண்டித-நடேசசாஸ்திரியார் ௬௫எ

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] 1905. [தனிப்பிரதி அணா 8.

# முக்கிய அறிவிப்பு.

---

நம் "செந்தமிழ்" சென்னைராஜதானி முழுதுமேயன்றி, இங்கிலண்ட், பிரான்ஸ், பர்மா, சிலோன், யாழ்ப்பாணம், ஸ்ட்ரேய்ட்ஸ் ஸெட்டில்மெண்ட்ஸ், தென்னாபிரிகா முதலிய அந்நிய நாடுகளிலும் சென்று பரவும் பத்திரிகையாதலால், இது, விளம்பரம் (Advertisement) செய்தற்குப் பெரிதுமேற்றது. விளம்பர விகிதங்கள் அடியிற்கண்டவாறு மிக சௌகரியமாக அமைக்கப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| வருஷம் ஒன்றுக்கு, பக்கமொன்றுக்கு ரூ. | | 12—0—0 |
| ஆறுமாதத்துக்கு, | ... | ... 7—0—0 |
| மூன்றுமாதத்துக்கு, | ... | ... 4—0—0 |
| ஒருமாதத்துக்கு, | ... | ... 1—8—0 |

மானேஜர்,
தமிழ்ச்சங்கம்,
மதுரை.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்.

தொகுதி-ச.] விசுவாவசுஹு கார்த்திகைமீ [பகுதி-க.

## திருத்தக்கதேவரும், கம்பரும்.

இவர்கள் இருவரும் தமிழிற் பெருங்காப்பிய நூல்கள் இயற்றி மிகச்சிறந்த புகழ்படைத்த புலவர் பெருமக்களாவர். துறையடுத்த விருத்தத் தொகைக்கவிகளாற் றொடர்நிலைச் செய்யுளை வளம்பெறப் பாடுதலில் இவர்களுடைய பேராற்றல் அளத்தற்கு அரியதேயாகும். இவருள் திருத்தக்கதேவர் பாடியது சீவகசிந்தாமணி என்பது. கம்பர் பாடியது இராமாவதாரமென்பது. இவ்விரு பெரும்புலவர்களுடைய அறிவின் ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்ந்தறிதற்கு இவ்விரண்டு நூல்களுமே உற்ற கருவிகளாவன. சீவகன் கதைக்கும் ஸ்ரீராமகாதைக்கும் சரிதையினியல்புபற்றி நோக்குமிடத்துச் சிறிய உவர்க்குட்டத்துக்கும் பெரியபாற்கடற்குமுள்ள வேற்றுமை புலனாகும். சீவகன்கதை யாண்டுஞ் சிற்றின்பமே பெரும்பான்மை பயின்றுவருகின்றது. ஸ்ரீராமகாதை அறம்பொருளின்பம் வீடு என்னும் நாற்பொருளும் மலிந்து இயல்வது. இக்காப்பியங்களின் றலைவர்களை நோக்குமிடத்துச் சீவகன் பலதாரங்களை மணந்தவனாவன்; ஸ்ரீராமமூர்த்தி ஏகதார மகாவிரதனாவன். சீவகசரிதையில் இரண்டோரிடங்களில் வாழ்வுந் தாழ்வுங் கலந்து இன்பச்சுவையும் துன்பச்சுவையும் காணப்படினும் பெரும்பாலும் கதையினைச் செல்வ வாழ்க்கையிலே கொண்டுசெலுத்தலாற் சுவையின்றுவது. ஸ்ரீராமகாதைக்கண்ணே யாண்டும் வாழ்வுந் தாழ்வும்பற்றி இன்பமுந் துன்பமும் விரவி வருதலிற் சுவை மிகுதி பயக்கின்றது. இன்னோரன்ன சரித்திரவியல்புபற்றி இவ்விரண்டு நூல்களுக்குள் உயர்வு தாழ்வு காண்டல் எளிதேயாகும். ஆதலாற் சரித்திரவியல்பினை விடுத்து இவ்விரு

பெருங்காப்பியங்களையும் ஈன்றியற்றிய இவ்விரு நூலாசிரியருக்குள் புலமைத்திறன் பற்றியுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையே யான் இவ்விடத்தாராயப் புக்கேன்.

இவ்விரு புலவர்களும் காலத்தானுங் கொள்கையினானும் வேற்றுமைப்பட்டவர்களேயாயினும் புலமை எய்தியது தமிழ்க்கல்வியிலே யாதலால் இவர்கள் அம்மொழியிற் கற்ற பெருநூல்களெல்லாம் பழைய சங்கநூல்களே யாகுமென்று துணியலாம். இவ்விருவர் வாக்கிலும் திருக்குறள் புறநானூறு அகநானூறு முதலிய பழைய நூல்களின் அரியவழக்குகள் பல விரவியிருத்தலானே ஈதறியப் படும். இவ்விருவரும் எடுத்தாண்ட சங்கநூல் மேற்கோள்களை இங்கு ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டப்புகின் மிக விரியுமாதலால் ஒரு சிலவே கூறிச்செல்வேன். சிந்தாமணிக்கண்,

"வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வேய்மென்றோள்"
(குணமாலை-கசுஉ.)

என்பது

"வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா ளோள்" (கக0ரு)

என்னுந் திருக்குறளையும்;

"கண்ணினா லின்று கண்டாங் கூற்றினைக் காமர் செவ்வாய்
... ... ... ... ...
பெண்ணுடைப் பேதைநீர்மைப் பெருந்தடங் கண்ணிற்றம்மா"
(இலக்கணை-அக)

என்பது

"பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு" (க0அரு)

என்னுந் திருக்குறளையும் கொண்டுவந்தனவாதல் அறிக. இவ்வாறு முழுமுழுக் திருக்குறளைக்கொண்டுவருவன இந்நாலுண் மிகப்பலவாகும். இவையன்றி ஒவ்வோர் திருக்குறளிற் குறித்த உவமைபற்றி வருவனவும் பலவுள.

"பெரும்பாரவாடவர்போற்பெய்பண்டந்தாங்கி" (முத்தி-கஅசு) எனப் பகட்டிற்கு ஆடவரை உவமித்தது "மடுத்த வாயெல்லாம் பக

## "செந்தமிழ்" நான்காந்தொகுதியின்

# உள்ளுறை.

---


அடியார்க்குநல்லார்காலம்:—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், M.A. ௪0௧.

அன்பு:—ஸ்ரீமத்- ஆத்மநாதன். ௫௯0, ௯௪௬.

ஆயிரம் என்பதின் குறிப்பு:— ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், M.A. ௨௯௩.

ஆழ்வார்களும் உதவிப் பத்திராசிரியரும்:— ஸ்ரீமத்-என். எஸ். ரெங்கசாமி ஐயங்கார், [M. A. ௫௬.

ஆழ்வார்கள் சரித்திராராய்ச்சி:—பத்திராசிரியர். ௬௧.

இந்துசாகபட்சகனுயிருப்பதேன்?—ஸ்ரீமத்-ம. ஜகதீசஐயர். ௯௮௫.

இந்துமதம்:—ஸ்ரீமத்-மு. சாம்பசிவநாயனர். ௯௬௪, ௩௫௪, ௪0௪.

இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்:— ஸ்ரீமத்-சி. கணேசையர். ௧௩, ௪௭, ௪௯0, [௫௭௯, ௬௩௯.

இருபத்திரண்டு சுருதிகள்:— ஸ்ரீமத்-பி. எஸ். சுந்தரமையர் B.A. L.T. ௩௨௩.

இளம்பூரணவடிகள்:—பத்திராசிரியர். ௩0௪.

உகாரவீற்றுவினைப்பகுதி:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௯.

உயிர்:—ஸ்ரீமத்-சேற்றூர். இராமசாமிக்கவிராயர். ௨௭௩.

ஊக்கமுடைமை:—ஸ்ரீமத்-பி. எஸ். சுப்பிரமணிய ஐயர். ௩௧௧.

ஒப்புரவறிதல்:—பத்திராசிரியர். ௪௩௩.

ஓர்குறிப்பு:—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ் M. A. ௩௯௯.

கடைவள்ளலார்காலம்:— ஸ்ரீமத்-எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், M. A. [௩௪௯, ௩௮௮. ௪௭௯; ௫௨௨.

கரிபுரக்குகைகள்:—ஸ்ரீமத்—ல. அனந்தையர். ௭௭.

கருவூர்த்தேவர்:—ஸ்ரீமத்-மு. ரா. அருணாசலக்கவிராயர். ௧௪௧.

கல்லாடம்:—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ். M. A. ௨௯௧.

கல்வியின்பம்:—ஸ்ரீமத் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௪௭௩.

கலிங்கம்:—ஸ்ரீமத். ல. அனந்தையர். ௧௦௩.

கால்நடையின்உணவுப்பயிர்கள்:— ஸ்ரீமத். நாராயணசாமி ஐயர். ௪௩௦.

காலஞ்சென்றஸ்ரீகனகசபைப்பிள்ளையவர்களும், அவர் தமிழாராய்ச்சியும்:— பத்திராசிரியர். ௧௩௩.

கொழுந்துன்னூசியின் உரை விளக்கம்:— ஸ்ரீமத். அ. சண்முகம் பிள்ளை. ௨௮௪.

கொழுந்துன்னூசியின்முடிவுரை:— ஸ்ரீமத்-மு. சாம்பசிவநாயனார். ௨௦௬.

கொழுவுந்துன்னூசியும்:—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை. ௧௪௫.

கொழுவுந்துன்னூசியும்:— பழையவுரை. ஸ்ரீமத்-திரு. நாராயண ஐயங்கார். ௨௭௧.

சில குறிப்புகள்:—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ் M. A. ௫௩௮.

சுதேசகலாசாலை ஸ்தாபனம்:— ஸ்ரீமத்-சே. இராஜகோபாலாசாரியர், B. A. [௩௯௧.

செய்யுள்:—ஸ்ரீமத்-தி. செல்வக்கேசவராய முதலியார், M. A. ௧௭.

செவ்வைச்சூடுவாரும் அநதாரியும்:— ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார். ௩௯௯.

சேனாவரையவாராய்ச்சி:—ஸ்ரீமத்-அ. கோபாலையர். ௬௫௩.

தக்கயாகப்பரணிபாடப்பட்ட வரலாறு:—பத்திராசிரியர். ௨௬௩.

தஞ்சைவாணன் கோவை:—ஸ்ரீமத்-கோ. வெங்கோபராவ். ௫௦௫

தருக்கசூத்திர முதற்பாடம்:— ஸ்ரீமத்-எஸ். பால்வண்ணமுதலியார். ௮௩. ௪௧௫

தனிச்செய்யுட் கோவை:— ஸ்ரீமத்-சேற்றூர். இராமசாமிக்கவிராயர். ௧௨௦.௧௮௦.

தாயுமானவர் வரலாறும், அவர் மதக்கொள்கையும்:— ஸ்ரீமத்-கல்குளம். குப்புசாமி முதலி [யார். B. A. ௩௫, ௫௧.

திருக்கோவலூர் இராஜராஜன்சாஸனம்:— ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ். M.A. ௨௩௦.

திருத்தக்கதேவரும், கம்பரும்: } பத்திராசிரியர். (ஸ்ரீ: ரா. இராகவையங்கார்.) க.சக.

தென்மொழியில் தன்மை முன்னிலைகளாமாறு:— } Prof. ஜூலியன் வின்ஸன், Paris. கஉஉ.

தொனி:—ஸ்ரீமத்-சி. கணேசையர். ககசு.

நம்மாழ்வார்:—ஸ்ரீமத்-கோ. வெங்கோபராவ். உஉஅ.

நல்லொழுக்கம்:— } ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். சகஅ, சசஅ, ருஙக, சுOஅ, சுஎரு.

நன்னன் வேண்மான்:—பத்திராசிரியர். அங.

நன்னூல்:—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ். M. A. ஙகூசு.

நன்னூல்விருத்தியுரைக்குறிப்பு:—ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை. சுOங.

நாலாராய்ச்சி:—ஸ்ரீமத்-அ. மாதவையர். B. A. உஅ, கஉங.

பஞ்சதந்திரம்:—ஸ்ரீமத்-எஸ். சாமிநாத ஐயர். சருஎ.

பஞ்சதந்திரம்:—ஸ்ரீமத்-கா. சிவசிதம்பர ஐயர். சுஉஉ.

பத்திராசிரியர் குறிப்பு:— சஅஎ, ருருஅ.

பரிமேலழகருரைப்பாயிரம்:—பத்திராசிரியர். கருச.

பரியாயப்பெயர்:—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ககO.

பழந்தமிழ்க்குடிகள்:—பத்திராசிரியர். உசங.

பாண்டியசாஸநங்கள்:— } ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ். M. A. ககங, சஅகூ, ருகஉ.

பாலமுது:—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியர். கஉகூ, கருசு.

பிரதமவித்தியாப்பியாசப்பிரகடனம்:— } ஸ்ரீமத்-சே. இராஜகோபாலாசாரியர். B. A., கசுO, உOக, உகூஅ, சஉரு, ருசங, சுகரு.

புத்தகக்குறிப்பு:—பத்திராசிரியர். ஙகூ, அஎ, கஙஉ, உசO, ஙசுஎ, சுஉச,

பெரியபுராணஅரும்பதவிளக்கம்:— } ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை. கூசு, கசஎ, உஙசு, உருசு, ஙகஅ, சOஎ, சசO, ருகஎ, ருகூஅ, சுசுO.

'பொருட்பெண்டிரென்னும்' திருக்குறள்:— } ஸ்ரீமத்-அ. சண்முகம் பிள்ளை. ருOகூ.

'பொருட்பெண்டி'ரென்னுந்திருக்குறள்:— ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். ருகக.

'பொருட்பெண்டி'ரென்னுந்திருக்குறள்:— ஸ்ரீமத்-அ. மாதவையர். B. A. சஅச.

பொன்னெறும்புகள்:— ஸ்ரீமத்-R. அரங்காசாரியர். B. A., கசாகூ.

மகாபாரதச்செய்யுட்பாடாந்தரம்:— ஸ்ரீமத்-சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர். [உச, கூகூ, கஎரு, உருங.

மகாபாரதம்:— ஸ்ரீமத்-அ.குமாரசுவாமிப்பிள்ளை. ருசகூ, ருஅஉ, சாசங.

மாதைத் திருவேங்கடநாதர்:— பத்திராசிரியர். சாஉசா.

மாறஞ்சடையன்:— ஸ்ரீமத்- து. அ. கோபிநாதராவ். M. A. ஙஙரு.

வாணன்கோவையுரை:— ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ககூங.

வெண்ணையூர்ச்சடையப்பிள்ளையென்கிறபுதுவைச்சேதிராயர் கல்வெட்டுக்கள்: ஸ்ரீமத்-பின்னத்தூர் நாராயணசாமி [ஐயர். உருக

வேள் ஆயண்டிரன்:— பத்திராசிரியர். கூ0

வேள் பாரி:— பத்திராசிரியர். ருகூங.

வேளிர்வரலாற்றுமறுப்பு:— ஸ்ரீமத்-மா.கார்த்திகேயமுதலியார். உகரு

ஸ்ரீபட்டர் வைபவம்: ஸ்ரீமத்-வை. மு. சடகோபராமாநுஜாசாரியர். ஙஎரு [சசாச, சகூஅ, ருஎஉ, சாசாரு

## "செந்தமிழ்" நான்காந்தொகுதியில் வெளிவந்தநூல்கள்

### (முடிந்தவை.)

குருமொழிவினாவிடை:— ஸ்ரீமத்.மு.ரா.அருணசலக்கவிராயர்.பகுதி. உ.

சுகசந்தர்சனதீபிகை:— ஸ்ரீமத்.பண்டித-நடேசசாஸ்திரியார்.பகுதி.க.

திருவாரூருலா:— மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீமத்-வே. சாமிநாதையர். [பகுதி. க.

### (முடியாதவை.)

இயற்கைப்பொருட்பாடம்: ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியர் பகுதி. க. [உ. ங. ச

ஐந்திணை யெழுபது:— ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார். பகுதி. ங.

தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியம்:— ஸ்ரீமத்- ரா. இராகவையங்கார். பகுதி. [க. ங. ச. ரு, சா.

டன்னான்" (திருக்குறள்-௬௨௪) என்பது கொண்டு என அறிக. "போதுவாய் திறந்த போதே பூம்பொறி வண்டு சேர்ந்தாங், கூது மே மகளிர்க் கொத்த போகமு மன்னதொன்றே" (கேமசரி-௩௭௬) என்பது "மலரினு மெல்லிது காமம்" (௧௨௮௯) என்னுந் திருக் குறட் கருத்தினை விளங்கவுரைத்ததாம்.

"வாய்ப்படுங் கேடு மின்றாம் வரிசையி னறிந்து நாளுங்
காய்த்தநெற் கவளந் தீற்றிற் களிறுதான் கழனிமேயின்
வாய்ப்பட லின்றிப் பொன்றும் வல்லனாய் மன்னன் கொள்ளின்"
(முத்தி-௩௦௬)

என்பது

"காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகு
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கு
மறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே" (௧௮௪).

என்னும் புறப்பாட்டையும்;

"நெல்லுயிர் மாந்தர்க் கெல்லா நீருயி ரிரண்டுஞ் செப்பிற்
புல்லுயிர்......... மன்னர்கண்டாய நல்லுயிர்........."
(முத்தி-௩௧௦)

என்பது

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்" (௧௮௬).

என்னும் புறப்பாட்டையுங் கொண்டுவந்தன. இவைபோல வந்தன பிறவுங் கண்டுகொள்க. இனி இராமாவதாரத்தில்,

"ஊருணி நிறையவு முதவு மாடியர்
பார்கெழு பயன்மரம் பழுத்தன் றாகவுங்
கார்மழை பொழியவுங் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் றார்கள்யார்"
(அயோத்தி-மந்திரப்-அ௨)

என்பது

"ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு" (௨௧௫)

"பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்" (உகசு)

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு" (உகக)

என்னுந் திருக்குறள்களையுட்கொண்டு எழுந்தது என்று துணியத்தகும். பேரறிவாளனும், நயனுடையானுமாகிய இராமன் அரசுச்செல்வம் எய்தல் ஊருணிநிறைதல்போலவும் பக்கத்துயர்ந்த பயன்மரம் பழுத்ததுபோலவும் கார்மழை பொழிதல்போலவும் கழனி பாய்ந்து பெருகல்போலவும் எல்லாராலும் தத்தமக்கு வரும் நன்மையாகக் கொண்டு விரும்பப்படும் என்றதாம். இதன்கண் நதிபெருகலொழித்து மற்றை மூன்றுந் திருக்குறளைக்கொண்டு நின்றன.

"மானநோக்கிற் கவரிமாவனையநீரார்" (அயோத்தி-மந்திரப்-எ)

என்பது

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின்" (தகூசு)

என்னுந் திருக்குறளைக்கொண்டுவந்தது.

"உரைசெயற் கெளிதுமாகி யரிதுமா மொழுக்கி னின்றான்"
(கிட்கிந்தை, அரசியல்-சுசு.)

என்பது

"சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்" (சுசுசு)

என்னுந் திருக்குறளைக் கருதிவந்தது. இதன்கண் உரைசெயற்கு என்பதனை ஒருசொல்லாகக்கொள்ளாது உரைக்கு செயற்கு எனப்பிரித்து உரைக்கு எளிதுமாகிச் செயற்கு அரிதுமாம் என இயைத்துரைகொள்க.

"கொடுப்பது விலக்குகொடி போயுனது சுற்ற
முடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடு கின்றாய்"
(பால-வேள்வி-ஙஙு)

என்பது

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்" (கசுசு)

என்னுந் திருக்குறளைப்பற்றி வந்தது. இவைபோல வந்தன பலவுள. கம்பர் திருக்குறளை "எழுதுண்டமறை" என்று வழங்கலால் அவருக்கு அந்நூற்கண் உள்ள நன்மதிப்பினை எளிதிலறியலாகும். இனிக் கிட்கிந்தாகாண்டக் கார்காலப்படலத்து

"காலமறி வுற்றுணர்தல் கன்னலளவு வல்லான்
மாலைபக லுற்றமென வோர்வரிது மாதோ."

என்பது

"நிலனும் விசும்பு நீரியைந் தொன்றிக்
குறுநீர்க் கன்ன லெண்ணுந ரல்லது
கதிர்மருங் கறியா தஞ்சுவரப் பாஅய்த்
தளிமயங் கின்றே தண்குர லெழிலி" (சாரு)

என்னும் அகப்பாட்டினையே கருதிவந்தமை கண்டுகொள்க. கம்பர் கன்னல் என்றது குறுநீர்க்கன்னலை. குறுநீர்க்கன்னல் என்பது 'அளவுபட்ட நீரினையுடைய நாழிகைவட்டில்; ஒரு கடாரத்துநீரிலே ஓர் நுண்ணிய துளையுடையதோர் வட்டிலையிட்டு அதன்கண் நீர்புகுவதுபற்றி நாழிகையளப்பதோர் கருவியாகும்.* சூர்ப்பநகைப்படலத்து

"சேற்றவளை தன்கணவ னருகிருப்பச் சினைந்திருகிச்
சூற்றவளை வயலுழக்குந் துறைகெழுநீர் வளநாடா"

என்பது

"கதிர்க்கோட்டு நந்தின் சுரிமுக வேற்றை
நாகிளந் தவளையொடு பகன்மணம் புகூஉ
நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்" (உ௬௬)

என்னும் புறப்பாட்டைக்கொண்டு கூறியதென்றுணரப்படும். புறப்பாட்டுரையாசிரியர் இப்பாடத்தினை எடுத்தோதி "நந்தி னேற்றை நாகிளந்தவளையுடனே தத்தம் இனத்தொடு பகன்மணப்புகூஉம் எனினுமமையும்" என்றார். இவ்வுரைக்குத் 'தத்தமினத்தொடு' பாடத்தில்லாமல் வருவித்ததாம். இங்ஙனம் வருவித்துரையாது இப்பாடத்தின் நேர்பொருளைகொண்டு கம்பர் கூறியுள்ளாரென்று துணியப்படும். இவ்வாறு சங்கநூல்வழக்குப்பற்றி வருவன இராமாவதாரத்து மிகப்பலவாகும். இவற்றால் திருத்தக்கதேவருக்கும் கம்பருக்கும்

* பத்துப்பாட்டு, பக்கம்-கரு௯. (முல்லைப்பாட்டுரை)

சங்கம் மருவிய பழைய பெருநூல்களிலெல்லாம் நல்லதேர்ச்சியுண்டென்று கொள்ளப்படும். பண்டைத் தமிழ்நூற்பயிற்சி இருவர்க்கும் ஒத்ததென்று துணியப்பட்டவிடத்தும் கம்பருக்குச் சிந்தாமணியாரினுஞ் சிறந்ததோரேற்றமுள்ளது. அஃதாவது கம்பர் சிந்தாமணியார் பேரறிவையும் நன்கறிந்தவராவர், சிந்தாமணியார் கம்பருக்கு முற்பட்டகாலத்தவராதலால், சிந்தாமணியாரோ கல்வியிற் பெரியராகிய கம்பரது விழுப்பேரறிவையறியார். கம்பர், சிந்தாமணி தமிழ்மக்களாற் பெரிதும் போற்றப்படுதலைக் கண்டுவைத்து அதனினுஞ்சிறக்கவே ஒருபெருங்காப்பியஞ்செய்து புகழ்பெறவேண்டுமென்ற ஊக்கத்துடனே இராமாவதாரத்தைப் பாடியிருப்பர். இவர் காலமோ சிந்தாமணியையே அரியபெரிய காப்பியமாகப்போற்றிப் படித்த காலமாகும். அன்றியும் இவர்காலம் சயங்கொண்டார், சேக்கிழார்நாயனார், புகழேந்தியார், ஒட்டக்கூத்தர் முதலிய கவிவேந்தர்களெல்லாம் பெரியபெரிய நூல்கள்பாடி அழியாப் புகழ்நிறுத்தியகாலமாம். கம்பர் இவர்கள் அறிவையெல்லாமும் அளந்தறிந்துகொண்டவருமாவர். அளக்கலாகா இயற்கையறிவின்மாட்சி நன்றுபெற்ற ஒருவருக்குப் பலபெரியபுலவர்களின் புலமையையும் அளந்துகொண்ட செயற்கையறிவும் நன்குகூடுமாயின் அவருக்கு அரியவாவனயாவை? "மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம், யாவுள முன்னிற் பவை" என்பது பொய்யாமொழியன்றே. இதனாற் றிருத்தக்கதேவர்க்கும் கம்பருக்கும் நூலான் எய்திய செயற்கையுணர்வினுஞ் சிலவேற்றுமையுண்டென்று கொள்ளப்படும். மற்றுக் கம்பர் திருத்தக்கதேவர் கவிகளையும் நன்றறிந்தவர் என்றற்குச் சான்று என்னையெனின் இராமாவதாரநூற்கண்ணே சிந்தாமணிச்சொல்லும் கருத்தும் ஆங்காங்குப்பயின் றிருத்தலேயாமென்க. கம்பர் சிந்தாமணிக்கருத்தை எடுத்தாளுமிடங்களிலெல்லாம் அந்நூற்கண் உள்ளவாறே கூறியொழியாது தாமெடுத்தாளப்புகுந்த ஒவ்வொரு கருத்தையும் முன்னதினுஞ்சிறக்கப்புனைந்து பலஅழகும்ஒருங்குபெறப்பாடுவரெனவறிக. சிந்தாமணியார் கருத்தும் கம்பர்பாற்பட்டு இனிய சுவையுடைத்தாமென்று கொள்க. இவ்வாறுவந்தன பலவற்றுள் ஈண்டுச் சில கூறுவல். கம்பர் ஆரணியகாண்டத்து மாரீசன்வதைப் படலத்து,

"ஆற்றாராகிற்றம்மைக்கொண்டடங்காரோவென்றாருயிர்க்குக்
கூற்றாய்நின்றகுலச்சனகிதுவளைமலர்ந்ததாமரைக்குத்
தோற்றயதனைகங்கரிந்தாய்மெலிந்தாய்வெதும்பத்தொடங்கினாய்
மாற்றார்செல்வங்கண்டழிந்தால்வெற்றியாகவற்றாமோ"

எனப்பாடியுள்ளார். இது சூர்ப்பநகையாற் சீதையின் பேரழகை நன்றுகேட்டு அச்சீதைபாற் பெருங்காமங்கொண்ட இராவணன், இரவிற்றண்ணிலவெறிப்பக்கண்டு, என்றுங் குளிர்கின்ற மதி மயங்கிச்சுடுகின்றதெனக்கருதி, மதிமயங்கி அத்திங்களை நோக்கிக்கூறியதுக்குச் செய்யுள். இதன்கட் 'குவளை மலர்ந்ததாமரை' என்பது சிந்தாமணியார் கருத்தாம்.

"தாமரைப் போதிற் பூத்த தண்ணறுங் குவளைப் பூப்போற்
காமரு முகத்திற் பூத்த கருமழைத்தடங்கண் டம்மால்."

(மண்மகள்-௩௨)

எனவும்

"இழையொளி பரந்த கோயி லினமலர்க் குவளைப் பொற்பூ
விழைதகு கமல வட்டத் திடைவிராய்ப் பூத்த தேபோல்." (ஷை-௨௬)

எனவும் வருவனவற்றானுணர்க. கம்பருக்குக் "குவளைமலர்ந்த தாமரை" என்னுங்கருத்து இச்சிந்தாமணி யடிகளினின்றும் உண்டாயிற்று என்று கொள்ளலாமாயினும், கம்பர் சிந்தாமணியார் கூறியாங்குக் கூறாமல், அக்குவளைதாமரைகளுக்கும் திங்களுக்கும் உள்ள இயைபினைத் தெளிந்து, குவளையும் தாமரையும் வேறு வேறிடங்களிலுளவாயின் முன்னதை யலர்த்தியும் பின்னதைக் குவித்துவாடுவித்தும் போதுகின்ற அத்திங்கள், குவளையைத் தன்னடுவில் வைத்துக்கொண்டதோர் தாமரையுளதாயின் அதனைக்குவிக்கலாற்றாது தோற்கும் என்று கண்டு, யாண்டுந் தாமரை திங்களுக்குத் தோற்றதுபோய் ஈண்டுச் சானகிதாமரைக்குத் திங்கள் தோற்றது என்று வைத்துச் சமயோசிதமாகக் 'குவளைமலர்ந்த தாமரைக்குத் தோற்றாய்' என்று அலங்கரித்தனர். திங்கள், குவளையைத் தன் நடுவில் வைத்துக்கொண்டதோர் தாமரைக்குத் தோற்றவாறு யாங்ஙனமெனின், திங்களின் இயல்பு குவளையை அலர்த்தித் தாமரையைக் குவித்தல் அன்றே? இத்தாமரை குவளையைத்தன்நடுவில் வைத்துக்கொண்டதாதலால் தாமரையைக் குவித்தால் அதனடுவிலுள்ள குவளையும் அதனுள்ளே

சாம்பும்: அப்போது தானியல்பாக அலர்த்தும் குவளையை இவ்வி டத்தலர்த்தினுனல்லன்; குவளையை அலர்த்தினும் அதனை நடுவிலு டைய தாமரையும் அலர்ந்துவிடும்: அப்போது தானியல்பாகக்குவிக் கின்ற தாமரையை ஈண்டுக் குவித்தானுமல்லன்; இவ்வாறு தன்னியற் கையான செயல் ஈண்டு நிகழ்த்தலாற்றாது தோற்றான் என்க. இத் தகைய தாமரை சாநகிபாலுள்ளது. அதற்குமதி தோற்றனென்க. இவ்வியைபெல்லாம் தம்முடைய பரந்தவுள்ளத்து விரைந்துபட்டன வில்லையாயின் "குவளைமலர்ந்த தாமரைக்குத் தோற்றாய் அதனால் அகங்கரிந்தாய் மெலிந்தாய் வெதும்பத்தொடங்கினாய்" என அழகு பொலியக்கூறலாகாதென்க. திங்கள் சாநகியினுடைய கண்களாகிய குவளைமலர்ந்த முகத்தாமரைக்குத்தோற்றதனாலுண்டாய உள்வெ துப்பு, அத்திங்களை அகங்கரிந்துமெலியச்செய்து புறத்தும் வெதும் பத்தொடங்கிற்றென்றானென்க. இப்பாட்டில் "மாற்றார் செல்வங் கண்டழிந்தால் வெற்றியாகவற்றாமோ" என்னும் அறவுரை நினைக் கத்தக்கது. இவ்வறவுரை உபதேசஞ் செய்கின்ற இராவணனார், தாம் இப்போது புரிகின்றது அம்மாற்றார் செல்வங்கண்டழிதலின் வேறேயோ! இவர் மாற்றார் செல்வங்கேட்டழிபவர் போலும்! இத னாற் சிந்தாமணியார் கருத்து என்னப்பட்டதோர் நல்லவண்ணத்தில் கம்பர் தம்பேரறிவாகிய எழுதுகோலைத்தோய்த்துக், கண்டார் கண் ணும் மனமும் கவருந்தகைத்தாக ஓர் செய்யுளாகிய திருவுருவைச் சித்திரித்தனர் என்றதுணிபலாகும். கம்பர் கோலங்காண்படலத்து

"பல்வியனெறியிற்பார்க்குப்பரம்பொருளென்னயார்க்கும்
இல்லையுண்டென்னநின்றவிடையினுக்கிடைக்கண்செய்தார்"

என்றார். இது

'....................கண்கொள்ளாநுடங்கிடையை
யுண்டெனத்தமர்மதிப்பர்நோக்கினர்பிறரெல்லா
முண்டிலையெனவையமல்லதொன்றுணர்விதே' (நாமகள்-கசரு)

என்பதுபற்றி வந்தது என்னலாம். இதன்கண் 'உண்டெனத்தமர் மதிப்பர்' என்பதுபற்றியே பின்னும் நாடவிட்டபடலத்தின்கண் சீராமபிரான் "தொட்டஎற்குணரலாமற் றுண்டேனுஞ் சொல்லுமி ல்லை" எனக்கூறியருளியதாகப் பாடினாரெனவுங்கருதலாம். இவ்

விரிடத்துஞ் சிந்தாமணியார் கருத்தே பயின்றதாயினும் கம்பர் சிந்தாமணியார் கூறியாங்கு 'உண்டு இல்லை யென வையம் உணர்வரிது' எனக் கூறியொழியாமல் "பல்விய னெறியிற்பார்க்கும் பரம்பொருளென்ன யார்க்கும் இல்லையுண்டென்ன நின்ற இடை" என்று மிகவும் அழகியதோருவமையினை முன்வைத்து இன்மையும் உண்மையுங் கூறுதல் காட்டியது எத்துணையேற்றமுடையதென்பது உய்த்துணர்ந்துகொள்க. பரம்பொருளை யெய்தியறிந்த சுவாநுபூதிமான்களுக்கே அதனுண்மை புலனும்; ஏனையோர்க்காகாது: அதுபோல இவளிடையும் தொட்டறிந்தவனுக் குணரலாமல்லது ஏனையோர்க்காகாது. இக்கருத்துப்பற்றியன்றே "தொட்டவெற்குணரலா" மென்று சீராமமூர்த்தி திருவாக்கில் வைத்ததூஉமென்க.

(தொடரும்.)

ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

உ

# உகாரவீற்று வினைப்பகுதி.

உகாரவீற்று வினைப்பகுதிகளை ஆராயும்போது அவையெல்லாம் குற்றுகரவீற்று வினைப்பகுதி எனவும், முற்றுகரவீற்று வினைப்பகுதி எனவும் இருவகை யாகின்றன. குற்றுகரவீற்று வினைப்பகுதிகளும் தொடர்வகையானே அறுவகையாகின்றன. முற்றுகரவீற்று வினைப்பகுதிகளும் தனிக்குறில் சார்ந்த வல்லொற்றின் மேல் வருமுகரவீறும், மெல்லொற்றிடையொற்றுக்களிலே வருமுகரவீறும்பற்றி இருவகையாகின்றன.

இந்த உகாரவீற்று வினைப்பகுதிகளெல்லாம் இடைநிலைகளோடும், விகுதிகளோடுஞ் சேர்ந்து எச்சங்களும் முற்றுகளுமாய் வரும்போது ஒரு நிகரனவாகாது பலவேறு வகைப்படுகின்றன. இப்பகுதிகளோடமைந்த இறந்தகாலப் பெயரெச்சங்களையும், முற்றுக்களையும் உற்று நோக்கும்போது எத்தனையோ பல இறந்த காலத்திற்குரிய பிற இடைநிலைகளின்றி "இன்" என்னும் இடைநிலை

யோடமைந்தனவாகக் காணப்படுகின்றன. அவற்றுள்ளுஞ் சில இகரச்சாரியையின்பின் தகரவிடைநிலையும் அமைந்தனவாகக் காணப்படுகின்றன.

## இன்னிடைநிலை.

| பகுதி. | எச்ச. | முற். |
|---|---|---|
| ஆடு | ஆடின | ஆடினான். |
| உருகு | உருகின | உருகினான். |
| நண்ணு | நண்ணின | நண்ணினான். |
| மேவு | மேவின | மேவினான். |

---

## தகரவிடை நிலை.

| | | |
|---|---|---|
| அரும்பு | அரும்பித்த | அரும்பித்தான். |
| தட்டு | தட்டித்த | தட்டித்தான். |
| அண்ணு | அண்ணித்த | அண்ணித்தான். |

இவற்றுள்ளே அரும்பித்த என்பது தேவாரத்திலே வருகின்றது. "அரும்பித்த செஞ்ஞாயிறேய்க்கு மடி" (தேவார, திருவதிகை வீர. ௪.) அரும்பு என்னும் பகுதியினின்றும் அரும்பின என்றன்றி அரும்பித்த எனவும் வருமென்பதனை "அரும்பித்து" எனவும், "தட்டித்து" எனவும் முறையே சித்தியாரிலுந் திரிகடுகத்திலும் வந்த வினையெச்சங்கள் நன்கு விளக்குவனவாகும். "அரும்பித்திந்தனத்தையனலழிப்பதுபோல்" (சித். ௧௧. ௧௨) "தட்டித்துப் பிச்சைபுக்குண்பான் பிளிற்றலும்" (திரிகடு. ௫௭) அரும்பித்து என வருதல் சித்தியார்க்கு உரைசெய்தார் யாவர்க்கும் ஒத்த கருத்தன்று. அரும்பித்து என வராதென்பாருமுளர்.

தனிக்குறில் சார்ந்த வல்லொற்றின்மேல் வரும் உகாரவீற்றுவினைப்பகுதிகளோடமைந்த இறந்தகாலப் பெயரெச்சங்களையும், முற்றுக்களையும் நோக்கும்போது பல அவ்வவ்வல்லொற்றிரட்டுதலாலே இறந்தகாலம் காட்டுவனவாகின்றன. போடு என்னுங் குற்றுகரவீற்று வினைப்பகுதியோடமைந்த முற்றெச்சங்களும் அவ்வியல்படைகின்றன.

| | | |
|---|---|---|
| நகு | நக்க | நக்கான். |
| அடு | அட்ட | அட்டான். |
| அறு | அற்ற | அற்றான். |
| போடு | போட்ட | போட்டான். |

இலக்கணவிளக்க நூலாசிரியர் நக்கான், அட்டான் முதலியவைகளிலே க், ட். முதலிய மெய்களே இடைநிலைகளாய் நின்று இறந்த காலம் காட்டும் என்பர். பகுதி பிரிந்துநின்றியையுமாறில்லை. புகு, அடு, அறு என்னும் பகுதிகளோடமைந்த இறந்த காலப்பெயரெச்சங்கள் புக்க, அட்ட, அற்ற எனவும், புகுந்த, அடுத்த, அறுத்த எனவும் இருவகையாகின்றன. அட்ட என்பதும் அடுத்த என்பதும் பகுதியால் ஒன்றேயாயினும் பொருளால் ஒன்றல்ல. அற்ற என்பதும் அறுத்த என்பதும் அங்ஙனமே. அற்ற என்பது செயப்படுபொருள் குன்றியது. மற்றையது குன்றாதது. உடு, எடு, வெறு முதலியன இடைநிலைகளோடும் விகுதிகளோடும் புணர்ந்து காலங் காட்டுவனவன்றி ஒற்றிரட்டுவனவல்ல. இங்ஙனமே இவையெல்லாம் முறை பிறழ்ந்து வருகின்றன.

நெடிற்றொடர்க்குற்றுகர வீற்றுப்பகுதிகளுள்ளும், உயிர்த்தொடர்க் குற்றுகரவீற்றுப் பகுதிகளுள்ளும் சில வல்லொற்றிரட்டிய மாத்திரையானே பிறவினைப்பகுதிகளாகின்றன.

பிறவினைப்பகுதி:

| | |
|---|---|
| போகு | போக்கு. |
| ஆடு | ஆட்டு |
| கூடு | கூட்டு. |
| தேறு | தேற்று. |

இவையே தொழிற் பெயர்களாயும் வழங்கப்படுகின்றன. அம்மட்டோ! சில வினைமுதற் பொருண்மை விளக்கும் பெயருமாகின்றன. சில செயப்படுபொருண்மை விளக்கும் பெயருமாகின்றன.

வினைமுதற்பொருண்மை.

| | |
|---|---|
| ஆடு | ஆட்டு. |
| மூசு | மூச்சு. |
| சூடு | சூட்டு. |

### செயப்படு பொருண்மை.

| | |
|---|---|
| பாடு | பாட்டு—பாடப்படுவது. |
| ஓது | ஓத்து—ஓதப்படுவது. |
| கூறு | கூற்று—கூறப்படுவது. |

போகு என்புழி கு என்பது சாரியை என்றும் போ என்பதே பகுதி என்றும் நச்சினார்க்கினியரும் பிறரும் கூறுவர். போகு என்பதே இயற்கைமுதனிலை என்று பரிமேலழகர் கூறுவர். ஆதுனிகர் சிலர் அண்ணு, அண்டு, அண்மு, அணவு என்பன போல போகு போ என்னும் இரண்டும் இயற்கை முதனிலை என்பர். சேதுபுராண காரர் போ என்பதனையே கொண்டார். "ஓவறு நெடுங்கணைக் கோதிடுஞ் சிறார், வாவெனு வரையயல் வருவர் தேருவர்—போவெனு யாரெமைப் போகென்றுரெனு" (சேது. கந்த. எஎ)

### உயிர்த்தொடர்

#### பிறவினைப்பகுதி.

| | |
|---|---|
| உருகு | உருக்கு. |
| வருடு | வருட்டு. |

#### வினைமுதற்பொருள்.

| | |
|---|---|
| பெருகு | பெருக்கு. |
| முறுகு | முறுக்கு. |

#### செயப்படுபொருண்மை.

| | |
|---|---|
| கருது | கருத்து—கருதப்படுவது. |
| எழுது | எழுத்து—எழுதப்படுவது. |

மென்றொடர்க்குற்றுகர வீற்றுப் பகுதிகளுள்ளும் சில மெல்லொற்றை வல்லொற்றாக்குதலாலே பிறவினைப்பகுதிகளும் பெயருமாகின்றன.

#### பிறவினைப்பகுதி.

| | |
|---|---|
| விளங்கு | விளக்கு. |
| மயங்கு | மயக்கு. |
| நீங்கு | நீக்கு. |
| மடங்கு | மடக்கு. |

இவைகளே தொழிற்பெயரும் பிற பெயருமாய் நிற்றலை இடநோக்கி இனிதுணர்க. ஏகு, ஊசு, ஊடு, கோது, சீறு, சூறு முதலிய நெடிற்றொடர்க்குற்றுகர வீற்றுப்பகுதிகளும், தங்கு, ஏங்கு, அஞ்சு, விஞ்சு, நந்து முதலிய மென்றொடர்க்குற்றுகரவீற்றுப்பகுதிகளும் எச்சமுற்றுக்களிலே விகாரப்படுவனவல்ல.

இவ்வாறே சில முற்றுகரவீற்று வினைப்பகுதிகளும் எச்ச முற்றுக்களிலே பற்பல விகாரமடைகின்றன. தழுவு என்னும் பகுதி வினையெச்சத்திலே தழுவி எனவும், தழீஇ எனவும், பெயரெச்சத்திலே தழுவின எனவும், தழீஇயின எனவும், முற்றிலே தழுவினான் எனவும் தழீஇயினான் எனவும் முடிக்கப்படுகின்றன. தழீஇ இரீஇ, உரீஇ என்பன சிலவிடத்திலே தன்வினையாகவும், சிலவிடத்திலே பிறவினையாகவும் வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்
விசுவாவசு ஞு கார்த்திகைமீ

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப் பிள்ளை.

---

# இராமாவதாரச் செய்யுட்பாடாந்தரம்.

(செந்தமிழ் தொகுதி-ங, பகுதி-கஉ, ருருகூ-ம் பக்கத்தொடர்ச்சி.)

## அகத்தியப்படலம்.

கரக்கருங் கடுந்தொழி லரக்கர் காய்தலிற்
பொரற்கிட மின்மையிற் புழுங்கிச் சோருந
ரரக்கரென் கடலிடை யாழ்கின் றாரொரு
மரக்கலம் பெற்றென மறுக்க நீங்கினார்.

என்னும் கூ-ம்செய்யுளில், 'அரக்கரென்கடலிடை' என்பது 'அரக்கருங்கடலிடை' எனக்காணப்படுகின்றது. முன் அரக்கரென வருதலானும், கடலினாழுகின்றவர் மரக்கலம்பெற்றாற்போல, இம்முனிவரும் இராமனைப்பெற்று மறுக்க நீங்கினாரெனப் பொருள்கொள்ளுமிடத்து, அரக்கராகிய கடல் என உருவகித்தல் வேண்டாமாகலானும், அரக்கர் காய்தலிற் சோருநர்எனக்கூறி

அரக்கரென் கடலிடையாழ்கின்றார் எனக்கூறல் சிறப்பின்றாமாகலானும் பின்னையதே பொருத்தமுடைத்து. அரக்கரும்—கடத்தற்கரிய.

இன்னும் கசு-ம் செய்யுளின் பின்னே,

"அருந்திற லுலகொரு மூன்று மாணையிற்
புரந்திடு தசமுகத் தொருவன் பொன்றிலாப்
பெருந்தவஞ் செய்தவன் பெற்ற மாட்சியால்
வருந்தினோம் நெடும்பகல் வரத யாமெலாம்.

தேவர்க டமைத்தினந் துரந்து மற்றவர்
தேவியர் தமைச்சிறைப் படுத்தித் திக்கெலாங்
கூவிடத் தடிந்தவர் செல்வங் கொண்டபோர்
மாவலித் தசமுகன் வலத்துக் கியார்வலார்.

அவன்வலி படைத்துமற் றரக்கர் யாவரும்
சிவன்முதன் மூவரைத் தேவர் சித்தரைப்
புவனியின் முனிவரை மற்றும் புங்கவ
ரெவரையுந் துரந்தன ரிறைவ வின்னுமே.

ஆயிர கோடியென் றுரைக்கு மண்டமேன்
மேயபோ ரரக்கரே மேவ லல்லதை
தூயசீ ரமரரென் றுரைக்குந் தொல்கணத்
தாயவ ரெங்ஙனென் றறிந்தி லோமையா.

வெள்ளியங் கிரியிடை விமலன் மேலைநாட்
கள்ளிய வரக்கரைக் கடிகி லேனென
வொள்ளிய வரமவர்க் குதவி னான்கடற்
பள்ளிகொள் பவன்பொரு திளைத்த பான்மையான்.

நான்முக னவர்க்குநன் மொழிகள் பேசியே
தானுறு செய்வினைத் தலையி னிற்கின்றான்
வானில்வெஞ் சுடர்முதல் வயங்கு கோளெலாம்
மேன்மையி லருஞ்சிறைப் பட்டு மீண்டுளார்."

என்னும் இச்செய்யுள்கள் காணப்படுகின்றன. "இந்திரனெனில்" எனப்பின் வருதலின் முன்னுஞ்சிலரைக் கூறியிருத்தல் வேண்டுமென்பது பெறப்படுதலானும், இராமனுக்கு இராவணனாற் றாம் வருந்துவது முனிவர் கூறல்வேண்டுமாகலானும் இச்செய்யுள்கள் பொருத்தமுடையனவே.

ஷை

உருளுடை நேமியா லுலகை யோம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ போக்கிலா
இருளுடை வைகலே மிரவி தோன்றினு
யருளுடை வீரநின் னபயம் யாமென்றார்.

என்னும் கசு-ம் செய்யுளில், 'இருளுடைவைகலேம்' என்பது 'இருளிடைவைகினேம்'எனக்காணப்படுகின்றது. 'இருளுடைவைகலேம்'என்பது பொருட்சிறப்பின்ருதலிற் பின்னையதே சிறப்புடைத்து.

ஷை

சொன்ன நான்முகன் றன்வழித் தோன்றினர்
முன்னை யோரு ளுயர்தவ முற்றினு
ருன்னின் யாருள ருன்னரு ளெய்திய
வென்னின் யாருள ரிற்பிறந் தாரென்ருன்.

என்னும் ௩0-ம் செய்யுளில் 'என்னின்யாருளரிற் பிறந்தாரென்ருன்' என்பது 'என்னின்யாருள ரிப்புவிமீதென்ருன்' எனக்காணப்படுகின்றது. 'இற்பிறந்தால்' என்பது பொருட்சிறப்பின்ருதலிற் பின்னையதேசிறப்புடைத்து.

ஷை

தூயகட னீரடிசி லுண்டது தூரந்தா
ணுயவக லாலமரு மெய்புடைய வன்ருன்
மாயவினை வாளவுணன் மாயவவன் வன்மைக்
காயமினி துண்டிலகி ஞரிடர் களைந்தான்.

என்னும் ௩அ-ம் செய்யுளில், 'மாயவினைவாளவுணன் மாயவவன் வன்மை' என்பது 'மாயவினைவாளவுணன் வாதவிதன் வன்மை' எனக்காணப்படுகின்றது. பெயர்வருலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

இன்னும் ருௗ-ம் செய்யுளின்பின்,

"என்றுபினு மாதவ னெடுத்தினி துரைப்பா
னன்றமரர் நாதனை யருஞ்சிறையில் வைத்தே
வென்றிதரு வேற்றச முகப்பதக ஞதி
வன்றிற லரக்கர்வலி மைக்குறிக ரியாரே.

ஆயவர்க டங்கள்குலம் வேரற மலைந்தே
தூயதவ வாணரொடு தொல்லமரர் தம்மை
நீதனி புரந்திடுத னின்கடன தென்றான்
நாயகனு நன்றெனவ வற்குநவில் கின்றான்.

என்னும் இச்செய்யுள்கள் காணப்படுகின்றன. இவைகளும் பொருத்தமுடையனவே.

## சடாயுகாண்படலம்.

எனப்பல நினைப்பின மனத்து ளெண்ணிவான்
சினப்படை வீரர்மேற் செல்லு மன்பினான்
கனப்படை வரிசிலைக் காளை நீர்களியார்
மனப்பட வெனக்குரை வழங்கு வீரென்றான்.

என்னும் கசு-ம் செய்யுளில், 'சினப்படை வீரர்மேற் செல்லுமன்பினால்' என்பது 'சினப்படைவீரரைத் தெளியுமன்பினால்' எனக்காணப்படுகின்றது. இவர்களை யாரென அறியும்விருப்பு அவனுக்கு உளதாதலின் 'வீரரைத்தெளியுமன்பினால்' என்பதே பொருத்தமுடைத்து. 'வரிசிலைக் காளைநீர்கள்யார்' என்பதும், 'வரிசிலைக்கரத்தர் நீங்கள்யார்' எனக்காணப்படுகின்றது. இதுவும் சிறப்புடைத்தாதல்காண்க.

ஷை

அல்லி றுத்தன தாடகை யாதியா
வில்லி றுத்த திடையென மேலைநாட்
புல்லி றுத்த தியாவும் புகன்றுதன்
சொல்லி றுத்தனன் றோன்றல்பின் றோன்றினோன்.

என்னும் சஅ-ம் செய்யுளில், 'அல்லிறுத்தன தாடகையாதியா - வில்லிறுத்த திடையென மேலைநாட் - புல்லிறுத்ததியாவும் புகன்று' என்பது, 'அல்லிறுத்தவன் றாடகையாதியா - வில்லிறுத்தங் கரிவையைமேலைநாட் - புல்றுறுத்ததியாவும் புகன்று' எனக்காணப்படுகின்றது. பொருள்கொள்ளுமிடத்து 'வில்லிறுத்த திடையென மேலைநாட் - புல்லிறுத்ததியாவும்' என்பது பொருத்தமின்றாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. பின்னையதற்கு வில்லைமுரித்துச் சீதையைக்கல்யாணஞ்செய்ததையும் பிறயாவற்றையும் புகன்று எனப்பொருள்கொள்க.

(இன்னும் வரும்.)

சி. கணேசையர்.

# செய்யுள்

—:o:—

(தொகுதி III, பகுதி 12, 460-ம்பக்கத் தொடர்ச்சி)

உலகம் பலவிதம். எது செய்வது தமக்கு எளிதோ அதை ஒவ்வொருவரும் அறிந்து செய்யவேண்டும். செய்வன திருந்தச் செய்யும் உபாயம் இதுவே. கவிகளும் தங்கள் தங்கள் திறத்துக்கேற்ப எளிதில்இயல்வதான பொருளையே தேர்ந்தறிந்துகொள்ளவேண்டும். எட்டாப் பழத்தைப் பார்த்துக் கொட்டாவி விடலாகாது. தங்களுடைய யூகையின் போக்குக் கேற்ற விஷயங்களைத் தெரிந்துகொள்ளுகிற கவிகளுக்கு வாக்குவல்லபமும் பொருட்டெளிவும் தாமே வந்தடையும். ஒவ்வொரு செய்யுளின் சாரமும் உருவமும் கமனசக்திக்கேற்பக் கவி தான் பாடும்படி எடுத்துக்கொள்ளும் பொருளினின்றே அங்குரிக்கின்றன. இந்த மர்மத்தை உணராமையால் ஒட்டக்கூத்தர் ஆறுமாதம் கஷ்டப்பட்டுப் பாடிய இராமாயணத்தின் ஆறுகாண்டங்களும் கிழிவுறுவனவாயின. பாடும்படியெடுத்துக் கொண்ட பொருளின் திறங்களும், கமனஞ் செய்கின்றவனுடைய கற்பனையும், தம்மிற் கலந்து சமரசப்பட்டபோது, பொருட்பொலிவும் சொற்பொலிவும் தாமாகவே புறப்படும். ஒட்டக்கூத்தர் ஆறுமாதமாக முக்கி முயன்று கொண்டிருக்கையில் கம்பர் ஒன்றுஞ் செய்யாமலிருந்த மர்மம் இதுவே.

கரு தரிக்கின்ற காலத்தில் தாய் தந்தையர்களுடைய தேக நிலைமைக்கும் மன நிலைமைக்கும் அவர்கள் உட்கொள்ளும் உண்டி வகைகளுக்கும் ஏற்றவிதமான உருவத்துடன் பிள்ளை பிறப்பதல்லது, தாய் தந்தையர் விரும்புதலான உருவத்துடனே பிறப்பதில்லை. சகோதரர்கள் தம்மில் தேகக்கூறும் முகத்தின் சாயலும் வேறுபடுதலான காரணமும் இதுவே. கவியின் கிராஹ்ய சக்திக்கும் பாடும்படியெடுத்துக்கொண்ட பொருளின் திறத்துக்கும் கவியின்கமனசக்திக்கும் தற்காலத்தில் கவியின் மனநிலைக்கும் ஏற்றவாறான உருவத்துடன் செய்யுள் புறப்படுவதன்றிக் கவிதான் முன்னதாக வெண்பாவாற்பாடவேண்டும் கலிப்பாவாற்பாடவேண்டும் என்று நியமித்துக்கொண்டவாறு புறப்படுவதில்லை. நீளமான அகவற்பாவால் ஒரு

நூலுக்குச் சாத்துக்கவி சொல்லவேண்டுமென்று உட்கார்ந்த கவிராயர்கள் எத்தனைபேர் ஒரே வெண்பாவுடன் எழுந்திருப்பதைக் காண்கிறோம். கோச்சகத்தாற் சரமகவி பாட உட்கார்ந்தவர் எத்தனை கவிராயர்கள் ஆசிரிய விருத்தத்துடன் எழுவதையுங்காண்கிறோம். புகழேந்திக்கு வெண்பாவும் கம்பருக்கு விருத்தமுமாகப் பாக்கள் புறப்படுவது அவரவருடைய விருப்பமன்று.

உரிய காலத்தில் கரு தரித்தாலும், கருவானது கர்ப்பாசயத்தில் முதலில் பிண்டாகிருதியாக ஊறி வளர்ந்து, தாயினுடலிலிருந்து சாரத்தைக் கிரகித்து, நாளடைவில் அவயவங்கள் பூரணமாகி, பத்து மாதம் நிறைந்த பிறகே சிசுவாக உதிக்கின்றது. பத்து மாதமும் நிறைவதற்கு முன்னே உதித்தலான பிள்ளைகள் உடலுரம் பெற்று நீடு வாழ்வது அருமை. உதித்தலான காலத்தில் உதிக்கவொட்டாமல் தடைநேர்வதும் சிசுவின் அங்க லக்ஷணம் அழிவதற்குக் காரணமாகும். கவி தான் உட்கொள்ளும் பொருளும், முதலில் பிண்டாகிருதியாகவே மனத்தில் ஊறியிருந்து சாரம் பெற்று வளர்ந்து நாளடைவில் தனது திறத்துக்கும் மனத்திட்பத்துக்கும் ஏற்றவாறாக உருவும் அழகும் நிறைந்து செய்யுளாக உதிக்கும். உதிக்கின்ற காலத்தில் கவியானவன் அதனை ஏட்டில் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுவாக உதிப்பதற்கு முன்னே அவசரப்பட்டாலும் அது சீர்கெட்டு அழிவதாகும். அதுவாக உதிக்கின்ற சமயத்தில் அதனை ஏட்டில் ஏந்திக்கொள்ளாமல் காலதாமதம் பண்ணினாலும் அதன் அருமையும் பெருமையும் குலைந்து போகும். உதிக்கின்ற சமயமறிந்து, பெற்றதனால்தான் கம்பராமாயணம் அழகும் ஆயுளும் பெறுவதாயிற்று. அறுசுவைப் பண்டமும் நீரும் தீயின்வெப்பத்தால் கொதித்துக் கலந்து சமரசப்படுகின்ற சமயத்தில் குப்புகை யெழுப்பி இறக்கிவிட்டால் அட்ட உண்டியானது அருந்துவோர்க்கு இன்பந் தருகின்றது. சமரசப்படுவதற்கு முன்னே இறக்கி விட்டாலும் பின்னே இறக்கினாலும், அவ்வுண்டி பதங்கெட்டுப் பாழாய் விடுகின்றது. தாங்கள் சமைக்கும் கவியமுதைக் கவிகள் பதம்பார்த்து ஏட்டில் இறக்கிக்கொள்ளவேண்டும். கருக்காயும் உண்ண இயைவதன்று: பக்குவம் முதிர்ந்த பழமும் உண்ண இயைவதன்று. பருவகாலத்தில்

கவியின் மனத்திலிருந்து தானுக் கனிந்து விழுகின்ற பழமே உண்ணவுண்ணத் தெவிட்டாது பின்னும் உண்ணுதலானவிருப்பத்தை எழுவிப்பதாகும்.

கமனஞ் செய்வதில் கவிகள் கருதியிருக்கும் நோக்கம் யாது; கருக்கொண்டவள் கரு முதிர்ந்த அளவிலே கருவுயிர்ப்பது இயற்கை. அவள் யாதொரு நோக்கத்தோடு கருவுயிர்க்கிறாள் என்பதில்லை: கருக்காய் முதிர்ந்து கனிந்த கனியானது தானே உதிர்வதல்லது யாதொருநிமித்தங் கருதி உதிர்வதில்லை. கவியின் மனத்தை இடங்கொண்ட பொருளானது, கவி கற்பனையால் கனிதலான போது, கவிதாரூபமாகத் தானே உதிர்வதல்லது யாதொரு நோக்கத்துடனே உதிர்கின்றதென்பதில்லை. இது தனிப்பாடல்களின் திறத்திலுள்ளபடி. தனிப்பாடல்களிலும் சிறுகாப்பியமான பிரபந்தங்களிலும், கவியானவன் கருத்திற்கொண்ட பொருளில் துவக்குண்டு, அதன் வயத்தனாய் அதுவே நோக்கமாய் அப்பொருளின் திறத்தில் தனக்குக் கட்புலனான உண்மைகளும் விசேஷ அம்சங்களும் கற்பனையால் கற்பிதமான உருவத்துடன் கவிதையைக் கருவுயிர்ப்பதன்றித் தான் யாதொரு நோக்கத்துடன் கமனஞ் செய்வதில்லை. கருத்திற் கொண்ட பொருளின் காட்சியே மனத்தைக்கவர்தலால், அந்தக்காட்சியாலும் அது கவிதாரூபமாகப் புறப்படுகின்ற விதத்தாலும் ஜனித்து நிறைதலான ஆனந்தமானது, அவன் மனத்தில் வேறு நோக்கங்கள் பிரவேசிப்பதற்கு இடங்கொடாது. ஆயினும் அந்த ஆனந்தமானது, நீடித்திருக்காது. தொடர்நிலைச் செய்யுளானகாவியங்களைக் கமனஞ்செய்யுப்போது அவ்வானந்தமேலீட்டின் கொதிப்பானது சிறிது சிறிது தணிதலுறும். அந்த ஆனந்தம் முற்றுந்தணியாமல் நீடுதல் வேண்டின விடத்து, யாதொரு நோக்கமுமின்றி அதனை நீட்டித்தல் இயலாது. பெருங்காப்பியத்தைக் கமனஞ் செய்பவன் தன் காவியமானது கல்விமான்களுக்கு வித்தியா விநோதமாக இருக்கும் என்கிற அவ்வளவிலே அமைவு கொள்ளான். மானுடப்பிரகுர்தியை மேம்படுத்தத் தக்கனவென்று தான் பிரத்தியக்ஷ அனுபவத்தில் கண்ட நற்குணநல்லொழுக்கங்களை சுரோதாக்களிடத்திலே தனது காப்பியம் எழுவிக்க வேண்டும் என்கின்ற நோக்கம் உண்டாவது ஒருதலை. இம்

மை நலங்களையே பெரிதாகக் கொண்டு அவற்றில் ஈடுபட்டழிகின்ற மன்னுயிர்களை உய்விக்குமாறு உலக நிலையாமை, யாக்கைநிலையாமை, செல்வநிலையாமை முதலியவற்றைக்காட்டி உலகமாயையினால் மறைவுண்டிருக்கும் ஆன்ம விசேஷங்களை விளக்கி உலகில் எளியாரை வலியார் நலியாமல் எல்லோரும் அறத்தாற்றிற் பொருளீட்டி இன்பநுகர்ந்து வீடடையுமாறு ஹிதோபதேசஞ் செய்வதே உத்தம கவிகளின் உள்ள நோக்கமாகும். இஃது எம்மதத்தினர்க்கும் சம்மதமான நோக்கமே. ஆகவே இவ்வளவில் மகாகவிகளுடைய காவியங்களானவை முப்பாலாம், மிருதியாம், மதரஹஸ்யமாம், பதிசாத்திரமாம், உள்ளதை உரைக்குமிடத்தில் எல்லாருடைய வேதாந்தமுமாம். 'அறம்பொருளின்பம் வீடடைதனூற் பயனே" யாகையால் சுரோதாக்கள் கவிநோக்கத்தை நிறைவுறுத்துவதே பயனும்.

நெடுங்காலம் கர்ணபரம்பரையாக வழங்கி வந்த ஹோமருடைய காவியம் பின்னால் கையெழுத்துப் பிரதி செய்யப்பெற்று, இப்பொழுது யூரோப்பிய பாஷைகள் ஒவ்வொன்றினும் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கி வருகின்றது. ஷேக்ஸ்பியருடைய காலத்தில் எவரும் கவனிக்காத அவருடைய நாடகங்களைப் பின்னால் இங்கிலீஷ் புலவர்கள் எவ்வெவ்விடங்களில் தேடித்துருவிக் கண்டுபிடித்தார்கள். இந்தியாவில் படையெடுத்துவந்த முகம்மதியர் ஹிந்துமத நூல்களைத் தேடித் தீயடுத்து வந்த காலத்தில் இராமாநுஜருடைய ஸ்ரீ பாஷ்யத்தை வேதாந்ததேசிகர் தமது உயிரையும் பொருட்டு செய்யாமல் காப்பாற்றி வைத்தனர். தொல்காப்பியரிருந்த காலம் இறந்தகாலமாகியும் அவரிலக்கணம் நிகழ்காலத்ததாய் இன்னும் எதிர்காலத்தையும் நோக்கியிருக்கின்றதன்றோ. எங்களுக்குரியது எங்களுக்குரியது என்று அவரவர்கள் மன்றாடுவதற்கிடமான திருக்குறள் ஆயிரத்துத் தொள்ளாயிர வருடமாக எஞ்சியிருக்கின்றது. எத்தனையோ வருஷங்களுக்கு முன்னே எத்தனையோ கவிகள் ஏதோ ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் சொல்லிய தனிப்பாடல்கள் உருமாறியாயினும் இன்னும் உயிர் வைத்திருக்கின்றன. சேக்கிழார் பெரியபுராணத்தைப் பாடிக்கொடுத்தும் சைவப்புலவர்கள் சீவகசிந்தாமணியை மறந்துவிடவில்லை. எத்தனை ஆபத்துக்கள் நேரிட்டாலும் சத்துடைய பொருள்

கள் எவ்விடத்தாயினும் உயிர் வைத்துக்கொண்டு உய்ந்திருக்கும். சத்தில்லாத செய்யுள்கள் பூவிலும் பிஞ்சிலும் அழிவுறும். உத்தம கவிகளுடைய உரனுடைப் பழம்பாடல்கள் எவ்விடத்திலாயினும் உயிர்பெற்றிருந்து உரியகாலத்தில் உலகத்துலாவுவனவாகும். "மலரவன்செய், வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு, மற்றிவர் செய்யு முடம்பு". இந்த உறுதியாலல்லவோ ஒளவையார் "என்றுங் கிழியாதென் பாட்டு" என்றனர். "மனிதர்க்கு வயது நூறல்லதில்லை"; அரியநூல்களுக்கு ஆயுள் வரையறையில்லை. காற்றும் மழையும் கலந்தடித்தாலும் அவைகரைவதில்லை. காற்றும் நெருப்புங் கலந்துவீசினுலும் அவை கரிந்துபோவதில்லை. எவ்வளவு காலமாகுலும் அவை யென்றும்சிரஞ்ஜீவிகளாகவே இருக்கும்.

தேவசிருஷ்டியில் உலகவியற்கையும் இயற்கை விநோதங்களும் யாண்டும் எக்காலத்தும் ஒருதன்மையனவே. ஆதலின் அவ்வத்தேயத்தில் ஆதிகவிகள் உலகவியற்கையையும் இயற்கை விநோதங்களையும் தங்கள் செய்யுளிற் பிரதிபிம்பித்துக் காட்டிவிட்டமையால் ஆதிகவிகளே சிறப்பெய்துகின்றனர். பிற்காலத்துக்கவிகள் அங்ஙனம் சிறப்பெய்துவதற்கான அநுகூலங்கள் இல்லை எனச் சிலர் கருதுவர். காலத்துக்குக்காலம் மனிதருடையபாவனை கருத்தின்போக்கு முதலியன காலரீதிக் கேற்றவாறு மாறுபட்டுச் செல்வதே உலகசரித்திரத்தை அறிந்தவர்கள் உணர்ந்தபடி. தொழின் முயற்சிகளிலும் உலக நடவடிக்கைகளிலும் மதக்கோட்பாடுகளிலும் பரஸ்பர சம்பந்தங்களிலும் தமிழருடைய மனப்போக்கு தமிழரசர் காலத்திருந்தவாறு முகம்மதியஅரசர் காலத்திருந்ததில்லை. முகம்மதியர் காலத்தில் இருந்த மனப்போக்கு இப்பொழுது இங்கிலீஷ் அரசாட்சியில் எவ்வளவோ மாறுபட்டிருக்கின்றது. ஆகவே உலகவியற்கையும் இயற்கை விநோதங்களும் எக்காலத்திலும் ஒருதன்மையனவேயாயினும் அவற்றின் கூறுபாடுகளை நுனித்தறியும் நோக்கமும் அவற்றைக்கிரகிக்கும் விதமும் கற்பனுசக்தியால் அவற்றைக் கவியிலமைக்கிற விதப்பும் காலத்துக்குக்காலம் வேறுபட்டேவரும். உத்தமகவிகளின்செய்யுளை ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை விளங்கும். ஆகவே எக்காலத்திலும் பாட்டிலமைப்பதற்கு நவநவமான பாவங்களுக்கும் குறைவில்

லே. அங்ஙனம் அவைகளை அறிந்து கவியிலமைக்கும் கவிராயர்கள் அடையும் பெருமைக்குங் குறைவில்லை. தமிழிற் பிற்றைநாட் புலவரில் சிவப்பிரகாசரும் மீனாட்சிசுந்தரம்பிள்ளையும் உத்தம கவிகள் அல்லரென்பார் உளரோ? ஐம்பெருங்காவியங்களுக்குப் பிற்பட்டும் கம்பராமாயணம் அவற்றினும் மேன்மையடையவில்லையா? உத்தமகவிகள் ஒவ்வோர் காலத்தில்வால்நட்சத்திரம்போல்தோன்றிமறைபவர்.

உத்தரதுருவமுதல் தக்ஷிணதுருவம் வரையிலும் மானுஷீகம் ஒரு தன்மையதேயாகும். ஆயினும் அவ்வத்தேயத்தின் இயற்கையமைப்பினுக்கும் துரைத்தன ரீதிக்கும் தொழிற்றுறைகளுக்கும் இவற்றால் உருப்படும் நாகரீக நிலைமைக்கும் ஏற்றவாறாக மனித சாதிகளின் மனநிலை தேயத்துக்குத் தேயம் வேறுபடுகின்றது. அம்மனநிலைக்கேற்ப அவ்வத்தேயத்தினர் தங்களில் பொதுவாக ஒழுக்கமென்பதே ஒழுக்கம், நன்மை என்பதே நன்மை, தீமை என்பதே தீமை. எத்தேயத்திலும் வெகுசன வாக்யம் கர்த்தவ்யம். ஒரு தேயத்து மஹாசனங்கள் அனைவரும் ஒருவிஷயத்தில் ஒருங்கே கொள்ளுங் கருத்தானது தகுதியும் திட்பமும் உள்ளதாகவே இருக்கும். சிற்சிலர் ஒருதலைச்சார்பாலும் பொறாமையாலும் தத்தம் நலத்தைப் பாராட்டுவதாலும் அவ்விஷயத்தைப்பற்றிக் கொள்ளுதலான அபிப்பிராய பேதமானது பொதுசன அபிப்பிராயத்தை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. ‘உயரவுயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா’? கட்சிபேதத்தை அனுசரித்தவர்களும், கட்சிபேதத்தை மேற்கொண்ட பத்திரிகைகளும், ஒரு நூலை உயர்த்திப்பேசுவதனாலும், தாழ்த்திப் பேசுவதனாலும், அந்நூல் சிரஞ்ஜீவியாக வாழும், அல்லது பிறந்தபோதே அழிந்துபோகும் என்பதில்லை. பொதுசனங்கள் அதன் திறத்திற்கொள்ளும் பொதுவான அபிப்பிராயமே அது நீடூழி வாழ்வதற்கும் நிமிஷநேரத்தில் நிலைகுலைவதற்குங் காரணமாகும். பொதுஜனங்களுடைய அபிப்பிராயத்தில் ஒருகுறைவு உண்டு. அஃதாவது இன்னகாரணத்தால் இதனை அங்கீகரிக்கிறோம், இன்னகாரணத்தால் இதனைத் திரஸ்கரிக்கிறோம் என்று சொல்லிப் பொதுஜனங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுவதில்லை. அதனைக் கண்டவளவில் உளதாகும் மனநிலையை அனுசரித்து, இது நமக்கு ஆகும் அல்லது

இது நமக்கு ஆகாது என்பதே பொதுஜனங்கள் சுருக்கமாகச் சொல்லிவிடுகிற தீர்மானம். இந்தத் தீர்மானம் தப்பெண்ணத்தினாலும் அறியாமையாலும் உண்டாயினும் உண்டாகலாம். எவ்விதத்தில் உண்டாவதாயினும் பொதுஜனங்கள் தாங்கள்கொண்ட அபிப்பிராயத்தையே பிரமாணமாகக் கொள்வர். ஆயினும் பொதுஜனங்கள் பொறாமை முதலிய துர்க்குணங்கொண்டு தங்கள் அபிப்பிராயத்தை உரைத்தலான நிமித்தம் இல்லாமையால் அவர்களுடைய தீர்மானம் எவ்விடத்தும் எக்காலத்தும் அக்கிரமமாவதில்லை. ஆகவே பொதுஜன அங்கீகாரம் பெற்ற செய்யுள்கள் அவ்வத்தேயத்தில் நிலைபெற்று நிலையும் என்பது நிச்சயம்.

ஒரு மருத்துவனுடைய கீர்த்தியைக் கேட்டபிறகே ஒருவர் அவனிடம் நம்பிக்கை வைத்து அவனிடம் மருத்துவம் செய்துகொள்ளப் புகுவர். ஒரு வர்த்தகன் நல்ல சரக்குகளை நாணயமாக விற்பவன் என்றறிந்தபிறகே பலர் அவனிடம் சரக்குக்கொள்ளலாவர். ஒருவன் நட்புக்குரியான் என்பதை ஆராய்ந்தறிந்த பின்னரே அவனோடு தக்கவர் நட்புக்கொள்வர். பொருட்பொலிவுள்ளன என்றும் புலவர் போற்றத்தக்கன என்றும் பொதுஜன அங்கீகாரத்தால் காலாந்தரத்தில் கீர்த்திபெற்ற பின்னரோ உத்தமகவிகளின் செய்யுள்களைக் கல்விமான்கள் பாராயணம் செய்வர். காலங்கண்ட கவிகளின் செய்யுள்களானவை, கல்வியும் நல்லொழுக்கமுமுள்ள பெரியோர் வார்த்தைபோலே, அவற்றைப்படிப்பவர் மனத்தைத் திருந்தப்பண்ணும். கல்லானது உளியால் அழகிய உருவெய்துமாறுபோலே, மனமானது அவர்கள் செய்யுளால் உருவெய்தும். நன்றாக அட்ட அடிசில் சுவையும் உடலுக்குரமும் தருவதுபோலே, உத்தமகாவியங்கள் இன்பமும் மனத்துக்கு வலிமையும் தருகின்றன. பரிசனவேதி பட்டமாத்திரத்தில் இரும்பு தன்னியல்புமாறிப் பொன்னாகுமென்ப. நல்லகவிகளுடைய வாடை வீசினமாத்திரத்தில் புல்லொழுக்கம் அறவே மாறி நல்லொழுக்கம் உண்டாகும்.

முற்றிற்று.

தி. செல்வக்கேசவராயன்.

கணபதிதுணை.

## மகாகவியாகிய வில்லிபுத்தூராழ்வார்

## இயற்றிய

# மகாபாரதச்செய்யுட் பாடாந்தரம்.

---

[மகாகவியாகிய வில்லிபுத்தூராழ்வாரியற்றிய ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தை, இத்தமிழ்ச் சங்கத்திற்குத் தமிழ்நாட்டிற் பலவிடங்களிலுமிருந்து வந்த பதினைந்து பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து, இதற்குமுன்னுள்ள அச்சுப்பிரதிகளிற் காணப்படும் வழூக்களைந்து பாடபேதங்களைச் சேர்த்து அரும்பதவுரையுடன் அச்சிடுவித்துத் தமிழாய்வோர்க்குபகாரமாகும் வண்ணம் புரியவேண்டுமென்று சங்கத்தின் அக்கிராசனாதிபதியும் விவேகவிதரணசிந்தாமணியும் ஆகிய பாலவனத்தம் ஜமீந்தார் ஸ்ரீமாந்-பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள் நியமித்தவண்ணம் எனது சிற்றறிவாலியன்றமட்டும் பரிசோதித்தச்சிடுவித்து வருகின்றேன். இப்பொழுது பத்தாம்போர்ச்சருக்கம் அச்சுப்பதிப்பாகிவருகின்றது. பலவழூக்களும் பலபாடபேதங்களுங் காணப்படினும் அவற்றில் முக்கியமானவற்றைமட்டும் இச்செந்தமிழ்வாயிலாக வெளியிடத்தொடங்கினேன். இங்ஙனம்-ரா-சுப்பிரமணியக்கவிராயர்.]

## சிறப்புப்பாயிரம்.

அகத்தியன் பயந்தசெஞ்சொலாரணங்கம்புயாதன்
முகத்தினில்வாழுமந்தமொய்குழலருளினாலே
பகைத்தெதிர்பொருததெய்வப்பாரதசதையிம்முந்நீர்ச்
செகத்தினில்விருத்தயாப்பாற்செய்கெனச்செய்ததன்றே.

என்னும் ௨-ம்செய்யுளில் 'அம்புயாதன்' என்பது 'அம்புசாதன்' எனக் காணப்படுகின்றது. அம்புசாதம் - தாமரை. அம்புசாதன் - தாமரையிலுள்ளவன்; பிரமன். "எட்டேயவ்வும்" என்றவிதிப்படி அம்புசாதம் என்பது அம்புயாதம் எனத்திரிந்துவருமேனும் அவ்வாறு வழங்குதலின்மையா

ன் 'அம்புசாதன்' என்றபாடமே சிறப்புடைத்தென்க. பின் வாரணாவத ச்சருக்கம் கூக-ம் செய்யுளில், பங்கசாதம் எனக்கூறுதல்காண்க.

இச்சிறப்புப்பாயிரத்தினீற்றில்

கலியுகவியாதன்சொல்லக்கணபதியெழுதுபாடல்
பொலிவுறுதமிழினுருயிரமெனவிருத்தம்போற்றிச்
சலிவறுவில்லிபுத்தூரிறைவனுஞ்சார்வபூம
ணெலிகெழுமறையோர்கோமானுயர்ந்தவருவப்பச்சொன்னான்.

என்னுமிச்செய்யுள் பலபிரதிகளிலுங் காணப்படுகின்றது. இதனால் பாரதம் பதினெட்டுப் பருவத்தையும் இவர் பாடினரென்பது பெறப்படுகின்றது. ஆயினும் இதுவரை கிடைத்த எட்டுப்பிரதிகளிலெல்லாம் பத்துப்பருவமட்டும் காணப்படுகின்றன.

## ஆதிபருவம்.

### குருகுலச்சருக்கம்.

பொருபெரும்படைத்தொழில்வயப்புரவிதேர்மதமா
மருவருந்தொழின்மன்னர்நீதியின்றொழில்வளங்கூர்
சுருதியின்றொழின்முதலியதொழிலனைத்தினுக்குங்
குருவெனும்புகழ்க்குருவுமக்குலத்திலங்குதித்தான்.

என்னும் நக-ம் செய்யுளில் 'அக்குலத்திலங்குதித்தான்' என்பது 'அக்குலத்திலங்குரித்தான்' எனக் காணப்படுகின்றது. அங்குரித்தல் - முளைத்தல். அங்குதித்தான் என்பதில் அங்கு என்பதை அவ்விடம் என்றாவது அசையென்றாவது பொருள்கொள்ளுதல் பொருத்தமின்மையின் அங்குரித்தானென்பதே பொருத்தமுடைத்தென்க.

௵

அந்தணன்மரபினிலமுதவெண்டிரைச்
சிந்துவின்மிசைவருதிங்களாமெனச்
சந்தனுவெனும்பெயர்த்தரணிகாவலன்
வந்தனனவன்செயன்மகிழ்ந்துகேண்மினோ.

என்னும் நரு-ம் செய்யுளில் 'மகிழ்ந்துகேண்மினோ' என்பது 'வகுத்துக்கூறுவாம்' எனக்காணப்படுகின்றது. இச்சந்தனுவுக்கு முற்பட்ட அரசர்களின் சரிதத்தைத் தொகுத்துக்கூறிவந்தவர் இவ்வரசன் சரிதத்தை விரித்

கூறுகின்றாராதலின் 'வகுத்துக்கூறுவாம்' என்பதே பொருத்தமுடைத்து. 'கேண்மின்' என்றதற்கு எழுவாய் இன்மையுமுணர்க.

ஷை

நாணினளொதுங்கினணதிமடந்தையும்
பூணுறுமுலைமுகம்பொருந்தநோக்கினள்
சேணுறுதனதுமெய்த்தேசுபோனகை
வாணிலவெழச்சிலவாய்மைகூறுவாள்.

என்னும் சஉ-ம் செய்யுளில் "நாணினளொதுங்கினணதிமடந்தையும்" என்பது 'நாணினளாமெனநதிமடந்தையும்' எனக்காணப்படுகின்றது. பிரமனுணையில் பூர்வசன்மநினைவுடனே புவியில்வந்து சந்தனுவைக்கண்டுரையாடிச் சேர்தலின் ஏனைமாதர்போல அகத்தேநாணமின்றிப் புறத்தே விளங்கக் காட்டினளென்பார் 'நாணினளாமென' என்றார். ஆதலால் 'நாணினளொதுங்கினள்' என்பதினும் 'நாணினளாமென' என்பதுசிறப்புடைத்தென்க.

ஷை

காசிமன்னவன்கன்னியர்மூவருந்
தேசின்மிக்கவர்ச்சேர்வதென்றுள்விட
மாசில்தொல்குலமன்னவரீண்டினார்
மூசிவண்டினமொய்ப்பதுபோலவே.

என்னும் கசஎ-ம் செய்யுளில் 'சேர்வதென்றுள்விட' என்பது 'சேர்வரென்றுள்விட' எனக்காணப்படுகின்றது. 'மூவரும்' என்ற எழுவாய்க்கு 'சேர்வது' என்பது இயையாமையால் 'சேர்வர்' என்னும் பயனிலைகொடுத்து முடித்தலே பொருத்தமுடைத்தென்க.

## சம்பவச்சருக்கம்.

பராசரன்றருமுனிநினைவொடுகருப்பதித்துமீளவுஞ்சென்று
நிராசைநெஞ்சினனவசரத்தவளிடைநிகழ்ந்தமெய்க்குறிதன்னுற்
கராசலம்பதினுயிரம்பெறுவலிக்காயமொன்றினிற்பொற்றோ
ளிராசகுஞ்சரம்பிறந்திடும்விழிப்புலனில்லைமற்றதற்கென்றான்.

என்னும் கஈ-ம் செய்யுளில் 'பெறுவலிக்காயமொன்றினிற்பொற்றோளிராசகுஞ்சரம்' என்பது 'பெறுவலிகாயமொன்றினிற்பெற்றோரிராசகுஞ்சரம்' எனக்காணப்படுகின்றது. முன்னையதில் 'காயமொன்றினில்' என்பதை 'காயமொன்றோடு' எனஉருபுதிரித்திடர்ப்பட்டுப் பொருள்கொள்ளவேண்

டியிருத்தலின், வலியை ஒருகாயத்திற்பெற்று ஓரிராசகுஞ்சரம் பிறந்திடும் என நேராகப் பொருள்படும் பின்னையபாடமே சிறப்புடைத்தென்க.

ஆனதிக்கிருநாலும்வந்தடிதொழவம்பிகைமகன்றன்னை
வானதித்திருமகனொருதினத்தினின்மங்கலமுடிசூட்டிப்
பானிறப்பெரும்பாண்டுவேசேனையின்பதிமுழுமதிமிக்க
கானிறத்தொடைவிதுரனேயமைச்சனிக்காவலற்கெனவைத்தான்.

என்னும் உஉ-ம் செய்யுளில் 'பானிறப்பெரும்பாண்டு' என்பது 'பானிறத்திறற்பாண்டு' எனக்காணப்படுகின்றது. பாண்டுவைச் 'சேனையின்பதி' எனக்கூறலால் அதற்கேற்பத் 'திறற்பாண்டு' என்பதே பொருத்தமுடைத்தென்க. 'பெரும்பாண்டு' என்பது சொன்னயமும்பொருணயமுமின்றி நிற்றல்காண்க.

ஷை

வாரியினதிர்ந்துவிம்முமங்கலமுழவமேன்மே
லோரியின்குரலாலோதையடங்கினவிடங்கடோறும்
பாரியகுலத்தோர்கண்ணினுவகைநீர்பனிக்குமுன்னே
சோரியந்தரத்தினின்றுஞ்சொரிந்ததுசோனைமேகம்.

என்னும் எகூ-ம் செய்யுளில் 'ஓதையடங்கின' என்பது 'ஓதையொடுங்கின' எனக்காணப்படுகின்றது. மோனைச்சிறப்புடைமையின் 'ஒடுங்கின' என்பது சிறப்புடைத்தென்க.

கொஞ்சுகிளியன்னமொழிகுமுதவிதழமுதா
லெஞ்சினனராதிபதியீதெனவியப்போ
வஞ்சுதருதீவினையினாலமுதுநஞ்சா
நஞ்சுமமுதாமுரியநல்வினையினாதோ.

என்னும் கoo-ம் செய்யுளில் 'தீவினையினாலமுதும்' என்பது 'தீவினையினாரமுதும்' எனக்காணப்படுகின்றது. 'தீவினையினாலமுதும்' என்பதில் இன் - சாரியை. ஆல் - மூன்றனுருபு. 'தீவினையினாரமுதும்' என்பதில் இன் - ஐந்தனுருபு; ஆரமுது - அரியஅமுதம். இவற்றில் முன்னையதினும் பின்னையதே சிறப்புடைத்து. இதற்கேற்ப ஈற்றடியில் 'நல்வினையின்' எனக்கூறியிருத்தலுங் காண்க.

(இன்னும் வரும்.)

சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயர்.

# நூலாராய்ச்சி.

(முன்தொடர்ச்சி சுருு-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

தம்மறிவைக்கடந்த விஷயங்களில் மாந்தர்க்கு வரம்பின்றி விளையும் வியப்பேயன்றித், தொன்னூல்கள்மாட்டுப் பத்தி முதிர்தற்கு மற்றோர் ஏதுவுமுண்டு. காசியம்பதியைக்கண்டறியானுக்கு, அதைச் சென்று கண்டவன், அவ்வூர் அதிசயங்களையும் விசேஷ காட்சிகளையும் விரித்துரைக்க வல்லனாயிருத்தலும், நவநவமான விந்தைகளைச் செவியுற்றவன், கண்ணூற்றுவந்து கழறியோன் பாட்டு நன்றியறிவும் விசுவாசமும் பாராட்டி அவனைப்பெரிது மதித்தலும் இயல்பேயாம்; அந்நகரைப் பின்னுறக்கண்ட வேறொருவன், முன்னோனளவு புதிய சமாசாரங்கள் கூறவேலாமையும் வியப்பன்றாம்; ஆயின், முன்னோனது பேரறிவும் மிக்குரையும் அவன் முதற்கண் சென்று கண்டமையான் நிகழ்ந்தனவேயன்றி, அவனைப் பின்னோனினும் கூரறிவினனாக நிரூபிக்கமாட்டா என்பதும், முன்னோன் கூற்றிலுள்ள வழுக்களையும் விபரீதங்களையும் பின்னோன் தன்னுரையாற் சீர்திருத்தித் தரக்கூடுமென்பதும் எளிதிற் புலப்படும். இவ்வுண்மையைத் தொன்னூல்களின் விஷயத்திற் பொருத்தி நோக்குங்கால், அந்நூல்கள், தாம் கூறும் விஷயங்களில் முதனூல்களாயிருக்கின்றமையும், அதனால் நம்மதிப்பைக் கைக்கொண்டு தலைமைபெற்று விளங்குகின்றமையும் வெளியாவதுமன்றி, அந்நூலாசிரியர், முற்றுமுணர்ந்த தேவாம்சங்களாகக் கருதப்படுதலின்காரணமும் பகிரங்கமாகும். இந்நுண்மையை அறிந்து, முதன்மைச் சிறப்பினாற் பன்னூறு ஆண்டுகளாக வளர்ந்தேறி இப்பொழுது ஒளிமலைபோற் காண்போர் கண்கூச விளங்கும் பெரும்புகழை உள்ளவாறு மதித்து, முன்னூலாயினும் பின்னூலாயினும் தான் பொதிந்துகொண்ட மெய்ப்பொருளானன்றி முதன்மையான் மாத்திரம் சிறப்புறற்குரியதன்றென்பதைக் கைப்பிடித்து, எவ்வளவோ பேரறிவுடையாரும் மக்கட்பிறப்பினரது வரம்பிட்ட மதிச்சிறுமையான் முற்றுமுணர்ந்தவராகார் என்பதை ஒருகணமும் மறவாது நூலாராயப்புகுதல், சத்தியவிரதிகள் கடனாம்.

'நான்', 'எனது' என்னும் பற்று, உலகவாழ்க்கை நலத்துக்கு இன்றியமையாததோர் தூண்டுகோல் என்றும், எப்பொழுதும் நன்மை பயப்பதேயென்றும் கூறுவோர் நிற்க, உலகத்திலுள்ள 'எல்லா மயக்கங்களுக்கும் அதுவே காரணம், அதை வேரோடுகளைதலே மெய்யறிவின் வித்து' என்று கூறுவோரும்கூட அப்பற்றின் நீங்குதலினும் அரியதோர் செயலின்றென நன்கறிவர். கேவலம் பரோபகாரமாகக் கருதப்படும் செய்கைகளினும் தூண்டித் தொளைத்து ஆராயுங்கால், மிக ஆழத்தில், ஒருசிறு மூலையில், பெரும்பூசணிக்காயினுள் விதைபோல, இப்பற்றுக் காணப்படும் என்பர். இப்பற்றொழிந்த 'வேண்டுதல் வேண்டாமை' யெனும்குணத்தினனே திருவள்ளுவர் கடவுளைச் சுட்டினமை, மாந்தர் அக்குணமெய்தல் எவ்வளவோர் அருமையென்பதை நன்குவிளக்கும். ஆகவே, நூலாசிரியரும் நூலாராய்வோரும் இப்பற்றின் வயத்தினரோ என்பது கூறுமே விளங்கும். இத்தகையபற்று ஒருபுடைச்சார்பாக, நூற்கூற்றில் அதனடியாய் வந்த தன்மையுரைகளை நீக்கி எஞ்சியதே அந்நூலாசிரியர் அறிந்த மட்டும் கேவலம் உண்மையாம். தம்மறிவையும் அநுபவத்தையும் கடந்து சித்தவிருத்திசெய்தல் அசாத்தியமாயும், தம்மனக்கொண்டு பிறர்மனம் அளத்தலே இயற்கையாயும் இருத்தலான், நூலாராயப்புகுவார், தத்தமக்குரிய பற்றின் வழிப்பட்டு, ஆசிரியர் பற்றுரைகளான் மறைந்துகிடக்கும் உண்மையைப்பின்னும் தம் பற்றுத்திரையான் மறைத்து மயங்குதல், வியப்பன்றும். உபநிடத கர்த்தாக்களான ஆதிமுனிவரது அபிப்பிராயங்களைத் தம்பனுபாவப்படி பாதராயணர் திரட்டித் தந்த வேதாந்த சூத்திரங்களையே ஆதாரமாய்க்கொண்டு, தம்முண் மாறுபட்ட வேறு வேறு சமயகுரவர் தத்தம் சமயக்கோட்பாடுகளை நிலைநிறுத்திப் போயினமை, இதற்கோர் தக்க சான்றும்; அன்னோர் இயற்றிய பாஷியங்களை இந்நாளிலே படிப்பவரும், தம்முண்முரணி, அபிப்பிராயபேதம் கொள்கின்றமை, இதைப்பின்னும் துலக்காநிற்கும். கட்புலன் கதுவாச் சூக்குமப் பொருள்களையும் மிகச்சேணியவான கோளங்களையும் ஏற்றகருவிகளால் ஆராயும் கலைஞர், தாம் கருவிகளினூடு கண்ணுற்கண்டறிந்ததைக் கணக்கிடப்புகுங்கால், தத்தம் கட்பொறியின் பலாபலத்தானுண்டாகும் ஏற்றத்தாழ்வுகளையும் ஒருவாறுகணியாதொழியார். இயற்

கையில் உள்ளதை உள்ளவாறு தம் பொறிகளால் ஆராய்ந்தறிவதிலும், தத்தம் புத்தியைக்கொண்டு ஏனைய தத்துவங்களை ஆராய்ந்தறிவதிலும், ஐம்பொறிவன்மையினுதல் அறிவுவன்மையினுதல் இருவரேனும் ஒருவரோடொருவர் முற்றும்ஒவ்வா இவ்வுலகமாந்தர்க்குரிய வேற்றுமைகளினுல், அபிப்பிராயபேதங்கள் விளைகின்றமை இயல்பேயாயினும், உலகரை ஒருப்படுத்தல் அசாத்தியமும், தாமே காலக்கிரமத்தில் ஒருப்படுவரென நினைந்து அதுகாறும் வாளாவிருத்தல் மதியினமும், சிற்சிலவிஷயங்களிலேனும்ஒவ்வொருவனும்தன்புத்திகெட்டிய அளவு உண்மையை உணர்ந்து கைப்பற்றுதல் அவசியமும் ஆவதையறிந்து, தம்மாலேன்ற அளவு தற்பற்றைவிலக்கித் தத்துவ விசாரணைசெய்தல் மாந்தரது கடனும். உண்மையைமறைக்கும் தற்பற்றென்னும் இம்மாயத்திரை நம்மகக்கண்ணை மறைக்கும் சில விதங்களை ஒரு சிறிது கவனித்தல் பயன்படாதொழியாது; ஆயின் பெரியதோர் புராணத்திலுமடங்கா இதன் மாயப்பிரதாபத்தை மிகச்சுருக்கியே ஈண்டுக் குறித்தலமையும்.

இத்தற்பற்றிடும் பொய்த்திரைகளில் பழக்கம் என்பதே மிகத்திண்ணிய முதற்றிரையாம். எத்தகைய விஷயமாயினும், புதிதாகவொன்றை நாம் காணுங்கால், அதன் உண்மைக்குணத்தையறியவொண்ணுது நம்மை பயக்குவது நம் பழக்கமே; மற்ருென்றின் தீக்குணத்தை நாமறியாவண்ணம் தடுப்பதும், அதற்கனுசரணையான நம் பழக்கமே. உதாரணமாக:— "பகலோன் தெறுங்கிரணம், பாய்பறவைபெச்சம்,—மிகமேலுறுதகற்றும்; விண்ணின்—முகிலதனுல்—பெய்புமழையைத்தடுக்கும்; பேரழகுமாம்; ஒருவர்— கையிற் குடையிருந்தக்கால்" என்னும் செய்யுளைத் தெரியாதாரும் குடையினது பிரயோசனங்களை நன்கறிவர். இங்கிலாந்துதேசத்தில் வெகுகாலம் குடையென்ருென்றுண்டென்பதே தெரியாமலிருந்தது; அதைப் பிறநாடுகளிற்கண்டு முதன்முதல் இங்கிலாந்தில் உபயோகப்படுத்தியவர்கள், பழக்கவயத்தினரான பாமரர்களால் கல்லாலெறிந்து இமிசிக்கப்பட்டனராம்! நமதுதேசத்தில் இந்நாளிலும் சிலர் 'ரெயில்' வண்டியைப் பயந்து வெறுப்பதும், 'காகிதங்' களில் அச்சிடப்பட்ட புஸ்தகங்களை ஏட்டுக்கிரந்தங்களினும் தாழ்ந்தனவாக மதிப்பதும்,

பழக்கத்தின் பயனேயன்றே? இம்மாதிரியாகவே, வேதாந்த சாஸ்திரங்களிற் பயின்றுதேர்ந்து மிகச்சிறந்த தத்துவங்களையுணர்ந்து கொள்கைகளைக் கைப்பற்றினோரது செங்கரங்களும், கருடப்புள்ளைக் கண்ணுற்றவுடன் அவர்கள் கன்னங்களிற்சென்று புடைப்பதும், கணபதி சந்நிதியைக் கடக்கும்போதெல்லாம் அவர்கள் தலைகளிற் குட்டுவதும், உடுக்கையிழந்தவன் கைபோலொழுகும் பழக்கத்தினேயாம். இப்பழக்கத்தின் பல்வேறு உருக்களையும் விரித்துரைக்கிற் பெருகிவிடும்.

**சாதி, குலம்**—இவைமாட்டுள்ள பற்றை அடுத்தபடியிற் கூறலாம். எங்குமே பலமான இப்பற்று, இந்நாட்டிலே, மற்றெங்குமேயில்லாதஅளவு காழ்செறிந்து, வைரம்பாய்ந்து, தன்னைத்தறிக்குமுயலும் அதிகூர்மையான புத்திகளையும் மழுக்கிக் கெடுக்கும் வன்மையொடு விளங்குகின்றது. நமது தர்மசாஸ்திரங்களிலுள்ள அநீதிகளுக்கெல்லாம் இதே முக்கியகாரணம்; ஒரே நாட்டார்க்குள் இருக்கவேண்டிய ஐக்கியவுணர்ச்சியை அழித்து, நம்மைப்பேதப்படுத்திப், பன்னூறுவருஷங்களாக நம்மைப் பிறராதீனத்துக்குட்படுத்தியதும், இப்பற்றென்றே கூறலாம். இவையெல்லாம் இப்பற்றின் பண்டைப் பிரதாபங்கள்; இப்பொழுதோ, குடிகளைத் தன்னாட்சியிற் பயிற்ற முயலும் இராசாங்கத்தார், ஒருபகுதியாயினும் முழுதுமாயினும் குடிகளது நிர்வாகத்தில் விட்டிருக்கும் தேவஸ்தான நிர்வாகசபை, கிராமநிர்வாக ஐக்கியசங்கம், நகரநிர்வாகசபை, குடிவழக்கு நியாயப் பஞ்சாயத்துக்கள் முதலியவற்றின் நற்பயனைக் குடிகள் அடையாவண்ணம் ஆங்காங்குச் சீர்குலைப்பதும், இராசாங்க உத்தியோகஸ்தர் நானாவருணத்தரான பலர்சேர்ந்து வேலைசெய்யும் பெரிய 'ஆபீசு' களில் கலகங்களுக்கும் அநியாயங்களுக்கும் மூலமாயிருப்பதும் இப்பற்றேயாம். நூலாசிரியனும் நூலாராய்வோனும் இப்பற்றின் வயத்தினராய் ஒழுகிபோதுவராயின் ஒருசிறிதும் உண்மை துலங்காதென்பது மலையிலக்கே. கூற்றினது உண்மையை யோராது கூறுவோனது பிறப்பையும் குலத்தையும் பெரிதுமதித்தல் எவ்வளவோர்பேதைமை! ஆயின் அத்தகைய அறிவீனம் தொன்றுதொட்டு இன்றுமட்டும் நம்மவர்க்குள் மிகுந்து காணப்படுதலால், நூலாராய்வார்

யாவரும், இப்பற்றை மனமறியத் துறந்து, நூலாசிரியர் இப்பற்றின் மயக்கத்தால் உரையாடியவற்றையெல்லாம் களைந்தெறிந்து, உண்மையை அறியக்கடவர்.

சாதிப்பற்றோடு சமமாயுரைத்தற்குரியது மதப்பற்று. இப்பற்றினால் வரும் நிகழ்ச்சிகளையும் பிறக்கும் உரைகளையும் சற்றுக்கவனித்தால், அந்தோ! "நான் படும்பாடு, சிவனே, உலகர் நவிலும் பஞ்சுதான் படுமோ! சொல்லத்தான் படுமோ! உன்னைத்தான் படுமோ!" என்னும் கூக்குரலொழியக், கடவுள் படும்பாடு தொண்டன் பாட்டினும் தொள்ளாயிரமடங்கு பெரிதாகத் தோன்றுமே! "பங்கயந்துளவ நாறும் வேத்திரப் படைபொறுத்த" நந்தியைப் போற்றுவாரும், "வரற்கரற்குத், தானைச்சுரர்க்குச் சடகோபஞ் சித்திக்கத்தாங்கு செங்கோற் சேனைத்தலைவரை' ப் போற்றுவாரும் எதிர்ப்பட்டுவிடின், கலிங்கப்போரும் சேவற் போராயன்றோ காணும். பிறப்புக்கு முன்றொடங்கி இறப்புக்குப்பின்னும் விடாது திரிகரண பூர்வகமாக நிகழும் ஒவ்வொன்றினும், அருமைபெருமை சாதாரணம் அசாதாரணம் அவசியம் அனவசியம் என்னும் வேற்றுமையேயின்றி, மதக்கோட்பாடுகளைக் கலந்தொழுகும் நாம், இப்பற்றானுறும் மயக்கங்களுக்குந்தீங்குகளுக்கும் துன்பங்களுக்கும் அளவுசங்கையுளவோ? நறிய இனியமாம்பழத்தைக் கைக்கொண்டான் ஒருபேதை, அதன் சதையையெல்லாம் அறுத்தெறிந்துவிட்டு, வெறுங்கொட்டையை விடாதுகடித்துத் தன்னெயிற்றினின்றும்கசியும் இரத்தத்தை மாம்பழச்சாறுகச் சுவைத்து மகிழும் பான்மைபோல, மதத்தின் மெய்யான சாரப்சத்தை முற்றும் நழுவவிட்டு, ஆற்றிலும்நீற்றிலும் பூச்சிலும்பேச்சிலும் ஊரிலும்பேரிலும் ஆடையிலும்பாடையிலும் நானத்திலும்பானத்திலுமே மதாம்சம் முக்கியமாயிருப்பதாக மயங்கிக் கச்சைகட்டி 'லெச்சை' கெட்டுச் சண்டையிட்டுப் பொய்ப்பாவனைகளிலும் சர்ப்பனைகளிலுமே வாணளையெல்லாம் வீணேகழித்துக் கடவுளுக்குப் பயந்தேனும் பாவச்செயல்களையொழியாதாராயினும் தம்மதப்பற்றினாலும் ஆசாராநுஷ்டானங்களின்மேம்பாட்டினாலும் பெரும்பேறடைய எதிர்பார்த்திருக்கும் மதாபிமானிகள், இந்நாட்டில் எத்தனையாயிரர் என்று கணக்கிடுவது? இன்னார் செயல்கள், அவருற்ற

மயக்கத்தையும், அவர்பிறரை மயக்கக்கருதினதையும்காட்டுவதன்றி க், கடவுளையுமேமயக்கி எத்திவிடமுயல்வதையும் காட்டுகின்றன. இப் பாழான போலி மதாபிமானத்தின் பயனேயன்றோ, நமதுபுராணங்க ளும் இதிகாசங்களும் காவியங்களுங்கூட வீண்கதைகளும் வசவுரை களும் பொய்ம்மொழிகளும் வெற்றுரைகளும் உடையவாயின. நந் நாட்டுக் கிரந்தங்களை ஆராய்வார் இப்போலி அபிமானத்தின் பல்வே று பொய்மைகளையும் ஒருகணமும் மறக்கலாகாது.

பல நூற்றாண்டுகளாகப் பராதீனமாய் வாழ்ந்துவரும் நமக்குள் பிறசில நாட்டாருட்போல, சுதேசப்பற்று அவ்வளவு வலியதன்றாயி னும், இந்நாடு மற்றெந்நாட்டினும் சிரேஷ்டமான புண்ணியபூமி என் னும் நம்பிக்கையும், முன்னோரிற்பலர் எல்லாமுணர்ந்த எல்லாம்வல்ல தேவாம்சங்களாயும் அவதார புருஷர்களாயும் இருந்தனர் என்னும் நம்பிக்கையும் நம்மவர்க்குள் மிகவும் பர்வியிருத்தலால், இதுவும் நூலாராய்வார் இகழத்தக்கதன்று. இப்பற்றினடியாய்வருவதே நம் முன்னோரது நூல்களிற்கூறப்படாதொன்றுமே உலகத்திலில்லை என் னும் பொய்எண்ணம். ஆத்மதத்துவ விசாரணையில் நம்முன்னோர் பொதுவாய் மற்றெந்நாட்டாரினுமே மிக்கவல்லுநராய்விளங்கி, நூல் களும் இயற்றியிருக்கின்றனர். இப்பொழுது உலகத்திலே மேலாடி யுலவும் நவீன நாகரிகரான மேனாட்டார் இதையறிந்து: தாங்கள் இப் பொழுதுற்றிருக்கும் தேர்ச்சியினும் அதிகமாகச் சில்லாயிரம் வரு ஷங்களுக்குமுன்னரே நம்முன்னோர் இவ்விஷயத்தில் தேர்ந்திருந்த மையைக்கண்டுவியந்து புகழலாயினர். இப்புகழ்ச்சி, நம்முன்னோரது ஆத்மதத்துவஞானத்தையும் அதைப்புகழும் மேனாட்டாரது மனத் தின் நடுநிலைமையையும் நன்கு விளக்குமேயன்றிப் பெரும்பாலும் அந்த ஞானமாகிய பூர்வசொத்தைமறந்து, அதற்கேற்ற ஒழுக்கத் தைத்துறந்து, அஞ்ஞானச்சேற்றிலாழ்ந்து, பிணத்தைப்புணர்ந்து பாராட்டுவதுபோல உயிரிழந்து அழுகிக்கிடக்கும் சில பழைய நிய மங்களையும் ஆசாரங்களையும் குருட்டுத்தனமாய்க்கைப்பற்றித் தொ ன்னூல்களின்பொருளை யறியமாட்டாது கிளிபோற்குழறும் நமக்கு ஒரு சிறிதும் கீர்த்தியாகமாட்டாது. நம்முட்பலர் இதை மறப்பது மன்றி, மேனாட்டார் புகழுரையை ஆத்மதத்துவஞானத்தேர்ச்சிக்கு

மட்டுமேயன்றி மற்றெல்லாவிஷயங்கட்கும் பொதுவாகக்கொண்டு நம்முன்னோரினும் சிறந்த கவிவாணரும் வைத்தியரும் சரித்திரக்காரரும் வானசாஸ்திரிகளும் கணிதவாணரும் பல்வேறு கலைவாணரும் உலகெங்குமில்லையெனப் பிதற்றித் திரிகின்றனர்; நம்முன்னோரது பெருமையை நம்முட்பெரும்பாலார்க்கு எடுத்துக்காட்டியவர் அம்மேனாட்டாரே என்பதையும் அவர் கிரந்தங்களை நம்முட் பெரும்பாலார் அறிந்தது அம்மேனாட்டு ஆங்கிலபாஷை மூலமாயே என்பதையுங்கூட மறந்துவிடுகின்றனர். நூலாராய்வார் இத்தகைய மயக்கத்தை முற்றும் தவிர்த்துவிடவேண்டும். நம்முன்னோர் சொப்பனத்தினும் நினைத்தறியாத பல பெரியவிஷயங்கள் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுக் கையாளப்படுகின்றமை இயல்பேயன்றி, நம்முன்னோர்க்குச்சிறிதும் குறையாகாதென்பதையும் அறியவேண்டும்.

தொழிற்பற்று என்பதும் நூலாராய்வார் கடியத்தக்கதொன்றும். இதைப்பழக்கத்தின் பிரிவாகக்கூறினும் அமையும். ஒவ்வொருவனும் தான் நெடுநாட்பயின்றுகற்ற தன்றொழிலைப் பெரிதுமதித்து அருமைபாராட்டுதல் இயல்பே. கவிவாணன் கவனசக்தியே யாவற்றினும் சிறந்ததென்னலும், தார்க்கசாஸ்திரி தன் கலையைப்புகழ்தலும், இவ்வாறே ஒவ்வொரு கலைவாணனும் தன்னதைக்கொண்டாடுதலும் இயல்பன்றோ? ஆகவே இப்பற்று நூலாராய்வார் கவனிக்கத்தக்கதே; இப்பற்றான் வரும் உரைகளையும் அபிப்பிராயங்களையும் நன்காராய்ந்து தெளிந்தாலன்றி உண்மை வெளியாகாது.

இதுகாறும் நூலாராய்வார் கடிந்து விலக்குதற்குரியசிலபோலி அபிமானங்களை எடுத்துரைத்தோம். இவ்வபிமானங்களின் மிகுதி பற்றிவரும் மயக்கத்தையே கடிந்துகூறினோம்; அவற்றின் நன்மைகளைப்பற்றி, விஷயப்பொருத்தமின்மையாற், கூறவில்லை. இனிச் சில குறிப்பிட்ட கிரந்த விசேஷங்களை ஆராயுமுறை கவனிக்கத்தக்கது.

(இன்னும் வரும்.)

அ. மாதவையர்.

# ஸ்ரீமத்-தாயுமானசுவாமிகள் வரலாறும் அவர் மதக்கொள்கையும்.

(முன்தொடர்ச்சி ௪௭௯-ஆம் பக்கத்தொடர்ச்சி).

இவர்தம் அனுபவசாரங்களையெல்லாம் திரட்டி யப்போதைக்கப் போது அத்தியற்புத அருட்பாவாம் மழையாய்ப் பொழிந்தனர். அப்பாடல்களையெல்லாம் அவருடன் நிழல்போன்று பின்றொடர்ந்த அருளையர் முதலாய மாணவர்களெல்லாம் எழுதிவைத்தனரென்ப. அருளையர் தாயுமானவரிடம் தத்வோபதேசம் பெற்றார்; தாயுமானவருடைய புத்திரராகிய கனகசபாபதிப்பிள்ளை அருளையரிடம் ஞானோபதேசம் பெற்றார்.

அருளையர் தாயுமானவரைக் குறித்துரைத்தனவற்றுள் சில[1]:—

"அடிமுடி யில்லா வரும்பொரு டனக்கு
முடியடி இதுவென மொழிந்திடு முதல்வன்
ஆணவ மறுவிடி னருளுரு தென்னக்
காணரு நேர்மையாற் காணவே யுரைத்தோன்
சென்மமுள் ளளவுந் தீரா திழுக்கும்
சன்மம் விடாதெனக் காட்டிய வள்ளல்
உளதில தெனவு முறுதலொன் மாயை
வளமில தெனவும் வகுத்தினி துரைத்தோன்
இல்லறத் திருந்து மிதைய மடக்கிய
வல்லவன் றானே மகாயோகி யென்றோன்
துறவறத் திருந்துஞ் சூழ்மனக் குரங்கொன்
றறவகை யறியா னஞ்ஞானி யென்றோன்
தான்பெறும் பேறு சகமெலாம் பெறவே
வான்பெருங் கருணை வழங்கிய மாரி
பகர்சம யந்தொறும் பரமே யிருந்து
சுகநடம் புரியுந் தொழிலெனச் சொன்னோன்
பொறுமை தெளிவு புனிதவா சார

---

1. அருள்வாக்கிய அகவல் (அருளையரால் இயற்றப்பட்டது.)

மறுவிலா வண்மை வார மியற்கை
தண்ணமர் சாந்தந் தயங்கிய கீர்த்தி
யெண்ணெண் கலைபயில் இணையிலாக் கல்வி
நல்ல விரக்க நடுநிலை சத்திய
மில்லையென் னுமவெவர்க்குந் தருங்கொடை
நற்குண னெல்லா நண்ணிய பெருந்தகை
சைவஞ் சிவனுடன் சம்பந்த மென்பது
மெய்வளர் ஞானம் விளக்குமென் றிசைத்தோன்
கதிர்விழி யொளியுறக் கலத்தல் சித்தாந்த
விதிமுறை யாமென விளம்பிய மேலோன்
முடிவினி லாகம முறைமையி னுண்மையை
யடியரைக் குறித்துரைத் தருளிய வண்ணல்
முத்திபஞ் சாக்கர முறைமை யிலக்கியஞ்
சத்திய மிதுவெனச் சார்ந்தவர்க் குரைத்தோன்
அஞ்செழுத் துள்ளே யனைத்தையுங் காட்டியென்
னெஞ்சழுத் தியகுரு நீதி மாதவன்
எல்லா நிறைந்த விறைவன் செயலெனக்
கல்லா வெனக்குங் கருணைசெய் கடவுள்
குருவரு ளாலே கூடுவ தல்லாற்
றிருவரு ளுறுதெனத் தெரிந்திட வுரைத்தோன்"

தாயுமானவர் சமயகுரவரிடத்தும் சந்தானகுரவரிடத்தும் மற்றுந் தமக்கு முன்னிருந்த பெரியோரிடத்தும் மிக்க பக்தி பூண்டவர் என்பது அவரியற்றிய எந்நாட்கண்ணியில் அடியார் வணக்கம் என்னும் பகுதியுட் கூறப்பட்டனவற்றாற் பெறப்படும்.

வெம்பந்தந் தீர்த்துலகாள் வேந்தன் திருஞான
சம்பந் தனையருளாற் சாருநா ளெந்நாளோ.

சக்கர வர்த்தி தவராஜ யோகியெனு
மிக்கதிரு மூலனருள் மேவுநா ளெந்நாளோ.

கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன
வெந்தையரு ணடி யிருக்குநா ளெந்நாளோ.

பெரியோர்களுடைய பாடல்களும் பாட்டின் பொருள்களும் அவர் நெஞ்சைவிட்டகலாவாயின. அவற்றைப்போற்றுவது அறிஞருரைக் கண்ணியாற் றெரியவரும்.

**தாயுமானவர்.**

"இருநிலனாய்த் தீயாகி" யென்றதிருப் பாட்டில்
பெருநிலையைக் கண்டணைந்து பேச்சறுவ தெந்நாளோ.[2]

**தேவாரம்.**

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமான னாயெறியுங் காற்று மாகி
யருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே
நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே.[3] [யாகி

**தாயுமானவர்.**

"தானென்னை முன்படைத்தா" னென்ற தகவுரையை
நானென்று முண்மைபெற்று நாமுணர்வ தெந்நாளோ.

**தேவாரம்.**

தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனபாடலந்தோநாயினேனைப்பொருட்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
ஊனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே.[4]

**தாயுமானவர்.**

நினைப்பறவே தானினைந்தே னென்றநிலை நாடி
யனைத்துமா மப்பொருளி லாழுநா ளெந்நாளோ.

சென்றுசென் றேயணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாகி
நின்றுவிடு மென்றநெறி நிற்குநா ளெந்நாளோ.

**திருவாசகம்.**

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தெழுகின்ற
ஞாயிறு போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
னீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறிகியற் பாரே.[5]

**தாயுமானவர்.**

அறிவை யறிவதுவே யாகும் பொருளென்
றுறுதிசொன்ன வுண்மையினை யோருநா ளெந்நாளோ.[6]

---

2. அறிஞருரை.
3. தேவாரம் திருமுறை, 6, நின்றதிருத்தாண்டகம், செய்யுள் 1.
4. தேவாரம் திருமுறை 7, இறுதிப்பதிகம் (திருநொடித்தான்மலை) முதற் செய்யுள்.
5. திருவாசகம் கோயிற்றிருப்பதிகம், செய்யுள், 7.
6. அறிஞருரை.

## திருப்புகழ்.

குமரகுருபர குணதர நிசிசரர்
திமிரதினகர சரவணபவகிரி
குமரிசுதபகி ரதிசுதசுரர்பதி—குலமானும்.

அரவுபுனைதரு புனிதரும்வழிபட
மழலைமொழிகொடு தெளிதரஒளிதிகழ்
அறிவைஅறிவது பொருளெனஅருளிய—பெருமாளே.[7]

மற்றுக் கண்ணிகளிற் குறித்துள்ள உரையையும் ஆய்ந்துணர்க.

தாயுமானவரைச் சிலர் மாயாவாதியெனவும், சிலர் சைவசித்தாந்தியெனவும், சிலர் விசிஷ்டாத்வைதியெனவும், சிலர் எல்லா மதமும் தமக்குச்சம்மதமெனக் கொண்டவரெனவும் எடுத்துப் பற்பலவாறு கூறுகின்றனர். அத்தகையோர் அவர் பாடல்களை முற்றும் ஆய்ந்து அவரது கொள்கைகளை யறிந்தபின்னர்த் தமது அபிப்பிராயம் தெரிவித்தவராகார்.

ஒன்றதே பேரூர் வழியதற் காறுள
தென்றதே போலு மிருமுச் சமயங்கள்
நன்றிது தீதிது வென்றுரை மாந்தர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தாரே.

முதலொன் றானை முதுகுடன் வாலுந்
திதமுறு கொம்பு செவிதுதிக் கைகான்
மதியுட னந்தகர் வகைவகை பார்த்தே
யதகூற லொக்கு மாறு சமயமே.

இவற்றுள் முன்பாட்டிற் கூறியாங்குச் சிலர் ஆறு சமயங்களும் ஒன்றேயாகிய பேரூர்க்குப் பல்வழியெனக் கொள்வர். பின்பாட்டிற்கூறியாங்கு யானைகண்ட குருடர் யானை உருவத்தை நிச்சயம் செய்தது போன்று, அறுவகைச் சமயிகளும் தாம் தாம் ஈசுரசுவரூபத்தை உள்ளவாறு எடுத்துரைத்தோமென்று வாதாடுவர்.[8] தாயுமானவருடைய பாடல்களினின்றும் அவர் மதக்கொள்கையின்னதென ஒருவாறு எடுத்தெழுதுவோம்.

(இன்னும் வரும்)

கல்குளம்-குப்புசாமி முதலியார்.

---

7. திருப்புகழ், (திருவருணை) முதற்பாகம் Edited by Mr. V. T. Subrahmanya Pillai.

8. தாயுமானவர், சுகவாரி, செய்யுள் 9.

# புத்தகக் குறிப்பு

பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்காலஆசாரங்களும்:—இது நம்நாட்டின் க்ஷேமத்தையே கருதியுழைக்கும் அன்னிபெஸன்ட் அம்மை ஸ்ரீகாசியில் பிரமஞானசபைமுன்பு செய்த ஆங்கிலமகோப ந்நியாசங்களின் மொழிபெயர்ப்பு. இந்நூல், நான்காச்சிரமங்களை யும், ஆலயம் பூஜை பூஜகர்களையும், ஜாதிமுறைகளையும், ஸ்திரீதர்மங் களையும்பற்றி விரிவாகச் சொல்லுகின்றது. இவ்வற்புத உபந்நியா சங்கள் அருந்தவருந்தத்தேவிட்டா அமிருதம்போன்றவை. நாம் மே ன்மையடைதற்கு இன்றியமையாத பலசீரிய கருத்துக்கள் இந்நூன் முழுதும் நிரம்பியிருத்தலால், இந்தியாவின் வருங்கால உயர்வைக் கருதும் ஆரியநன்மக்களெல்லாம், இந்நூலைப்படித்தலும், படித்தபடி யொழுகலும் மிக அவசியமென்று நாமும் வற்புறுத்தல் மிகையா காது. நம்மவரில் ஆங்கிலங்கற்றோர்மட்டும் படித்துவந்த இவ்வற்புத உபந்நியாசங்களைத் தமிழரும் அறிந்துய்யவெண்ணி அதனை மொழி பெயர்த்துதவிய பேருபகாரி ப்ருமஸ்ரீ ப. நாராயணையரவர்கள். இம்மொழிபெயர்ப்புத் தெளிய இனிய நடையில் அமையப்பெற்றிரு த்தலோடு, அதன் மூலத்தினெழிலியழகையே தன் எதிரொலியாகக் கொண்டு சிறக்கின்றது. கைம்மாறுகருதாக் கார்போல அன்னி பெஸண்ட் அம்மை பொழிந்த ஆங்கில உபந்நியாசங்கள், உலக நன்மைக்கென்றே தம் சுவநன்மைகளையும் வெறுத்துழைக்கும் ஐய ரவர்கள் மூலமாகத் தமிழுருவத்தைப் பெற்றிருத்தல், அவற்றின் அபிப்பிராயங்களிலுள்ள மாசற்றதூய்மையைக் குறிப்பிக்கின்றது. ஆதலின், அக்கருத்துக்களை நம்மவரொவ்வொருவரும் சிந்தித்துத் தெளிதலும், அவற்றைச் செய்கைரூபமாக்குதலும் நம்மவரெல்லாம் தவறாது செய்யற்பாலன. இந்நூலின் உபதேசவன்மையைநோக்கும் போது, நம் தேசஜனங்களின் மனதில் வருங்கால நன்மைக்குரிய குறிகளை இது ஒருதலையாகப்பதிக்கவல்லதென்றே தோற்றுகின்றது. இவ்வாறே பலஅரிய நூல்களையும் மொழிபெயர்த்துதவ ஐயரவர் கட்கு ஆயுளையும் அறிவாற்றல்களையும் அளிக்குமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம். இந்நூல் மதுரைப் பிரமஞானசபை (Theosophical society)யாராற் பதிப்பிக்கப்பட்டது. ராயல் 16-ல்,190 பக்கங்க ளுடைய இப்புத்தகம் பலரும் வாங்கிப் படித்தற்கனுகூலமாக விலை

அணுடூ-க்குவிற்கப்படுகின்றது. வேண்டுவோர் மதுரையிலுள்ள பிரம ஞானசபையிலும் புதுமண்டபக்கடைகளிலும்பெற்றுக்கொள்ளலாம்.

முன்னோரது சுகாதார விளக்கம்:—மானுடவாழ்க்கைக்கின்றியமையாத சுகாதாரமுறை யொன்றையேபற்றி நம் முன்னோர்கள் தனிப்பெரு நூல்களை எழுதினரில்லையாயினும், நம் மிருதிநூல்களிலும், பிறநூல்களிலும் அவ்விஷயங்கள் மிகுதியும் ஒழுக்கரூபமாக விதிக்கப்பட்டு அங்கங்கே சொல்லப்படுகின்றன. சென்னையில் சானிடெரி கமிஷனரும் வைத்தியசாஸ்திர நிபுணருமாகிய கர்னல் - கிங் துரையவர்கள் சுகாதாரமுறையில் நம்முன்னோர் கையாண்ட விசேடங்களைப்பற்றிச் சிறந்த ஆராய்ச்சிசெய்து ஆங்கிலத்தில் சிறுநூலொன்று சமீபத்தில் வெளியிட்டிருக்கின்றனர். இஃது ஆரிய நன்மக்களொவ்வொருவருந் தெரியவேண்டிய அரியபல விஷயங்களை விளக்குதல்கண்டு, அதனைத் தமிழராகிய நம்மவரும் அறிதற்கநுகூலமாகச் சென்னை 'ஆரிய' பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ டி.ஏ. சுவாமிநாதையரவர்கள் தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றனர். இதன் பிரதியொன்று சமீபத்தில் யாமும்கிடைக்கப்பெற்றுப் படித்து மகிழ்ந்தோம். இது, சிறந்தநடையிற் பொருளினிது விளங்கும்படி எழுதப்பட்டுள்ளது. நம் பழைய ஒழுக்கங்களிலுள்ள அருமை பெருமைகளைவிளக்கும் இந்நூல் நம்மவரொவ்வொருவராலும் அபிமானிக்கத்தக்கதென்று வற்புறுத்துவது மிகையேயாம். இச்சிறுநூல் கன்னட மலையாளபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதென்றும் மைசூர், திருவாங்கூர், கொச்சி ஸம்ஸ்தானங்களில் இந்நூலைப் பரவச்செய்தற்குவேண்டிய உத்தரவுகள் அவ்வவ்அரசாங்கத்தாராலேயே பிறப்பிக்கப்பட்டுள்ளனவென்றும் அறிய மகிழ்ச்சியுறுகின்றோம். அவ்வாறே, நந்தமிழ் நாட்டிலும் இந்நூல்விஷயங்கள்தெரியவேண்டுவது இன்றியமையாதாகலின், நம் முனிசிபல் சங்கத்தாரும் பிறபொதுச்சங்கத்தார்களும், இந்நூலை யபிமானித்துப் பரவவைத்தலோடு, தமிழ்ப்பிரபுக்களும் அவ்வாறேசெய்தல் மிக்க நன்மைபயக்குமென்னும் எண்ணம் உடையோம்.

குறிப்பு:—இடமின்மையால், கிடைத்துள்ள வேறுபுத்தகங்களைப்பற்றி அடுத்தமுறை குறிப்பெழுதப்படும். பத்திராசிரியர்.

உ

கணபதி துணை.

அந்தகக்கவி வீரராகவமுதலியார்

இயற்றிய

# திருவாரூருலா

இஃது

உத்தமதானபுரம்

## வே. சாமிநாதையரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து

தாம் நூதனமாக எழுதிய அரும்பதவுரையுடன்

பதிப்பிக்கப்பட்டது.

"செந்தமிழ்" ப் பிரசுரம்—கசு.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1905

உகூஉ. இழை ஊசல் - செய்த ஊசல்; வினைத்தொகை.

உகூஙு. கயம் - தடாகம்.

உகூச. மதியப்பூப்பு - சந்திரோதயம்.

உகூஅ. வேணுமுத்து - வேயீன்ற முத்து; சிவபெருமான். வாள் நகம் - கைலேயங்கிரி.

உகூகூ. பேர்த்த நிசாசரன் - இராவணன். சீர்த்தநிசாசரன் - சந்திரன். கூர்த்து - மிக்கு.

ஙுOO. ஒடுக்குமோ - உயிரை ஒடுக்குமோ.

ஙுOக. பூசையிற்கூடு மணிதவிர - சிவபூசையிற் கூடியமணி உயிரை உண்ணுதலன்றி; உயிரை உண்ணுதலாவது பசுகரணங்களைப்போக்குதல்.

ஙுOஉ. பூண் - பாம்பு.

ஙுOஙு. தமிழ் அமுத விண்டு-பொதியின்மலே.

ஙுOச. கன்று - வளையல்.

ஙுOகூ. அம் கை - அழகிய கைமரம்.

ஙுகO. ஆழியான் - திருமால்.

ஙுகக. திருமாலின் வில்லின் நாணைத் தேவர்கள் கறையான் வடிவங்கொண்டு அரித்து அறுத்த கதை ஈண்டு அறியற்பாலது.

ஙுகஉ-ஙுகஙு. திருவாரூரிற் சூரிய புஷ்கரிணிகள் மூன்ருகவுள்ளன; அவற்றிலுண்டான மூன்று தாமரை மலர்கள், முறையே கீழிடத்தையும் பக்கத்தையும் மேலிடத்தையுமேநோக்கி மலர்ந்திருந்தன. (திருவாரூர்ப்பு. சூரிய.)

ஙுகரு. பாதாளப் பொற்புவனத்து - பாதாளத்துள்ள ஆடகேசத்தில்.

ஙுககூ. பணிக்கு-ஆபரணத்திற்கு. பணிமணி - பாம்பின் மணிகளை.

ஙுகஎ. வாசி - விசேடம்; இத்தலத்துள்ள அசலேசரென்னுஞ் சிவலிங்கப்பெருமானுடைய நிழல் கிழக்குத்திசையிலன்றி வேறு திசைகளிற் செல்லாது. (திருவாரூர்ப்பு. அசலே) அசலநிழல் - சலித்தலில்லாத நிழல்.

ஙுககூ. பண்மகள் - விறலி.

ஙுககூ-ஙுஙுO. இவை விஞவிடைகளாகவுள்ளவை: ஙுககூ, ஙுஉக, ஙுஉஙு, ஙுஉரு, ஙுஉஎ, ஙுஉகூ—இக்கண்ணிகள் விஞ; ஙுஉO, ஙுஉஉ, ஙுஉச, ஙுஉசு, ஙுஉஅ, ஙுஙுO.—இக்கண்ணிகள் விடை.

ஙுஉO. நாளையுண்டு.

ஙுஉஉ. அங்கம் பெண்ணுக்குதல்-என்பைப் பெண்ணுக்கல்.

ஙுஉஙு. கோட்டுமதியத்தழல் - பிறைத்தழல்.

ஙுஉரு. மறித்தும் - மீட்டும்.

ஙுஉசு. பொன்பறித்தது, திருமுருகன் பூண்டியின் பக்கத்தில். நிறத்துப் பாரப்பசும்பொன் - பசலே; நிறம் - மார்பு.

ஙுஉஎ. குவளை மிடறு - கருங்குவளை மலர்போன்ற கழுத்து. எகுவளை - நீங்குகின்ற வளையல்கள்.

ஙுஉகூ. கோவம் - இந்திரகோபம். ஆவம் - அம்பருத்தூணி. விசயன் - அருச்சுனன்.

ஙுஙுக. பனிக்காலே முட்ட - இராக்கால முழுக்க. தனிக்காலே - ஒருநாளை.

ஙுஙுஉ. ஓட்டும் தேர் - சூரியனுடைய தேர்.

ஙுஙுரு-ஙுஙுசு. ஆசை - திசை. ஆடரவம் சேடஞதலின், 'எட்டென்னு மாசை யுடனும்' என்ருர். ஆசு-விரைவு.

ஙுஙுஎ. காமாரி - சிவபெருமான்.

ஙுஙுஅ. கமலாலய வல்லி-கமலாம்பிகை; இவர் பராசத்தி யென்றுங் கூறப்பெறுவர்.

ருசo. வெள் நத்தான் சேய் - வெள்ளிய சங்கத்தையுடைய திருமாலின் புதல்வனாகிய மன்மதன்.

ருசஉ. படிமம் - கண்ணாடி.

ருசங. கனல் ஆற்று - வெப்பத்தை ஆற்றிய.

ருசச. பணையப்பணைத்து - மிகப் பருத்து.

ருசரு. அன்பர் - காமுகர். ஒளித்ததென - ஒளித்து விட்டதென்று சொல்லும்படி. வார் வம்பு இறக்கும் - கச்சைக் கடக்கும்.

ருசசு. தங்கு ஏர் - தங்கிய அழகு.

ருசசு-ருசஎ. மங்கை முதலைந்தில் - ஐந்து பருவத்தில். கருமம் ஐந்து - பஞ்சகிருத்தியம்; நடு - அழித்தல்.

ருசகூ. இரா-இரவில். இடப்பக்கத்தில் வீணையொன்றையேந்தி.

ருருo-ருருஉ. இவற்றால் தசாங்கங்கள் கூறப்படுகின்றன. மணிவரை - அரதனசிருங்கமலை; இஃது ஆடகேசர் எழுந்தருளிய நாகபிலத்திற்கு யாவரும் செல்லாதபடி இந்திரன் சேர்த்தியது; (திருவாரூர்ப்பு. ஆடகே. உங); மாணிக்கமலையுமாம். ஈராயிரமருப்புவேழம் - ஐராவணம். பஞ்சானனமுரசு - பஞ்சமுகவாத்திம்; இது தியாகேசர் சந்நிதியிலுள்ள விசேடவாத்தியம். வீரகண்டையம் - தியாகேசருடைய வாளாயுதம்.

ருருங. பண்கள் பதினெட்டென்பது சிலருடைய கொள்கை; திருவேடகப் புராணம், ஏடகங்சர்வளம், ருஅ-ம் செய்யுள்: "அயன்றலை சிவன்றன் தங்கை யூடிருந், தியன்றிசைத் திடுபதி னெண்ப ணீர்மையாற், பயன்றரு மூவர்தம் பதிக மோதுவார், முயன்றுறை மாடகோ டிகளு மொய்த்தவே." என்பதனாலுமுணர்க.

ருருச. மாட்டோர் - பக்கத்திலுள்ளோர். 'என்' என்பதை 'மகிழ்ந்து' என்பதனோடுங் கூட்டுக.

ருருசு. பெய் போதில் - அருச்சித்த ஆயிரம் தாமரைமலர்களில். பெறும் சிறுவன் - மன்மதன்.

ருருஎ. வேழம் - யானை, கரும்பு. கல்லோலம் - அலை.

ருசுo. இருந்தோர் - இருந்த விறலியரும் பாணர்களும். குன்றை - மேருமலையை.

ருசுஎ. தரங்கித்து - அலைந்து.

ருசுஅ-ருஎஎ. திருவந்திக்காப்புவருணனை.

ருசுகூ. உம்பர் சேனாபதி - முருகக்கடவுள்.

ருஎo. கண்டையம்-வீரகண்டையம்; வாள். விரவு ஆர் - கலத்தல் பொருந்திய.

ருஎக. மலர்களாற் செய்யப்படும் மாலை, தோடுமுதலியவற்றைப் பணியென்றல் மரபு.

ருஎங. மத்தளம் - சுத்தமத்தளம். இதுமுதலாகிய ஐந்தும் சுத்ததத்துவங்கள் ஐந்தென்று சொல்லப்படும். (தியாக. திருநகர. கஎக.)

ருஎரு. கொத்து - அடியவர் தொகுதி. பதியிலாள் - உருத்திரகணிகை. 'அசபைக் கோலத்துக்கு' என்று திருத்திக்கொள்க.

ருஎகூ. புல்லம் - இடபம்.

ருஅஉ. வீதி, சிலேடை.

ருஅங. சந்து - தூது.

ருஅரு. ஐம்போது - கோட்டுப் பூமுதலிய ஐவகைப்பூக்கள். கம்பேந்தி - திருமால்.

ருஅசு. நிச்சவிழா - நித்தியோத்ஸவம்.

ருஅஅ. குழவி - மனுநீதி கண்ட சோழருடைய குமாரராகிய வீதிவிடங்கர்.

ருஅஅ-ருஅகூ. திரிசங்குவென்னு மரசன்முதலியோர் தேவதீர்த்தத்திலாடித் திவ்யசரீரம் பெற்றுச் சுவர்க்

க மடைந்தது பற்றிப் பொறாமையுற்ற இந்திரனது கட்டளையால் வாயுதேவன் அத்தீர்த்தத்தைத் தூர்த்தான்; அதனால் வாயுதேவனிடத்தும் இந்திரனிடத்தும் சிவபெருமானுக்குக் கோபமுண்டாயிற்று. (திருவாரூர்ப்பு. இந்திர.)

ங௯உ. பத்தி - சிவபக்தியை.

ங௯ங-ங௯ரு. கைக் கொளலின் - கைக்கொண்டிருத்தல் போல. திரு-தெய்வவுத்தி யென்னும் ஆபரணம்; பிறையும் திருவும் பொலிகுழலாள்.

ங௯அ-ங௯௯. இறை திருக்கண் - சோமசூரியர்கள்; இவை அரைப்பட்டிகையிலுள்ள மணிகளுக்கு உவமை.

சOO. கோடிய - வளைந்த.

சOஉ. இவை யென்றது, பின்னர்க்கூறப்படும் புயல் முதலியவற்றை. எற்றுனுடனே தூது மொழிந்திடாது. தாய் - தாவி.

சOசு. ஒட்டு இரக்கும் - ஒட்டால் இரக்கும். முனிவர் பன்னியரை-தேவதாருவனத்து முனிவர்களுடைய மனைவியர்களை.

சOஎ-சOஅ. சங்கார் கையான்-திருமால்.

சO௯. இளங்கோக்கள் - வைசியர்.

சகO. மீன்வலையால் - மீன் வலையோடு.

சகங. மூவரும் ஓதியவை - தேவாரங்கள். மோகத்தால் வருவர்.

சகச. நள்ளாற்றுச்செய்யுள், 'போகமார்த்த' என்னும் திருப்பதிகம்.

சகரு. அரசு - கூன்பாண்டியர்; அவருக்கு வெப்புநீங்கிய சரிதம் ஈண்டு அறியத்தக்கது.

சகசு. கூன் தள்ளு திருப்பாட்டு, "வாழ்க வந்தணர்' என்னுந் திருப்பாசுரம்.

சகஎ. யாழ்மூரி, "மாதர்மடப்பிடி' என்னுந் திருப்பதிகம்.

சகஅ. கல் மிதப்பச் செய்த திருப்பாட்டு, "சொற்றுணைவேதியன்" என்னுந் திருப்பதிகம்.

சக௯. ஊரன்கவி, "பரவும் பரிசொன்றறியேன்" என்னுந் திருப்பதிகம்.

சஉக. பங்குனியுத்ஸவத்தில் ஆழித்தேரினின்றும் இறங்கிய பின்பு, ஸ்வாமி, திருவாரூரிலிருந்து புலிவலத்துக்கு மேற்கே யிருக்கும் வேலங்குடியிலுள்ள மண்டபத்திற்கு எழுந்தருளி அதற்கு எதிர்த் தோட்டத்திலுள்ள பாகற்கொடிகளை அறுத்தருள்வது தொன்மையான வழக்கமென்று தெரிகின்றது. இது, பாகல்வேட்டை யென்று வழங்கும்; மருவுபுகழ்க் கிர்ஷ்ண மகராச ராணை, யரிய வடமலையா ராணை-திருவாரூர்ப், பாகற் கொடியறுப்பார் பாதத் திருவாணை, த்யாகக் கொடியிறக்கா தே." (தமிழ் நாவலர் சரிதை, தத்துவப் பிரகாசர் பாடியது) என்னும்வெண்பாவும், 'ஆடாது மாடிப்பாகற் கொடியறுத்தார்' என்று வழங்கும் பழமொழியும் இதனை வலியுறுத்தும்.

சஉங. கொந்தளிப்ப - மிக்குமுழங்க.

சஉரு. பேரன்பன் - விறன் மிண்டநாயனார். புறம்பென்றது, அவர் புறகென்ற மொழியை; திருக்காளத்திநாத ருலா, ஙஙங, ருசரு-ம் கண்ணிகளைப்பார்க்க. இச்சரித்திர விரிவை, பெரியபுராணம், விறன்மிண்டநாயனார் புராணத்தாலுணர்க.

சஉஎ. சேவடி தேய.

சஉஅ. தியாகேசருடைய திருவாடுதண்டின் பெயர் மாணிக்கத்தண்டென்று வழங்கும்.

சஙO. நான்மறையோன் - சோமாசிமாற நாயனார்.

சஙக. கேள்வி ஓர் - கேள்வியை உணருகின்ற. வேள்வியோர் - அந்த நாயனாரது யாகசாலைக்கண் இருந்த அந்தணர்.

சஙங. நிறுத்தந்தை, கஙஉ-ம் கண்ணிக்குறிப்பாலுணர்க.

சஙரு. இவளது அழகின் மிகுதியைக் கண்டு வெட்கித் திருமகளும் விளர்ப்புறுவாளென்றபடி.

சஙசு. தென்னுலவை - தென்றல்

சஙஎ. ஆதிதிருச்சாலகத்து - தியாகராசருடைய பல்கணிவாயிலில்.

சஙகூ. இவள் சொல் இசையைப் போல்வதாதலின், அதற்கு மனமுருகிக் கொடிய புலியும் பாம்பும் பணிவனவாயின; "கடும்புலிக ளயர்ந்துசித்ர காயமெனும் பெயர்விளக்கக், கொடும்பணிகண் மாலையதாய்க் குலரத்ந விளக்கேற்ற" (அழகர்கலம்பகம்-க) என்பதனாலுணர்க. மன்ருட்டிற் புலியென்றது, வியாக்கிரபாதரை; பணியென்றது, பதஞ்சலியை.

சசஉ. பனசை - திருப்பனந்தாள்: காரிகை - தாடகை யென்னு மாது; இவள், கலைச்சி யென்றுங் கூறப்படுவள்; திருப்பூவணநாதருலா, சஙo-ம் கண்ணிக் குறிப்புரையைப் பார்க்க.

சசங. 'பெய்துடைய கோமான்', எனத்திருத்திக் கொள்க. செம்மனச்செல்வி யென்பது, மதுரையிலிருந்த பிட்டு வாணிச்சியாகிய வந்தி யென்பளது பெயர்; "சீருடைத் தவத்தின் மிக்காள் செம்மனச் செல்வியென்னும், பேருடை நரைமூ தாட்டி பிட்டவிற் றுணவு கொள்வாள்" என்பதனாலுணர்க; (திருவாதவூ. மண்சுமந்த. உஉ).

சசங. மகவைக்கொய்து.

சசச. செங்காட்டு அம்மை - சிறுத்தொண்டர் மனைவியாராகிய வெண்காட்டு நங்கையார். சந்தனநங்கை - வெண்காட்டு நங்கையாருடைய தாதியாராகிய சந்தனத்தார்.

சசஎ. கைவண்டு - கையிலுள் வளையல்.

சருo. தெள்ளேணம் - மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று.

சருக. சம்புப்பரி - நரிக்குதிரை.

சருங. திருத்தோள் நோக்கீர் - திருத்தோள் நோக்கம் செய்வீர்; விளி. தோள்நோக்கம் - தோள்வீச்சென்றும் வழங்கும். பல்வரியீர் - பலவகையானவரிக்கூத்துக்களையுடையீர்; விளி. பல்வரிக்கூத்தின் பெயர்களைச் சிலப்பதிகாரம், எகச-ம் பக்கத்துள்ள "சிந்துப்பிழுக்கை" என்னுமேற்கோளாலுணர்க.

சருரு. அன்னர் இசைத்தன - குயிற்பத்தும் திருத்தசாங்கமும்.

சருஎ. சிவபத்தவாணி - சிவபக்தர்களுடைய பெருமையைக் கூறும் வாக்கையுடையது. கனிவாய் - மகிழ்ந்து.

சருஅ. ஒரு சொல், "தில்லை வாழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்பது.

சசுக-ருoசு. இக்கண்ணிகளில் மகளிர்களுடைய உறுப்புக்களுக்கு உவமை கூறுதல் முகமாக எடுத்துப்பாராட்டியிருக்கும் உண்மைநாயன்மார்களுடைய அற்புத திவ்ய சரித்திரங்கள் ஆழ்ந்து நோக்கி இன்புறுதற்கு உரியன. இவற்றில் தனியடியார்கள், தொகையடியார்கள் யாவரும் கூறப்பெற்றுள்ளார்.

சசுக. அளவு பேச எற்கு அடங்கா.

சசுஉ. இளைசையின் மாறர் - இளையான்குடிமாறநாயனார்.

சசுங. மாறர் - நின்ற சீர் நெடுமாற நாயனார். பண்டையிற்படும்.

சசுச. அணங்காக - தெய்வத்தன்மையுள்ளதாக. அசி-ஒருவகைவாள்.

சசுரு. நவி - மழு.

சசுசு. படுபு - கொன்று.

சஎரு. பந்தர் - முத்துப்பந்தர்.

சஎசு. மந்திரம் - திருமந்திரம். அந்நூலில், 'கெர்ப்பக்கிரியை' என்னும் பகுதியில், ௩அ-ம் செய்யுளிற் குயிலின் பெயர் வந்திருத்தல் காண்க.

சஎஎ. ஆனாயநாயனார் அமைக்குழல், திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் வீணையென்க.

சஎஅ. கா - காத்த.

சஎசு-சஎகூ. இனிமை ஐந்து, குயில், பால், குழல், வீணை, கனி. தண்மை ஒன்று, சந்தனம். அருணம் - செம்மை.

சஅ0. துப்பு - நுகர் பொருள். பகடு - யானை.

சஅ௩. கலையர் - குங்குலியக்கலயநாயனார்.

சஅஎ-சஅஅ. செங்கணார் - கோச்செங்கட்சோழநாயனார்; முன் - முற்பிறப்பில்; இவர் சிலந்தியாயிருக்கும் பொழுது.

சகூசு. மென்மை தொடையன்றே.

ரு0க கற்பூரம் பூதிப்பொடியன்றே.

ரு0உ-ரு0௩. சிலை - கல். மற்றச் சமயத்தும் மற்றத்தெய்வத்தலத்துமென்க. திடத்திற்குச் சிலைகளிரண்டுமுவமை.

ரு0அ. சதகோடி - சதகோடி மகளிர்.

ருகஎ. கவி - சுந்தரமூர்த்தி நாயனார். தண் இயலா - தண்மை இயலாமல்.

ருககூ. விட்டு ஆலும் - வாய்விட்டுக் கூவும்.

ருஉ0. பிள்ளை - திருஞான சம்பந்த மூர்த்திநாயனார். பெண்ணை - பனை. புள் - அன்றில்.

ருஉஉ. வேடை - வெப்பம். குவடு - கைலை. வாடையது - வடகாற்று.

இந்நூல் அரும்பதவுரையில் எடுத்துக்காட்டிய

## நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்புக்கள்.

அசலே—அசலேசச்சருக்கம்.

அவை—அவையடக்கம்.

ஆடகே—ஆடகேசச்சருக்கம்.

ஆனந்தே—ஆனந்தேசச்சுரச்சருக்கம்.

இந்திர—இந்திரச்சருக்கம்.

உருத்திர—உருத்திரகோடிச்சருக்கம்.

கட—கடவுள் வாழ்த்து.

கந்த—கந்தபுராணம்.

கந்தவி—கந்தவிரதப்படலம்.

கம்ப—கம்பராமாயணம்.

கமலா—கமலாலயச்சிறப்பு.

கயா—கயாதீர்த்தச்சருக்கம்.

குலிசே—குலிசேச்சுரச்சருக்கம்.

கேம—கேமசருமச்சருக்கம்.

கோகருண—கோகருணச்சருக்கம்.

சங்க—சங்கதீர்த்தச்சருக்கம்.

சமற்கார—சமற்காரச்சருக்கம்.

சர்வ—சர்வதீர்த்தச்சருக்கம்.

சித்தீ—சித்தீச்சுரச்சருக்கம்.

சூரிய—சூரியபுட்கரிணிச்சருக்கம்.

சோமா—சோமாக்கந்தச்சருக்கம்.

தசரத—தசரதச்சருக்கம்.

தலமகிமை—தலமகிமைச் சருக்கம்.

தியாக—தியாகராசலீலை.

தியாகராச—தியாகராசச்சருக்கம்.

திரிசங்கு—திரிசங்குச்சருக்கம்.

திருக்கழுக்குன்ற—திருக்கழுக்குன்றப்புராணம்.

திருத்தொண்ட—திருத்தொண்டத்தொகை.

திருநகர—திருநகரப்படலம்.

திருவாதவூ—திருவாதவூரர் புராணம்.

திருவாரூர்ச்—திருவாரூர்ச்சிறப்புச்சருக்கம்.

திருவாரூர்ப்பு—திருவாரூர்ப்புராணம்,

திருவிழா—திருவிழாச்சருக்கம்.

நகர—நகரச்சருக்கம்.

நமிநந்தி—நமிநந்தியடிகள்நாயனார்புராணம்.

பசுபதி—பசுபதிபுற்றிடம்பற்றிய சருக்கம்.

பரா—பராசத்திச்சருக்கம்.

பிரதக்ஷிண—பிரதக்ஷிணச்சருக்கம்.

பெரிய—பெரியபுராணம்.

மகா—மகாலக்ஷுமிச்சருக்கம்.

மண்சுமந்த—மண்சுமந்தசருக்கம்.

முதற்—முதற்போர்ப்படலம்.

யுத்த—யுத்தகாண்டம்.

வன்மீக—வன்மீகநாதச்சருக்கம்.

விசுவா—விசுவாமித்திரச்சருக்கம்.

மூவகைப் பாவிற்கு முற்றுமோனைத்தொடை, ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்; ௫௪௯.

“எண்வகை மோனைக்கு மியன்ற பெருந்தொகை, முந்நூற்றுத் தொண்ணூற் றிரண்டு தலையிட்ட, நாலா யிரமா நவின்றனர் புலவர்” ஆக மோனைத்தொடை ௪௲௩௱௯௰௨.

## இனி எதுகை வருமாறு.

“அகவற் கிருநூற் றெழுபத்து மூன்றும், வெள்ளைக் கொருநூற் றைம்பத் தாறுங், கலிக்கு நூற்றிரு பஃது மாக, மூவகைப் பாவிற்குந் தலையா கெதுகை, ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்” ௫௪௯. “அடியெதுகைத்தொடை கொள்ளுங் காலு, மிம்மூ வகையா னதுபெ ருந்தொகை யைஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்” ௫௪௯.

“வண்டு தேமா மின்னிவை யொரோவொன், றீரைந் தெய்திய விணை யெதுகைதா, முப்ப தாக மொழிந்தன ரகவற்கு” ௩௰. “வலியது கடியாறு விறகுதீக் கணவிரி, யுராறுபுலி பெருநாணு வுருமுத்தீ மழகளிறு, விரவுகொடி நரையுருமு விவையொரோ வொன்றற், கொன்றுட னீரைந்தா வியன்ற விணையெதுகை, நூற்றொரு பஃதாக நுவன்றன ரகவற்கு” ௱௰. ஆக அகவற்கு இணையெதுகை ௧௪௰. “ஞாயிறு போதுபூ வெட்டுமுதலேழும், போரோறு நன்ஞாணுப் பாதிரி பூமருது, மாசெல்வா யொன்பான் முதலா மாறு, மேவுசீர் காருருமு மாவரு வாயிவை, யீரைந்து தொட்டே யீரோழெய்த, வெள்ளை பெற்ற விணையெது கைத்தொகை, யைம்பத் தொன்ப தாகு மென்ப” ௫௯. “வரகிரு நான்கு புளிமா வொன்பான், முதலா வொரோவொன் றிருமூன் றுக, வெள்ளைக் கிணையெதுகை மூவா றுகும்” ௧௮. ஆக வெள்ளைக்கு இணையெதுகை ௭௭. “நேர்நிரை யீற்றுற் கலிக்கிணை யெதுகை, யிருமுப் பஃதாக வியலு மென்ப” ௬௰.

“மூவகைப் பாவிற்கு மொழிந்த விணையெதுகை, யிருநூற் றெழுபத் தேழா கும்மே” ஆக ௨௭௭. “வண்டு நான்கு மின்னுத் தேமா, வைந்து ஞாயிறு போதுபூப் போரோ, றுறு பாதிரி மேவுசீர் நன்ஞாணுப், பூமருது நீடு கொடி யேழு காருருமு, நாணுத்தளை யெட்டு முதலா வந்தவவை, யொரோவொன் றெவ்வேழ் நிலம்பெற வகவற்குத், தொக்க பொழிப்பெதுகை தொண்ணூற் றொன்றே” ௯௧. ‘வரகிரு நான்கு புளிமா வரவொன்பான், வலியது விறகுதீக் கடியாறு பத்துக், கணவிரி யுருமுத்தீப் பெருநாணு வுராறுபுலி, மழகளிறு பதினொன்று நரையுருமு விரவுகொடி, யீராறு முதலா வந்தவை யொரோவொன், றொன்பது நிலம்பெற வகவற்குப் பொழிப்பெ

துகை, நூற்றே டொருபத் தேழெனு நுவல்ப" ககள. ஆக அகவற்குப் பொழிப்பெதுகை உாஅ. "வண்டு ஞாயிறு போதுபூப் போரே, றெட்டு முதலா வேழுந் தேமா, மின்னுப் பாதிரி மேவுசீர் நன்னுணுப், பூமருது மா செல்வா யொன்பான் முதலாறுங், காருருமு மாவருவாய் பத்துமுத லேந்து, மாக வெள்ளைக்கு வந்த பொழிப்பெதுகை, யெண்ணொரு பஃதே யெய்து மென்ப" அம. "வரகு வலியது கடியாறு விறகுதீ, யெட்டுக் கணவிரி பெரு நாணுப் புலிசெல்வாய், மழகளி றுருமுத்தீப் புளிமா விவையொன்பது, நரை யுருமுப் புலிவருவாய் பத்து முதலா, வந்த வவையொரோ வொன்றைந் தாக, வெள்ளை பெற்ற பொழிப்பெது கைத்தொடை, யாறொரு பஃது மைந்து மா கும்" சுயரு. வெள்ளைப் பொழிப்பெதுகை சுயரு. "வலியது விறகுதீக் கடியா றெனுமிவை, யீரேழ் தொட்டுப் பதினெட் டளவுங், கணவிரி பெருநா ணு வுருமுத்தீ மழகளிறு, புலிசெல்வா யுராறுபுலிப் பதினைந்து முதலாப், பத் தொன் பானள வுயரவு நரையுருமு, விரவுகொடிப் புலிவருவாய் பதினாறு முதலா, விருபதின் காறு முயரவும் வருதலிற், றுள்ளல் பெற்ற பொழிப் பெ துகைதா, மறுபஃ தாக வறைந்தனர் புலவர்" சும.

"மூவகைப் பாவிற்கு மொழிந்த பொழிப்பெதுகை, நானூற் றொரு பத்து மூன்றெனு நவில்ப" சுகரு.

"நேர்பதின் மூன்று ணகவற் கொரூஉவெதுகை, வண்டு நான்கு மின் னுத் தேமா, வைந்து ஞாயிறு போதுபூப் போரே, றாறு பாதிரி மேவுசீர் நன் ணுணுப், பூமருது நீடுகொடி யேழு காருருமு, நாணுத் தளையெட்டு முதலா வொரோவொன், றெவ்வேழாக வியன்றதொகைதா, மேழொரு பஃதோ டிரு பத்தொன்றே" கூயக. "நிரைபதின் மூன்று ணகவற் கொரூஉவெதுகை, வர கிரு நான்கு புளிமா வரவொன்பான், வலியது கடியாறு விறகுதீப் பத்துக், கணவிரி யுராறுபுலி பெருநாணு வுருமுத்தீ, மழகளிறு பதினொன்று விரவு கொடி நரையுருமு, வீராறு முதலா வொரோவொன் றுன்பா, னுகத்தொ கைநூற் றொருபத் தேழே" ககள ; ஆக அகவற்கொரூஉவெதுகை உாஅ. "நேர்பதின் மூன்றன் வெள்ளைக் கொரூஉவெதுகை, விண்டுஞாயிறுபோது பூப்போரே, றெட்டுமுதலா வேழுந்தேமா, மின்னுப் பாதிரி மேவுசீர் நன்ன ணுப், பூமருது மாசெல் வாயிவை யொன்பான், முதலா வொரோ வொன் றாறுங் காருருமு, மாவரு வாய்பத்து முதலாக வொரோவொன், றை ந்து மாக வறைந்த தொகைதா, மெண்ணொரு பஃதே யெய்து மென்ப"அம. "நிரைபதின் மூன்றன் வெள்ளைக் கொரூஉவெதுகை, வரகு வலியது கடி யாறு விறகுதீ, யெட்டுக் கணவிரி பெருநாணு வுருமுத்தீப், புலிசெல்வாய் மழகளிறு புளிமாயிவை யொன்பது, நரையுருமுப் புலிவருவாய் பத்துமுத

லாக, வொரோவொன் றைந்து நிலம்பெற், றாறொரு பஃது மைந்து மாகும்" ௬௰௫; ஆக வெள்ளைக்கு ஒரூஉ வெதுகை ௧௪௫. நேரீ ராறாற் கலிக்கொரூஉ வெதுகை, பெருகிய நிலத்தி லொரோவொன்று களையப், பெறுந்தொகைநா ற்பத்தெட்டுப்பின்னர், நிரையீ ராறாற் சுருங்கிய நிலத்திற், கொரோவொன் றுகளையப் பெறுந்தொகை யஃதா, மிருவகைத் தொகையுந் தொண்ணூற் றாறே' ௯௰௬.

"மூவகைப் பாவிற்கு மொழிந்த வொரூஉ வெதுகை, நானூற்று நாற்பத் தொன்ப தாகும்" ௪௱௪௰௯.

"வண்டு தேமா மின்னிவை மூன்று, மொரோவொன்று சுருங்கிய நிலத் த தந்நான், ககவல் பெற்ற கூழை யெதுகை, யீரா றாக வியலு மென்ப" ௰௨. "வலியது கடியாறு விறகுதீப் பத்துக், கணவிரி யுராறுபுலி பெருநாணு வுரு முத்தீ, மழகளிறு பதினொன்று விரவுகொடி நரையுருமு, வீராறு முதலாக வொரோவொன் றொன்பா, ஞக வகவற்குக் கூழை யெதுகை, தொண்ணூ றாகத் தொகுத்தனர் புலவர்" ௯௰. ஆக அகவற்குக் கூழையெதுகை ௱௨. "ஞாயிறு போதுபூப் போரே றேழாப், பாதிரி மேவுசீர் நன்னுணுப் பூமருது, மாசெல் வாயிவை யொரோவொன் றாகக், காருருமு மாவருவா யொரோ வொன் றைந்தாக, வெள்ளை பெற்ற கூழை யெதுகை, யாறொரு பஃது மொன்று மாகும்" ௬௰௧. "வரகிரு நான்கு புளிமா வரவொன்பான், முதலா வொரோவொன்று நந்நான் காக, வெள்ளை பெற்ற கூழை யெதுகை, யீரா றாக வியலு மென்ப" ௧௨. ஆக வெள்ளைக்குக்கூழை யெதுகை ௭௰௩. "நிரை யீராறாற் கூழையெதுகை, யிருமுப்பஃதா வியலுங்கலிக்கே" ௬௰.

"மூவகைப் பாவிற்குக் கூழை யெதுகை, யிருநூற்று முப்பத் தைந்தா கும்மே" ௨௱௩௰௫.

"நேராதியாகிய சீர்பதின் மூன்றாற், சுருங்கிய நிலத்தி லொரோ வொன்று நான்காக, வகவல் பெற்ற மேற்கதுவா யெதுகை, யையொரு பஃது மிரண்டு மாகும்." ௫௰௨. "வரகீ ரைந்து புளிமா வரவு, பதினொன்று வலியது கடியாறு விறகுதீ, யீராறு கணவிரி யுராறுபுலி பெருநாணு, வுருமுத்தீ மழகளி றிவைபதின் மூன்று, விரவுகொடி நரையுருமு வீரேழ் முதலா, வொரோவொன் றேழாக வகவல்பெற்ற, மேற்கதுவாயெதுகைதொண்ணூ ற்றொன்றே" ௯௰௧. ஆக அகவற்கு மேற்கதுவா யெதுகை ௱௪௰௩. 'வண்டு ஞாயிறு போதுபூப் போரே, றெட்டு முதலா வொரோவொன் றேழுந், தேமா மின்னுப் பாதிரி மேவுசீர், நன்னுணுப் பூமருது மாசெல்வாயிவை, யொன்பா ன்முதலா வொரோவொன் றாறுங், காருருமு மாவருவா யீரைந்து முதலா,

வொரோவொன் றைந்து மாக வெள்ளைக்கு, மேற்கதுவா யெதுகை யெண் பஃ தாகும்'' ௮௰. ''வாகு வலியது கடியாறு விறகுதீ, யெட்டு முதலா வொரோ வொன்று நான்குங், கணவிரி பெருவேணுப் புலிசெல்வாய் மழகளி, றுருமுத் தீப்புளி மாவிவை யொன்பா, னரையுருமுப் புலிவருவா யீரைந்து முதலா, வொரோவொன் றொருநான் காக வெள்ளைக்கு, மேற்கதுவா யெதுகை யைம்பத் திரண்டே'' ௫௰௨. ஆக வெள்ளைக்கு மேற்கதுவாயெதுகை ௱௩௰௨. ''நிரையீ ராறுற் கலிக்கு மேற்கதுவா, யெதுகை நாற்பத் தெட்டா வெய்தும்'' ௪௰௮.

''மூவகைப் பாவிற்கு மொழிந்த மேற்கதுவா, யெதுகை முந்நூற் றிரு பத்து மூன்றே.'' ௩௱௨௰௩.

''வண்டு நான்கு தேமா மின்னிவை, யைந்து முதலா வொரோவொன் றேழாக, வகவல் பெற்ற கீழ்க்கதுவா யெதுகை, யொன்று தலையிட்ட நாலைந் தாகும்.'' ௨௰௧. ''வலியது கடியாறு விறகுதீப் பத்துக், கணவிரி யுராறுபுலிபெருநாணு வுருமுத்தீ, மழகளிறு பதினொன்று விரவுகொடி நரையுருமு, வீராறு முதலா வொரோவொன் றொன்பா, னாக வகவற்குக் கீழ்க்கது வாயெதுகை, தொண்ணூ றுசத் தொகுத்தனர் புலவர்'' ௯௰. ஆக அகவற்குக்கீழ்க்கதுவா யெதுகை ௱௰௧. ''ஞாயிறு போதுபூப் போரே றென்றிவை, யெட்டு முதலா வொரோவொன் றேழும், பாதிரி மேவுசீர் நன்ஞாணுப் பூமருது, மாசெல்வா யொன்பான் முதலா வாறுங், காருருமு மாவருவா யீரைந்து முதலா, வொரோவொன் றைந்து மாகக் கீழ்க்கதுவா, யெதுகை வெள்ளைக் கறுபத் தொன்றே'' ௬௰௧. ''வரகிரு நான்கு புளிமா வொன்பான், முதலா வொரோவொன் றொருநான் காக, வெள்ளை பெற்ற கீழ்க்கதுவா யெதுகை, யீரா றுக வியலு மென்ப. ௰௨. ஆகவெள்ளைக்குக் கீழ்க்கதுவாயெதுகை ௭௰௩. ''நிரையீராறுற் கலிக்குக்கீழ்க்கதுவா, யெதுகை நாற்பத் தெட்டே யாகும்.'' ௪௰௮.

''மூவகைப் பாவிற்கு மொழிந்த கீழ்க்கதுவா, யெதுகை யிருநூற்று முப்பத் திரண்டே.'' ௨௱௩௰௨.

''வண்டு தேமா மின்னிவை மூன்றுஞ், சுருங்கிய நிலத்தி லொரோ வொன்று நந்நான், காக வகவல் பெற்றமுற் றெதுகை, யீரா றுக வியலு மென்ப'' ௧௨. ''வலியது கடியாறு விறகுதீ யீராறு, கணவிரி யுராறுபுலி பெருநா ணு வுருமுத்தீ, மழகளிறு பதின்மூன்று விரவுகொடி நரையுருமு, வீரேழ் முதலா வொரோவொன் றேழாக, வகவல் பெற்ற முற்றெ துகைதா, மேழொரு பஃதா வியலு மென்ப'' ௭௰. ஆக அகவற்கு முற்றெதுகை ௮௰௨. ''ஞாயி றுபோதுபூப் போரேறென்றிவை, யெட்டு முதலா வொரோவொன் றேழும்,

ஈயப்பொருள்களை உபயோகிக்கலாம். இவ்விதப்பொருளை ஈயச்சர்க்கரை என்பர். (Sugar of lead)

ஈயங்கலந்துள்ள கற்களுடன் சுண்ணும்பைச்சேர்த்து எரித்து ஈயத்தைத்தனியாக எடுப்பார்கள். ஈயத்தைப்பற்றி விசேஷமாய் வேறுபுஸ்தகங்களிலுங்காணலாம்.

2. **செம்பு அல்லது தாம்பிரம்:**—ஓர்வகைக்கற்களின் நடுவில் சிலலோகங்கள் நமது கைகால்களில் இரத்தக்குழாய்களும் நரம்புகளுமோடுவது போற் காண்கின்றன. கவனித்துப்பார்த்தால் பச்சைநிறமுள்ள குழாய்கள் நமது தேகத்தில் பரவியிருப்பதைக் காணலாம். அதுபோலவே உலோகங்கள் கற்களிலும் கோடுகளாக விருக்கக் காணலாம். வடஅமெரிக்காவில் சிலபாகங்களில் பூமியின்கற்களில் செம்பு கோடுகளாக விருக்கக் கண்டிருக்கின்றனர். அவ்வகைச்செம்பு கலப்பற்றதாயுள்ளது. தாம்பிர உலோகமண்ணில் அனேகவிதமுண்டு. சிவப்புநிறமும் கருப்புநிறமுங்கொண்டு வெவ்வேருக விளங்குகின்றன. பச்சை நிறங்கொண்டவையுமுண்டு. ஆனல் சுத்தச் செம்பானது சிவப்புநிறமுடையது. அதைத்தகடாகத்தட்டக்கூடும். வெள்ளி, பொன் இவைபோல அகலாது. இரும்பைவிடச் செம்பு உறுதியில் மட்டமானபொருள். தாம்பிரத்தைத் தட்டினல் தொனி உண்டாகிறது. ஈயத்தைத்தட்டினுல் உண்டாகும் சத்தத்தைத் தொனியென்று கருதலாகாது. வெள்ளியைப்போல் தாம்பிரம் வெப்பத்தைச் செலுத்தவல்ல உலோகம். மற்ற உலோகங்களுடன் செம்பு நன்ருகக்கலந்து அடியில் வருமாறு வெவ்வேறு பொருளை யுண்டாக்கு மியல்புடையது.

(a) **பித்தளை:**—இது செம்புந்துத்தநாகமும் கலந்துண்டாகிய பொருள். இதை நமது பாத்திரங்களின்பொருட்டு உபயோகிப்பது எல்லோருக்குந்தெரியும்.

(b) **ஜர்மன் வெள்ளி:**—(German Silver) இது தாம்பிரமும், துத்தநாகமும், நிக்கல் என்னுமோர் உலோகமும் சேர்ந்துண்டாகியது. சாதாரணமாய்க் கூசாக்களையும் தட்டுக்களையும் ஜர்மன் வெள்ளியால் செய்து விற்பதைக்கண்டு வருகிறேம். நிக்கல் வெள்ளியால் கடியாரக்கொலுசைச்செய்து வருகிருர்கள். கடியார மூடியையும் நிக்கலால் செய்வதுண்டு.

(c) செப்புநாணயங்களையும், அரசாட்சியில் மேன்மைபொருந்திய கனவான்களை என்றும் ஆராதிக்கும்வண்ணம் பெருஞ்சாலைகளில் நிலைபெறச் செய்துள்ள பிரதிமைகளையும் செம்புடன் துத்தநாகத்தையும் மற்ெருருலோகத்தையுங்கலந்து வருவதான **ப்ரான்ஸ்** (Bronze) என்பதோர் பொருளினல் செய்துவருவார்கள்.

(*d*) அலுமினியமும் செம்பும் கலவைப்பொருள்களாக்கப்பட்ட மற்றோர் பொருளுமுண்டு.

செம்புடன் கலந்த பிராணவாயுவானது சிற்றளவில் செம்பிற்கு உறுதியைத்தரும். அளவுமிகுந்தால் உறுதிகெடும். கந்தகம் செம்புடன் கலந்தாலும் செம்பின் உறுதிகெடும். துருசு வங்காளப்பச்சை முதலியவை செம்பு கலந்தவைகள்.

3. **துத்தநாகம்:**—சுயத்துத்தநாகம் இயற்கையில் அகப்படுவதில்லை. ஆகையால் துத்தநாகங்கலந்த மண்ணிலிருந்து சுயதுத்தநாகத்தைக் காய்ச்சி யெடுப்பார்கள். அஃதோர் மெதுவான வெண்ணிற உலோகம். அதை நெருப்பில் வைத்து ஊதிப்பிறகு தட்டினால் அஃது அகலும். ஆதலால் அதைத் தகடாக அடிக்கலாம். காற்றில் துத்தநாகமானது மேற்பாகத்தில் பிராணவாயுவுடன் கலந்து உட்பாகத்தைக் காணுமலிருக்கக் காப்பாற்றுகிறது. இரும்பைத் துருப்பிடிக்க வொட்டாமலகற்ற வேண்டுமானால் அதை உருக்கின துத்தநாகத்திற் றேய்த்தெடுப்பார்கள். இரும்பை நன்றாகத் தேய்த்து சுத்தப்படுத்தியபின் உருக்கின துத்தநாகத்திற்றேய்த்தால் வெண்ணிறம் பெற்றுக் கெடாமலிருக்கும். பித்தளை, ஜர்மன்வெள்ளி, பிரான்ஸ் முதலியவைகளுடன் துத்தநாகம் கலந்திருப்பதாய் முன்னமேயே படித்தோம். துத்தநாகத்தைக் கொண்டு ஓர்வித வர்ணத்தைச்செய்து இருப்புப்பெட்டிகளுக்குப்பூசுவார்கள். இவ்வகைவர்ணம் மரத்தில் நன்றாக ஒட்டாதபடியால் ஈயவெள்ளையைப்போலுதவாது. ஆனால் துத்தநாகவெள்ளை அதாவது துத்தநாகத்துலாத்தின் வெண்ணிறவர்ணம் நாளடைவிலே ஈயவெள்ளையைப் போலக் கருநிறமடையாது. மேலும் துத்தநாகங்கலந்துள்ள மருந்துகளை வாந்தியெடுப்பதற்காக உபயோகிப்பதுண்டு.

4. **சுண்ணும்பின் உபயோகம்:**—இதை இங்கிலீஷில் கால்ஸியம் (Calcuim) என்பர். இது சுயத்தன்மையில் எளிதாக அகப்படக் கூடியதல்ல. சுண்ணும்புக்கல், சலவைக்கல் (Marble) சீமைச்சுண்ணும்பு, பவளம், கிளிஞ்சல் முதலியவையெல்லாம் இவ்வுலகத்தாலாகியவேயாம். சிலவிடங்களில் மலைக்குகைகளும் திரண்ட பள்ளங்களுமாயுள்ளவைகளில் நீர்த்துளிகளால் சுண்ணும்புக்கற்கள் ஸ்தம்பங்களாக மேல்நோக்கியும் கீழ்நோக்கியும் மிகுதியாகப் பரவியுள்ளன. சிலாசத்தும் (Gypsum) வெண்கல்லும் (Alabosk) சுண்ணும்பின் உலோகத்தைக்கொண்டன. பூமியினின்றுந் தோண்டி யெடுக்கப்பட்ட மற்றச்சுண்ணும்புக்கற்களிலும் இவ்வுலோகம் விசேஷித்துள்ளது.

கால்வியமென்னும் சுண்ணாம்பின் உலோகம் சற்று மஞ்சள் நிறங்கொண்டுள்ளது. அது மெதுவான வஸ்து. இவ்வுலோகத்தைச் சாதாரணமாக சுத்தமா யுபயோகிப்பதில்லை. இவ்வுலோகம்பட்டால் பொருள்கள் வெந்துபோம். சுண்ணாம்பின் உலோகத்தை நன்றாக எரித்தால் வெண்மையாகவும் உருகாமலுமிருப்பதால் இதை மிகக் காந்திவீசும்விளக்குகளுக்காக உபயோகிப்பார்கள். இக்காந்தியை இங்கிலீஷில் (Lime Light) அதாவது சுண்ணாம்பு வெளிச்சம் என்பர்.

கிளிஞ்சலின் பேரில் நீரைவார்த்தால் கிளிஞ்சலானது பொங்கிப் பொடிப்பொடிச் சுண்ணாம்பாகப்பார்த்து வருகிறோம். இதைச்சுண்ணாம்பு நீறென்று கூறிக்கட்டிடங்களுக்காக உபயோகித்து வருவது வழக்கம் இதை இங்கிலீஷில் ஸ்லேகெட்லைம் (Slaked lime) என்பர். இவ்வகைத்தான சுண்ணாம்பு நீற்றை அதாவது சுண்ணாம்புப் பொடிகளைத் தண்ணீரில் மிதக்க விட்டால் தண்ணீரானது இலேசான வெண்ணிறங்கொண்டு சுண்ணாம்புப் பாலென்னும் (Milk of lime) பெயர்கொள்ளும்.

5. இரும்பு:—நமது நித்திய உபயோகத்திற்கு இரும்புச்சாமான்களைக்கொண்டு கையாளுவது எல்லோருக்குந்தெரியும். இரும்பாலாகிய பூட்டுகளும், சாவிகளும், வளையங்களும், சங்கிலிகளும், தூண்களும், உத்திரங்களும், குழாய்களும், அடுப்புகளும் மற்றும் விசேஷித்துள்ள எல்லாப்பொருள்களும் நமது வேலைகளுக்கு இன்றியமையாதனவாயுள்ளன. ஆதலால் இரும்பு நமக்கு எவ்வளவு முக்கியமான பொருளென்பதை எளிதில் அறியக்கூடும். இரும்பைக் கரும்பொன் என்பதற்குக் காரணமும் இதனால் எளிதில் விளங்குகின்றது. இரும்பானது வெகுவாய் எங்கும் அகப்படக்கூடியதோர் உலோகம். கலப்பற்ற உலோகப் பொருளாக இரும்பைக் கட்டியாகவும், தூளாகவும், நாராகவுமடையலாம். இரும்புகலந்த மண்களிலும் அநேகவிதமுண்டு. இரும்பானது பிராணவாயுவுடன் சம்பந்தப்பட்டுப் பாறைக்கற்களிலும் களிமண்களிலும் பரவியுள்ளது: இரும்பு பிராணவாயுவுடன் கலந்துண்டாம் செந்நிறப்பொடியை அயச்சிந்தூரமென்று கூறுவர். சுண்ணாம்புக்கற்களிலும் இரும்பானது கலந்திருக்கும். ஆகையால் ஏறக்குறைய பூமியில் எவ்விடத்திலும் இரும்பு அகப்படக் கூடியதென்பது தெளிவாய் விளங்கும். மேலும் எல்லாப் பிராணிகளின் தேகங்களிலும் மரஞ்செடிகளிலும் அவற்றவற்றின் பிராணனுக்கு முக்கிய ஆதாரமாய்க் கலந்துள்ளது. அதற்குதாரணமாக நமது தேகத்துள்ள இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்தால் இரும்பு சற்றளவு கலந்திருக்கக்காணலாம். இரத்தம் சிவப்புவர்ணங் கொண்டிருப்பதற்குமிஃதோர் காரணமாகும். இரத்தத்திலுள்ள ஹே

மடீன் (Haematin) என்னும்பொருள் தான் இரும்பைக்கொண்டுள்ளது. மற்றும் சீமை இலந்தைபோன்ற பழங்களை வெட்டி உட்புறத்தைச்சற்று நேரம் கிழியப்பார்த்தால் சிவப்பு நிறமடையும். ஆகையால் அவ்வகைப் பழம் முதலியவைகளில் சற்று இரும்பிருத்தல் சுலபமாய்த் தேர்ந்தறியத்தக்கது. காந்தமென்பதும், களிமண்ணும் இரும்புங்கலந்த கற்களென்பதும், இவை போன்ற மற்றும் இரும்பினுலாகியவை. இரும்பைத்தேர்ந்து பார்த்தால் அஃதோர் இலேசான பொருளென்றுகூறலாம். ஏனெனில், இடைக்கெடைஇருப்பினும் பளுவான வேறுபொருள்களுமதிலுண்டு. எல்லாவுலோகங்களிலும் இரும்பானது சுலபமாய் தகடாக விரிக்கக் கூடியதல்ல. ஆனல் இரும்பைக் கம்பியாக நீட்டலாம். இரும்பின் தூள்கள் உறுதியாய்ப் பிடித்துள்ளன. செம்பைவிட இரும்பு உறுதியில் இருமடங்கதிகப்பட்டது; சுற்றளவில் சிற்றளவைக்கொண்ட ஓர்இரும்புக்கம்பியானது மிகப்பளுவுள்ள பொருளையுந் தாங்குமியல்புடையது. இரும்பைவிட செப்புக் கம்பியானது அதிகப் பளுவைத் தாங்கும். அதன் காரணத்தை முன்னமேயே கண்டறிந்தோம். எல்லாவுலோகங்களிலும் இரும்பானது எளிதில் உருகாது. அதைவிட இனிவரும் பிளாட்டினம் (Platinum) என்னுமோர் உலோகம் உருகுவது கடினம்.

இரும்புச் சுத்தக்கரி (Carbon)யுடன் கலந்து வெவ்வேறு வகையாகும். அவை சீனச்சட்டியென்று (Cast iron)அழைத்து வரப்பட்ட முருட்டு இரும்பாகவும், தீர்ந்தஇரும்பு என்று (Wrought iron) கூறத்தக்க சற்றுச்சன்னமடையப் பெற்று உபயோகமுள்ள இரும்பாகவும் (இதுதான் தேர்ந்த இரும்பென்று சாதாரணமாய்ச் சொற்பழக்கத்தில் ஆகிவருவது) மற்றும் சன்னத்தை அதிகமாக மேற்கொண்ட எஃகாகவும் (Steel) விளங்குகின்றன. நீரைத்திரளாகக்கொண்ட காற்றில் இரும்பானது துருவடைகிறது. அத்துருவை யெளிதில்நீக்கலாம். ஏனெனில்துருவெகுசீக்கிரத்தில் விட்டகலுமியல்புடையது. இரும்புடன் களிமண் சேர்ந்திருந்தால் சுண்ணும்புக் கற்களைக் கொண்டெரித்தபின் இரும்புவிலகச் சுண்ணும்பும் களிமண்ணும் களிம்பாக ஒன்றுசேர்ந்து மேலேதங்கும். அதையெடுத்துப் பாதைகளுக்கு மெதுவுகொடுக்க உபயோகிக்கலாம். ஆதலால் இரும்புடன் களிமண் சேர்ந்திருந்தால் சுண்ணும்புக் கற்களைக் கொண்டும், இரும்புடன் சுண்ணும்பு கலந்திருந்தால் களிமண்ணைக்கொண்டும் கலந்து இரும்பைச் சுயமாக அடையக்கூடுமென்று விளங்குகின்றது. இரும்பு மணலுடன்சேர்ந்திருந்தால் சுண்ணும்புக் கற்களையும் களிமண்ணையும் சேர்த்து இரும்பைப் பிரிக்கக்கூடும்.

இரும்புமண்ணிலிருந்து வரப்பட்ட சுத்த இரும்புகளில் முதலாவது சீனச்சட்டி (cast iron); பிறகுஅதனின்று தீர்ந்தஇரும்பை (wrought iron)

பெறலாம். கடையில் தீர்ந்த இரும்பிலிருந்து எஃகை (steel) அடையலாம். இவையெல்லாம் சுத்தக்கரியளவில் வித்தியாசப்படுகின்றன.

சினைச்சட்டி (cast iron) யிரும்பில் எட்டுவிதமுண்டு. அவற்றுள் சாம்பல் நிறமுடைய இரும்பானது மெதுவான இரும்பு. அதை உருக்கினால் மிக ஜலமாயிருக்கும். அதை வார்ப்புவேலை செய்வதற்கு விசேஷமாயுபயோகிப்பார்கள். வெண்ணிறங்கொண்ட இரும்பானது சாம்பல் நிறத்தை விடச் சீக்கிரத்திலுருகும். ஆனால் அது வெகு ஜலமாக உருகாது. அதைக் கொண்டுதான் தாலங்களையும், தூண்களையும், ஆயுதங்களையுஞ் செய்வார்கள்.

இரும்புடன் கந்தகத்தைச் சேர்த்தெரித்தால் இரும்பு தளரும். மணலின் சத்து (Silicon)ச் சேர்ந்துள்ள இரும்பானது சீக்கிரம் உடையும்.

தீர்ந்த இரும்பானது (wrought iron) சினைச்சட்டிஇரும்பைவிட (cast iron) சுத்தக்கரியைக் குறைவாகக் கொண்டுள்ளது. ஆகையால் தீர்ந்த இரும்பு சீக்கிரத்தில் உருகாது. ஆதலால் இவ்வகை இரும்பைக் கொண்டுதான் பெரிய யந்திரங்களின் நீர் கொதிக்க எரிக்கும் குழாய்களைச் செய்கிறார்கள். தீர்ந்த இரும்புச்சட்டங்களைப் பலவாகக்கொண்டு சிவப்புநிறம் பொருந்தக்காய்ச்சி ஒன்றாகச்சேர்த்து ஒரே இரும்புச்சட்டமடிக்கலாம். ஆகையால் இவ்வகை இரும்பினாலாகிய பொருள் யாதாயினுங்கெடுதியடைந்தால் அதை மறுபடியுஞ் சீர்திருத்தல் கூடும். தீர்ந்த இரும்பில் மூன்றுவிதமுண்டு. அவைகளை முதல்தரம் இரண்டாந்தரம் மூன்றாந்தரமிரும்பென்று கூறுவர். முதல்தரமானது கெட்டியாயும் விரைவில் ஒடியத்தக்கதாயுமுள்ளது. இத்தரத்தை ரயில்பாதைகளில் உபயோகிப்பார்கள். முதல்தரத்து இரும்பிலிருந்து இரண்டாந்தரத்தைக் கொள்வர். இது நாரைப்போல் உறுதியாயுள்ளது. இதினின்று மூன்றாந்தரத்துத் தீர்ந்தஇரும்பைக் கொள்வர். இது மிக்க உறுதியைக்கொண்டது. நார்போன்ற இரும்பை அடிக்கடி உபயோகித்தால் வணங்காதுடையத்தக்கது. ஆகையால் இரண்டாந்தரம் மூன்றாந்தரமான இரும்புகளைக் கொண்டு செய்துள்ள ரயில் வண்டிச்சக்கரங்களை ஓடுங்கால் அப்போதைக்கப்போது தங்குமிடங்களில் பெருஞ்சுற்றியால் தட்டிப்பார்த்துப் பரிசோதித்து வருகிறார்கள்.

தீர்ந்தஇரும்பைச் சிவக்கக்காய்த்தபின் தண்ணீரிலாவது எண்ணெயிலாவது அமிழ்த்தினால் சற்றேனும் சுத்தக்கரியாயிருந்தாலொழிய இரும்புக்கு ஒன்றுமுண்டாவதில்லை. சுத்தக்கரி சற்றேனுமிருந்து அமிழ்த்தினால் இரும்பு உறுதியை அடைந்து வளையத்தக்கதாய் மெல்லிய ஓரங்களைக்கொண்டு எஃகாகும் (steel). இவ்விதமுண்டாக்கிய எஃகைக் காய்ச்சி மெதுவாக

க்குளிரவைத்தால் உறுதியையும், வளையுந்தன்மையையும் இழந்துவிடும். எஃகாக்குவதற்கு நீரைவிட எண்ணெய் சிறந்தது. எஃகிலும் உறுதியும் மெலிவும் பெற்ற இரண்டுவகையுண்டு. எஃகுச்சட்டங்களை ஒன்றுடன் ஒன்றாகச்சேர்த்து வைத்தெரித்தடித்தால் ஒன்றாகமாட்டா.

அன்னபேதி (Sulphate of iron) யென்பதை மருந்துக்காகவும் எழுதுவதற்காகுமைக்குக் கலவைப்பொருளாகவும் பார்த்துவருகிறோம். இஃதோர் இரும்பு உப்பு.

6. **அலுமினியம்:**—(Aluminium) இவ்வுலோகத்தை எப்பொழுதும் சுயஸ்திதியில் அகப்படக்காணுவதில்லை. ஆனால் அலுமினியம் கலந்துள்ளபதார்த்தங்கள் மிகுதியாயுண்டு. குருந்தக்கல் (Emery) முதலான கற்களில் அலுமினியமுண்டு. களிமண் முதலானவற்றிலும் அலுமினியத்தை மிகுதியாகக் காணலாகும்.

அலுமினியமானது வெண்மையாகவும், அகலமாய்த்தட்டக்கூடியதாகவும், வளையக்கூடியதாகவும், இலேசாகவுமிருக்கக் காண்கிறோம். இப்போது நமதுதேசத்தில் அலுமினியத்தாலம் கிண்ணங்களையும் மற்றப்பாத்திரங்களையும் கையாடிவருகிறோம். காற்றில் அலுமினியம் கருக்கிறதில்லை. அலுமினியத்தைக் காய்ச்சினால் உருகும்; ஆனால் கொதிக்காது. மற்ற உலோகங்களுடன் அலுமினியம் சுலபமாய்க் கலக்கிறது. அலுமினியத்தைக் கொண்டு அதைப்போன்று 10-மடங்குப் பாரங்கொண்ட செம்புடன் கலந்தால் மஞ்சள் நிறம்பெற்று **அலுமினியப் பொன்** (Aluminium gold) என்று கூறத்தக்க பொருளாகிறது. இத்துடன் ஜர்மன்வெள்ளியை வைத்து ஆராய்ந்துகூறலாம். கற்கண்டைப் போன்று கண்ணுக்குப்புலப்படும் **படிக்காரம்** (Alum) அலுமினியம் கலந்துள்ளது. இதைத் தட்டார்கள் உபயோகிப்பார்கள். மேலும் கண்ணோய்வந்தால் இதை நீரிற்கரைத்துக் கண்ணுக்குள் விடுவதுமுண்டு. நவச்சாரத்தைச் செய்யும் வழியில் அன்னபேதியையு மடையக்கூடும் (Green Virtriol or sulphate of iron). மேலும்நவச்சாரத்தையும் மற்றும் சில அலுமினியன் சேர்ந்துள்ள உப்புக்களையுங்கொண்டு சாயம் துணியில் உறுதியாய் நிற்கச்செய்யலாம். துணியை ஆரம்பத்தில் நவச்சாரங்கரைத்துள்ள தண்ணீரில் தோய்த்துப் பிறகு சாயத்தி லமிழ்த்தினால் நவச்சாரமும், சாயமும், துணியின் பஞ்சும் ஒன்றாகச் சேர்ந்து ஒட்டிப்போய் உலர்ந்தபின் துணியை நீரில் நனைத்தால் அவையகலாவாகையால் சாயம் விட்டகல்வதில்லை.

7. **வாதரஸம்:**—(Mercury) வாதரஸம், பொன், வெள்ளி, பிளாடினம், மற்றும்சில உலோகங்களாகிய இவைகளை கம்பீரம்பொருந்திய உலோக

ங்களாகக் கூறுவதுண்டு. ஏனெனில் அவை எல்லாவுலோகங்களினும் சிறப்புடையன. உலோகங்களெல்லாம் ஏறக்குறையக் கனஸ்திதியிலிருக்க வாதரஸம் மாத்திரம் சாதாரணவெப்பத்தில் ஜலஸ்திதியடைந்துள்ளதை முன்னமேயே படித்துவந்தோம். வெவ்வேறிடங்களில் பூமியில் வாதரஸமானது துளிகளாய்ப் பரவியுள்ளது. இதை இத்தலி தேசத்தில் காணலாம். **பவள மனேசிலை** (cinnabar) என்னும் உலோகமண்ணில் வாதரஸம் கலந்துள்ளது. ஆகையால் பவள மனேசிலையினின்று வாதரஸத்தைச் சுயமாயெடுக்கலாம். பவள மனேசிலையானது வாதரஸமுங் கந்தகமும் கலந்துள்ளது. அதைத்தனியாக எரித்தாலாவது அல்லது சுண்ணாம்பைச் சேர்த்தெரித்தாலாவது வாதரஸம் தனியாகப்பிரிகிறது. வெகு குளிர்வையடைந்தால் வாதரஸம் இறுகிப்போம். மிக்க வெப்பத்தில் வாதரஸம் பொங்கும். காற்றில் வாதரஸம் கருக்காது. ஆனால் வெப்பமதிகமானல் கற்பூரத்தைப்போல் கண்ணுக்குப்புலப்படாமல் ஆவியாய்ப் பறந்துபோம். நீரைப்போல் வாதரஸமானது கண்ணாடியில் ஒட்டிக்கொள்வதில்லை. மேலும் வாதரஸத்தைக் காய்ச்சினலோ அதுகாற்றினின்றும் பிராணவாயுவுடன் கலந்து சிவப்புப்பொடியாகிறது. கருநிறங்கொண்ட வாதரஸப் பொடியுமுண்டு. பொன் வெள்ளிகளோடு வாதரஸம் விரைவில் கலக்கும். ஆகையால் வெள்ளிகலந்துள்ள மண்ணிலிருந்து வெள்ளியைச் சுயமாக எடுக்கவேண்டுமானல் அம்மண்ணுடன் வாதரஸத்தைக் கலக்க வாதரஸம் வெள்ளியுடன் கலந்து வெள்ளியைமண்ணினின்று அகலச்செய்யும். அவ்விதமகன்றபின் காய்ச்சினல் வாதரஸம் விட்டகன்று வெள்ளியைச் சுயமாக்கும். ஆகையால் பொன் வெள்ளி முதலியவைகளைச் சுயமாய் நீக்கவல்லது வாதரஸமென்று கற்கின்றோம். ஈயம்பூசின இரும்பைத்தகரமென்பர். ஆனல் அவ்வகைத் தகரத்தை இங்கிலீஷில் டின் (tin) என்பது பிழை. ஏனெனில் டின் (tin) என்னும் உலோகமொன்று தனியாகவுள்ளது. இவ்வுலோகத்துடன் வாதரஸத்தைக் கலந்து பார்வைக் கண்ணாடிகளுக்காகப் பின்புறத்தில் பூசுவார்கள்.

வாதரஸத்தைப் புடம்வைத்தெரித்து அதிவெள்ளைச்சிந்தூரம், சவ்வீரம் ஆகிய இவைகளைப் பொடியாய் மருந்திற்காக எடுத்து உபயோகிப்பார்கள். சவ்வீரம் (corrosive sublimate) என்பது மிக்க பாஷாணமானவஸ்து. அது பளிங்குக் கற்பொடிபோல் காணும். அது நீரில் கரையத்தக்கது.

8. **வெள்ளி:**—இவ்வுலோகத்தைப் பூமியினின்று தூளாகவும் பனிக்காகவும் (fibrous and crystallised) உருவமற்றும் எடுப்பார்கள். வெள்ளியானது பிராணவாயுவுடன் கலந்து சுரங்கங்களில் மண்ணுடன் கலந்துள்ளது. அது கருப்பாயும் தட்டையாக அடிக்கத்தக்கதுமாயுமிருக்கும். ஈயங்

கலந்த மண்ணில் வெள்ளியுந் தங்கும். மேலும் வெள்ளியானது செம்புகலந்துள்ள மண்ணிலுமிருப்பதால் செம்புடன் கலந்து வரும். இவ்விதம் வெள்ளியானது செம்புடன் கலந்திருந்தால் ஈயத்தைச் சேர்த்து வெள்ளியைப் பிரிக்கலாகும். கந்தகத்துடன் கலந்த வெள்ளியுமுண்டு. அது கருநிறங் கொண்டுள்ளது. அதைத்தகடாக அடித்துப் பதக்கங்கள் (medals) செய்யலாம். சுத்த வெள்ளியானது வெண்மையாயும் பளபளப்பாயுமுள்ளது. உறுதியில் பொன்னைவிடத் தாழ்ந்தும் செம்பைவிட அதிகரித்துள்ளதுமாம். பொன்னைத்தவிர மற்றெல்லா வுலோகங்களைப்பார்க்கினும் அதிகமாய் அகலவும் நீளவுங்கூடியது. ஆனால் பொற் பொடிகளைப் பார்க்கிலும் வெள்ளிப் பொடிகள் வெகு உறுதியாய்ப்பிடித்துக்கொள்வன. வெள்ளி உருகுமியல்புடையது. வெறுந்தீயையும், சூக்ஷ்மத்தீயையும், வெள்ளியானது நன்றாகச்செலுத்தும் (conduct). காற்றிலுள்ள சற்றுக் கந்தகத்தினால் வெள்ளி கருக்கும். வெள்ளி நாணயங்கள் வெள்ளியும் செம்புங் கொண்டாகியன. வெள்ளியைவெகு இலேசான தகடாயடித்து மற்றோர் உலோகத்தின் மேல் அமுக்கினால் மேற்றகடாக ஒட்டிக்கொள்ளும். வெள்ளியை வாதரஸத்திற் கலந்து மற்றோர் உலோகத்திற்றடவிப் பிறகு காயவைத்தால் வாதரஸம் விட்டகன்று வெள்ளியை அவ்வுலோகம் பெறும். புண்படுத்துவதற்காக வெள்ளி யாலாகிய திராவகமொன்றை (Lunar castic or silver nitrate) உபயோகிப்பார்கள். அதைக் கட்டியாகவும் கொள்ளலாம். மற்றும் படமெடுக்குந்தொழிலில் (Photographing) அத்திராவகத்தை விசேஷமாக உபயோகிப்பது வழக்கம். வெள்ளியினால் நகைகளையும் பாத்திரங்கள் முதலியவைகளையும் செய்து வருவது எல்லோருக்குந்தெரியும்.

9. **பொன்:**—பொன், மண், பெண்ணென்பதாய் ஆபரணங்களுக்கும், பூமிக்கும், பத்னிக்கும் சொற்களை விசேஷமாகச் சொல்லி வருவது வழக்கம். ஆதலால் எல்லா ஆபரணங்களுக்கும் **பொன்**னென்று எடுத்துச் சொல்வதற்குக் காரணம் உலோகங்களில் பொன்னானது சிறப்புடையதென்பதேயாம். இவ்வகைப் பொன்னானது இயற்கையில் சுயமாக அகப்படக்கூடியது. மேலும் கற்களில் கலந்திருக்கவுங் காணலாம். பொன் மஞ்சள் நிறத்ததும், பளபளப்புள்ளதும், பளுவானதுமான ஓர்பொருள். பொன்னைத் தகடாக அடிக்கலாம். வெகுலேசான தகடாகப்பொன்னை யடித்து அதன் மூலமாகப்பார்த்தால் ஓர்விதப் பசுமைநிறவொளி காண்கின்றது. பொன்னைக் கம்பிகளாக இழுக்கக்கூடும். காற்றில் பொன் எவ்விதத்திலுங் கெடுவதில்லை. ஆகையால் ஆபரணங்களுக்குப் பொன் விசேஷமாயுபயோகமாகிறது. பொன்னினால் நாணயங்களைச் செய்து வருகிறார்கள். பொன்னை வெகு மெலியதகடுகளாகத் தட்டி பொன்ரேக்குகளென்று கூறுவர். இவ்வித ரேக்குகளைக் கொண்டு நகைகளுக்கு ஒளியைச் செய்விப்பதுண்டு.

# A HAND BOOK

OF

# SANITARY SCIENCE

BY

**PANDIT S. M. NATESA SASTRY,** B. A., M. F. L. S.

**For the use of Students**

*An easy and popular exposition of the whole subject.*

---

## சுகசந்தர்சனதீபிகை.

இது

மாணாக்கர்கள் சுகாதாரமுறைகளை

எளிதில் அறிந்துகொள்ளும்படி

பண்டித. எஸ். எம். நடேசசாஸ்திரியாரால்

பலநூல்களை ஆராய்ந்து எழுதப்பெற்றது.

---

"செந்தமிழ்"ப் பிரசுரம்—கஎ.

---

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு.

விசுவாவஸு—௵ கார்த்திகை௴.

**1905.**

## பதினைந்தாம் அதிகாரம்.—

# மனோராச்சியம்.

# Chapter XV—Mind as connected with the science of hygeine.

நம்முடைய சரீரமானது எல்லாவிதத்திலும் சௌக்கியமாக விருந்தாற்றான் நமது புத்தியும் மனதும் சரியான நிலைமையிலிருக்கும் என்றும் நமது தேசத்தில் கீர்த்திபெற்ற பெரியோர்கள் எல்லாரும் பெரும்பாலும் தங்களுடைய மேலான சரீரசௌக்கியத்தாலேயே புத்தியின் புகழைப்பெற்று அப்புத்தியின் மேன்மையால் கௌரவப்பட்டார்கள் என்றும் சொல்லலாம். நன்றாகப்பேசி வைக்கீல் என்று பெயர் எடுப்பதற்கும் அவ்வாறே நன்றாகப் பாடங்களைச் சொல்லிக்கொடுத்து உபாத்தியாயர் என்று பெயர்வாங்குவதற்கும் நமது கண்டம் சுவாசாசயம் இவைகள் திடமாயிருக்கவேண்டுமல்லவா?

நமது சென்னையில் ரங்கனாதசாஸ்திரி என்ற ஜட்ஜி ஒருவர் 40 வருஷங்களுக்கு முன்பாகவிருந்தார். அவர் தமது வித்தையில் எவ்வளவு புகழ்பெற்றாரோ அவ்வாறே தமதுதேகபலத்தாலும் புகழ்பெற்றிருந்தார். படிப்பு மட்டுமல்ல, நாம் எத்தொழிலைச்செய்ய எத்தனித்தபோதிலும் அத்தொழிலைச் சரிவரச்செய்யத் தேகபலம் முக்கியஆதாரம். சரியானபலம் நமக்கிருக்க நாம் நல்ல ஜீரணசக்தியுள்ளவர்களாகவிருந்து நல்லவிதமான உணவையும் உட்கொள்ளவேண்டும். இவ்வாறு நாம் ஒன்றைத்தொட்டு மற்றொன்றை விசாரிப்போமேயானால் எல்லாம் சுகசந்தர்சனமுறைப்படி நமது தேகத்தை சௌக்கியமாக வைத்துக்கொண்டாற்றான் நமது புத்திசரியாக விருக்கும் என்று ஏற்படும். இடைவிடாது ஒரு தொழிலை நாம் நடத்த நமது தேகத்தில் பலம் அவசியம் வேண்டும் என்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டுமல்லவா? நமக்கு சுகஸந்தர்சன வழிகளின்படி சீரான தேகசௌக்கியம் ஏற்பட்டாலன்றோ நாம் அவ்வாறு உழைக்கலாம். அவ்வாறு உழைப்பதாலல்லவா நமது புத்திக்குத்தகுந்தபடி புத்தியின் மேன்மையை விளக்கச்செய்யும் தொழில்களை நாம்செய்யலாம்.

சிலர் சிறுவர்களாகவிருக்கும்பொழுதேஎப்பொழுதும்சோம்பேறிகளாகவிருந்துகொண்டுங் காலத்தில் ஸ்நானம் செய்யாமலும், அழுக்குநிரம்பிய தேகங்களுடன் பார்ப்பவர்கள் பழிக்கும்படி வெகுகெட்டவழக்கங்களுள்ளவர்களாயும், உரிய வேளையில் சாப்பிடாமலும், வியாயாமம்செய்யாமலும், எப்பொழுதும் சுகஸந்தர்சன முறைகளுக்கெல்லாம் விரோதமாகவே யிருந்து

கொண்டு வருவார்கள். அவர்கள் பெரும்பாலும் புத்திமான்கள் என்ற பெயர்வாங்கவே மாட்டார்கள். சுகஸந்தர்சனமுறைகளை அனுசரிக்காத காரணத்தால் நமது புத்தியின் பலம் குறைவுபடுகின்றது என்பதை இது காட்டுவதுடன், அதிலிருந்து நாம் ஊகிக்கக்கூடிய சித்தாந்தமான சுகஸந்தர்சன முறைகளை நாம் அனுசரிக்க நம்முடைய புத்தியின்பலமும் மனதின் ஆனந்தமும் அதிகரிக்கின்றன என்பதும் வெளியாகின்றது.

"அவனிடம் அதிகமாகப்பேசாதே" அவன் வயிற்றுவலிக்காரன், அவன் எப்பொழுதும் சிடுசிடு என்று இருக்கின்றான். அவனுக்கு ஏதாவது மூலோபத்திரவம் உண்டாஎன்ன" என்றுஜனங்கள்சொல்லுவதை நாம்பெரும்பாலும் கேட்டிருக்கின்றோம். இவ்வசனங்களுடைய தாத்பரியம் என்னவெனில் நமது தேகசௌக்கியத்துக்குத் தக்கபடி நமது குணமிருக்கும் என்பதேயாம். நன்றாகத்தேறின பலமுள்ளவன் சிரிப்பும் விளையாட்டுமாக விருந்துகொண்டு ஒன்றுக்கும் அஞ்சாமல் மனோதைரியமாகவிருப்பான். ஏதாவது ஓர்விதமான சங்கடங்கள் அல்லது துக்கங்கள் சம்பவித்தால் அத்துடன் முழுகிப்போகாமல் உடனே உதறிவிட்டு எப்பொழுதும்போல சந்தோஷமாகவே யிருப்பான். இவ்வாறு ஒருவன் மனோதைரியத்துடனிருப்பதற்குக்காரணம் அவனுடையமேலான தேகசௌக்கியமே ஒழியவேறல்ல.

இவனைவிட்டுச் சோகைபிடித்த ஒருவனை எடுத்துக்கொண்டுகொஞ்சம் பேசுவோம். அவன் முகம் வெளுத்துப் பார்ப்பதற்குச் சிறிது அழகாயிருப்பவன்போலக் காணப்படுவான். அவனுக்கு தேகத்தில் பலம் கிடையாது. அவன் தான்செய்யவேண்டியதொழிலை எப்பொழுதும் மெதுவாகவே செய்வான். நன்றாகச்செய்யவும் புத்தியிருக்கமாட்டாது.

பித்ததேகக்காரன் எப்பொழுதும் சிடுசிடு என்று கோபித்துக்கொள்ளுவான். இவனுக்குத்தனது போசனத்தைசரிவரச்செரித்துக்கொள்ள சக்திக்குறைவு இருக்குமாகையால் இவன் மனதும் இவன் வயிறும் எப்பொழுதும் வருத்தப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

பலஹீனன்—இவனுக்கு எப்போதும் மூக்கின்மேற்கோபம். எப்பொழுதும் புதியகாரியங்களையே ஆரம்பித்துக் கொண்டிருப்பான். ஒருகருமத்தையாவது சரிவரச்செய்து முடிக்கான். இவனுக்குப்புத்தி அதிகக் கூர்மையாகவேயிருக்கும். ஆனலிவன் மனம் ஒரேநிலையில் நிற்காதாகையால் எப்பொழுதும் தத்தளித்துக்கொண்டேயிருக்கும். அக்காரணத்தால் இவன் தனது புத்தியின் மேன்மையினுடைய பயனை அடையமாட்டான்.

இவ்வகை சுபாவங்களை நாமிங்கு எடுத்துக்காட்டியதின் முக்கியகருத்து நமது சரீரத்துக்கும் நமது மனத்திற்கும் எவ்வளவோ சம்பந்தங்களிருக்கின்றன என்பதேயாம். ஆகையால் நமது சரீரத்துக்கு சௌக்கியத்தைக் கொடுக்கின்ற சுகஸந்தர்சனவழிகள் நமது மனதிற்கும் சௌக்கியத்தை விளைவித்து நமது புத்தியையும் விசாலப்படுத்தவேண்டும்.

தேகசௌக்கியமும் மனதின் சௌக்கியமும் ஒன்றுடன் மற்றொன்று சீராக சம்பந்தப்பட்டிருக்கின்றமையால் இவ்விரண்டையும் நாம்சரியான நிலைமையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்படுகின்றதல்லவா?

நாம் நமது மனதுக்கு ஆயாசமான காரியங்களைக் காலத்துக்குத்த கபடி கொடுக்கவேண்டும். அதாவது நாம் சாப்பிட்டவுடனே படித்தல் அல்லது தேகசிரமமுண்டாகும்படி கஷ்டப்பட்டு வேலைசெய்தல் இவை முதலியவைகள் ஜீரணத்தைக்கெடுக்கும்; அவ்வாறு யோசித்துப்பார்க்காமல் நாமிப்படியே தினந்தோறும் செய்வோமேயானால் நோயாளியாவோம்; இரவில் அதிககாலம் கண்விழித்துச் சக்தியில்லாமலிருக்கும்பொழுது அதிகமாகப்படிப்போமேயானால் தூக்கங்கெட்டு நோயாளிகளாவோம். நாம் அதிகமாகப்படிப்பதினால் சிலவேளைகளில் தலைவலிமுதலிய சிரோநோய்களால் நாம் அவஸ்தைப்படுவோம்.

இவ்விதமான நோய்களால் நாம் வருந்துதற்குச் காரணம் நமது சக்திக்குமேலாக மனதை வருத்தி நாம்படிப்பதே காரணமாகும். அவ்வாறு காலமில்லாக் காலத்தில் கசக்கப்பட்டு நமது மூளைவறண்டு மனதானது தான் செய்யவேண்டிய நியாயமான தொழிலைச் செய்யாதவண்ணம் மாற்றி நமது புத்தியைக் குறைத்துவிடும்.

இங்கிலாந்தில் சில சமாசாரப் பத்திரிகைகள் சித்திரத்துடன் அச்சிடுகின்றார்கள். அப்பத்திரிகைகளொன்றில் ஒரு சமயத்தில் ஒரு மகமதிய வாலிபனை அவனுடைய இருகரங்களிலும் பந்தைக்கொடுத்து சித்திரம் எழுதப்பட்டிருந்தது. அப்படியே ஓர் அந்தணனை அவனுடைய இருகரங்களிலேயும் புஸ்தகங்களைக் கொடுத்தும் ஓர் அங்கிலேய இளைஞனை அவனுடைய ஒரு கையில் புஸ்தகமும், மற்றொரு கையில் பந்தும்கொடுத்துச்சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. 'இச்சித்திரங்களின் தாத்பரியம் மகமதியர்கள் தங்கள் மனதை விசாலமாக்க ஒன்றும் செய்யாமல் தங்களுடைய தேகசௌக்கியத்திலேயே கண்ணுங் கருத்துமாக விருக்கின்றார்கள் என்றும் அந்தணர்கள் இதற்கு நேர் விரோதமாக எப்பொழுதும் தங்கள் புத்தியை அதிகரித்துக் கொள்ளுவதிலேயே கவலையுள்ளவர்களாக விருந்துகொண்டு தங்க

னுடைய தேக சௌக்கியத்தைப்பற்றி அவ்வளவு கவனிக்கின்றார்களில்லை என்றும் ஆங்கிலேயர்களோ வென்றால் தங்கள் தேக சௌக்கியத்தையும் அப்படியே தங்களுடைய மனதின் சீர்திருத்தத்தையும் கவனிக்கின்றார்கள் என்றும் அருத்தமாகின்றது.

நமது தேகத்தையும் நமது புத்தியையும் அங்கிலேயர்களைப்போல் சரிவரச் சீராகவளர்த்தாற்றான், நாம்எல்லாவிதத்திலும் சௌக்கியப்படுவோம். அப்படிச் செய்வதற்குபிரதியாகஎப்பொழுதும் நாம் நமதுபுத்திக்கு அதிக சிரமத்தைக்கொடுத்துக்கொண்டுஇடைவிடாது படித்துக்கொண்டேயிருப்போமாகில் நமது சரீர சௌக்கியத்தை நாமிழந்து நமது படிப்புகளை நிறைவேற்றிக் கொண்ட பிறகு நாம் பலமற்றவர்களும், படித்த நோயாளிகளுமாகவிருப்போம். அவ்வாறிருப்பது நமக்கு மிகவும்மனோவருத்தத்தை உண்டாக்குமேயன்றி சந்தோஷத்தைத் தரமாட்டாது.

நமது சரீரத்தில் நல்ல பலமும் நமது புத்தியில் மேன்மையுமிருந்தாற்றான் நாம் உற்சாகத்தோடு கூடியவர்களாய் ஒவ்வொரு காரியத்தையும் மேற்போட்டுக்கொண்டு ஊக்கமாக நடத்திவருவோம். இல்லாவிடில் வெகு பயங்கொள்ளிகளாக விருந்துகொண்டு 'சோமாரிகள்'என்றபெயரும் எடுத்து எல்லாராலும் பழிக்கப்படும் தன்மையை அடைவோம். இவ்வுலகத்தில் நாம் செய்யவேண்டிய பல கடமைகளுக்கு எப்பொழுதும் தேகபலமும் புத்திக் கூர்மையும், உற்சாக சக்தியும் அவசியம் வேண்டுமாகையால் இவைகளையெல்லாம் எளிதிலடைய சுகஸந்தர்சனமுறைகளின் ஞானம் முக்கியம்.

நமது சரீரம் ஓர் யந்திரம் போலாம். இந்தயந்திரத்தை ஓட்டிவைப்பது மனது. யந்திரத்தின் ஒவ்வோர் அம்சமும் சரியான நிலைமையிலிருந்தாற்றான் மனமென்பது இவ்வியந்திரத்தை ஓட்ட முடியும். இவ்வாறு நம்முடைய சரீரத்தை சரியான ஸ்திதியில் வைப்பது நம் நமது தேகத்துக்கு வேண்டியவைகளாகின்ற காற்று, நீர், ஆகாரம், உடுப்பு முதலியவைகளை சுகசந்தர்சன முறைப்படி நன்றாகத்தெரிந்துகொள்ளுவதேயாம்.

சுக சந்தர்சன முறைகளை அறிந்து நடப்பதால் தேகசௌக்கியத்தையும் மனோசௌக்கியத்தையும் அதிகரித்துக் கொள்ளுகின்றோம். இவ்வித சௌக்கியங்களின் பயன் நமது ஆயுள்நாட்களை அதிகரித்துக் கொள்வதேயாம். மனதிற்கு அது சகிக்கக்கூடியதைவிட அதிகக்கிலேசங் கொடுப்பதாலும், சிற்றின்பங்களில் அதிககாலம் கழிப்பதாலும் நாம் ஆயுளைக் குறைத்துக் கொள்ளுகின்றோம்.

ஒவ்வொருவனும் தினந்தோறும் எவ்வளவு நாழிகை படிப்பு முதலிய புத்திக்கிலேசமான காரியங்களிற்செலவிடுவது தேகசௌக்கியத்துக்கு

குறைவில்லாமலிருக்கும் என்ற சர்ச்சை தனியாகப் பலபேர்கள் செய்திருக்கின்ருர்கள். இந்த விஷயம் ஒவ்வொருவனுடைய வயதின் கிரமத்தையும் வழக்கத்தையும் ஒத்திருக்கின்றது. புத்தியின் பிரபலமான தசை 20-வயதுக்கு மேல் 45-அல்லது 50-வயதுக்குள் என்றும், 50-வயதுக்குமேல் அதிக புத்திக்லேசத்தை நாம் கொஞ்சம் குறைக்காவிட்டால் நமதுபுத்தியும் தேக சௌக்கியமும் கெட்டுவிடுமென்றும் பிரசித்த சுகஸந்தர்சன சாஸ்திரிகள் சொல்லியிருக்கின்ருர்கள். காலமிடம் வயது எல்லாவித சௌகரியங்களையும் சரிவரப்பெற்ற ஒவ்வொருவனுக்கும் சற்றேறக்குறைய நாள்தோறும் இரண்டுஜாமம் அதாவது 6-மணிகாலம் மனதை உபயோகிக்கும் காரியங்களாகின்ற படிப்பு, எழுத்து முதலியவிஷயங்கள் செய்யலாம் என்றும் அதற்குமேற் செய்வது தேகசௌக்கியத்தைக்குறைக்கும் என்றும் சொல்லியிருக்கின்ருர்கள். இப்படிச்செய்யாமல் சிலர் ஒன்றும் பயமில்லையென்று எண்ணி அதிகமாகத்தங்கள் மனதிற்குக் கிலேசமுண்டாக்கிக்கொண்டு படிப்பார்கள். அவர்களுடைய மனோபலம் திடீர் என்று குன்றும். சிலருக்குப் பைத்தியமுண்டாகும். நமது புத்தியை அதிகமாக உபயோகித்த காரணத்தால் நமக்கு தேகசௌக்கியம் குறைந்தது என்பதற்கு நம்முடைய தூக்கம் எப்பொழுதும்போலில்லாமல் கொஞ்சம் கொஞ்சமாகக்கெட்டு படுக்கையில் நாம் படுத்ததுமுதல் கண்டுஞ்சல் என்பதேயின்றிக் கனவும், விழிப்புமாய் அவஸ்தைப்படும் நிலைமையில் வருவோம். இவ்வித அவஸ்தைகள் இரண்டொருமாதம் நம்மைப் பாதிக்குமேயானுல் நாம் நமது எல்லாவித வியவகாரங்களையும் விட்டுவிட்டு உடம்பைச் சீர்திருத்திக்கொள்ள தேசாடனம்செய்தேதீரவேண்டும். சிலர் சௌக்கியமடைவார்கள். மற்றுஞ் சிலர் தாங்கள் சுகஸந்தர்சன முறைகளை அலட்சியம் செய்ததின்பயனை அனுபவிப்பார்கள்.

அதிகச்செலவுசெய்து அழிந்தானென்று ஜனங்கள் சொல்லுவதின் உண்மையை நாம் சிலகுடும்பங்களில் பார்த்திருக்கலாம். நமது தேகசௌக்யம் மனோசௌக்யம் இவ்விருவித சௌக்யங்களையும் நாம் நன்ருகப்பரிசோதித்துப் பார்ப்போமேயானுல் அதிகச்செலவால் அழிந்துபோவதின் உண்மையை இவ்விருவித சௌக்யங்களிலேயும் நாம் காணலாம். அதிக வியாயாமம், அதிகபுத்திக்கிலேசம் இவைகளால் 70, 80 வயதுவரையிலிருக்கும் உயிரை 40, 50-வயதுக்குள் சிலர் சுகஸந்தர்சன முறைகளைக்கவனிக்காத காரணத்தால் தாங்களே ஒழித்துக்கொள்ளுகின்ருர்கள். அவ்வாறு நாம் செய்யாமல் எல்லாவித அவயங்களுடனும் ஓர்விதக்குறைவுமின்றி எல்லாவித சௌக்யங்களையும் சுகஸந்தர்சன முறைகளை நன்ருக அனுசரிப்பதால் அடையலாம்.

முற்றும்.

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

## விற்கப்பெறும் புத்தகங்கள்.

"செந்தமிழ்" இரண்டு, மூன்றாந் தொகுதிகள் பைண்ட் செய்யப்பெற்று இப்போது விலைக்குத்தயாராகவுள்ளன. கையிருப்பிற் சிலபிரதிகளேயிருத்தலால், வேண்டியோர் உரியபோதே எழுதி வி. பி-தபால் வாயிலாகப் பெற்றுக்கொள்ளக்கடவர். ஒருதொகுதி விலை ரூ 5. 'பைண்ட்' இல்லாதது ரூ 4—8—0.

### சங்கப்பதிப்பு.

| | | ரூ | அ | பை |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்தமூலமும்உரையும் ... ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | ஐந்திணையைம்பதுரை ... ... ... | 0 | 3 | 0 |
| 4. | இனியது நாற்பதுரை, சனாநூல் ... ... ... | 0 | 3 | 0 |
| 5. | புலவராற்றுப்படை (பழையது) ... .. ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் உரையுடன் ... ... ... | 0 | 10 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி உரையுடன் ... ... ... | 0 | 4 | 0 |
| 8. | பன்னிரு பாட்டியல் ... ... ... | 0 | 4 | 0 |
| 9. | அநுமான விளக்கம் ... ... ... | 0 | 4 | 0 |
| 10. | சங்கப்புலவராற்றுப்படையுரை ... ... ... | 0 | 4 | 0 |
| 11. | விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | 0 | 6 | 0 |
| 12. | திணைமாலை நூற்றைம்பது உரை ... ... ... | 0 | 4 | 0 |
| 13. | அட்டாங்க யோகக்குறள் ... ... ... | 0 | 1 | 0 |
| 14. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 3 | 0 |
| 15. | யாப்பு அணியிலக்கணங்கள் [விசாகப்பெருமாளையரது பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தது.] .. | 0 | 8 | 0 |
| 16. | வில்லிபுத்தூரார் பாரதம்—(ஆதிபர்வம், சபாபர்வம் பலபிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது) ... ... | 1 | 0 | 0 |
| 17. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 18. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் (௧௦௫) ... ... | 0 | 1 | 0 |
| 19. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... ... | 0 | 12 | 0 |

### மற்றப்பதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | தருக்காமிர்தம் ... ... | 0 | 8 | 0 |
| 21. | அத்துவித வாக்கியத் தெளிவுரை (ஸ்ரீசிவஞானசுவாமிகள் செய்தது.) ... ... ... | 0 | 4 | 0 |
| 22. | விதானமாலை [சோதிடம்] ... ... ... | 0 | 8 | 0 |

---

☞ விலாசம்:—மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜ்மெண்டு ஆபீஸ், மதுரை

# வி. ஷேக்பரீத் அண்டு கோ.

## மவுண்ட்ரோட், சென்னை.

### முன்விலை 18 ரூபாய்; தற்காலம் ரூபாய் 6.



நெ. 1. 6 ரூபாய் கிரயத்துக்கு லிஸ்டம் ருஸ்கோப்பேடண்டு லீவர்ஜர்மன் வெள்ளி கெடியாரம் 7-வருஷம் உத்திரவாத ஸ்டாம்பு கியாரண்டியுடன் 24 வித இனாம் சாமான்களும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

மிக இலட்சணமும், நாணயமும், சரியான காலத்தைக் காட்டக்கூடியதும் லிஸ்டம் ராஸ்கோப் பேடண்டு லீவர் சுவிஸ்மேட் கெடியாரமானது ஒருபக்கம் அதிக கனத்த கண்ணாடியால் மூடி போட்டது மேல்சாவியுள்ளது. 4 கெம்பு செதுக்கியது. பார்ப்பவர் ஆச்சரியப் படுபடியானது. எந்தக்கம்பேனியிலும் கிடைக்கப்படமாட்டாது. பெயர்போன கம்பேனியாரால் செய்யப்பட்டது. 24 விதமான வினோத சாமான்களும் சேர்த்து ரூபா 6.

இனாம்சாமான்களின் விபரம்.

கெடியாரம் வைக்கும்படியான வில்வெட்பெட்டி 1, கண்ணாடி 1, வில் 1, சீமையில்செய்த வெகு நேர்த்தியான கொலுசு 1, சீமையில் செய்த ஒருபக்கம் எட்வர்ட் சக்கரவர்த்தியும் மற்றொருபக்கம் ராணி அலக்சாண்டிரினாவுமாகிய இவர்களின் பொட்டகிராப்வைத்த லாக்கெட் தொங்கடம் 1, சைனா பேனா 1, கத்தி 1, பூபோட்ட சைனா குட்டை 1, சீமை செண்ட் என்னும் வாசனைபுட்டி 1, ஆஸ்டிரேலியாவில் செய்த மனவுல்லாச பரிமளம் வீசும் ரோஸ் சோப்பு 1, ஷர்ட்டுபட்டன் செட் 1, பூனா சாவிவளையம் 1, குளிர்ச்சிபொருந்திய மூக்குக்கண்ணாடி 1, ஜெர்மன் மணிபாக்ஸ் 1, சீமை தோல்பை எலக்டிரிக் தங்க ஷோக் மோதிரம் 1, ஆஸ்டிரியாவில் செய்த முன்பார்வையில் கண்ணாடிவைத்து உள்புறத்தில் 2 வருஷத்திய காலண்டர் வைத்து 80 பேஜுகள் அடங்கிய வாய்ப்புறத்தில் பென்சல் வைத்த நோட்புக் 1, பென்சல் 1, குழந்தைகள் வாத்தியம் 1, ஜெர்மன் தேசத்தில் செய்த மன்னாதிமன்னர்களாகிய சக்கரவர்த்திகளின் உருவங்களடங்கியதும் நகைகள் வைத்துக்கொள்ளும்படியான டப்பாக்கள் 6, ஆக மொத்தம் 24 வித சாமான்கள் இனாம்.

**V. SHAIK FAREED & Co,**

*Mount Road,* **Madras.**

௳

## ப்ருஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் "மஹாமஹோபாத்தியாயர்" என்னும் பட்டம் பெற்றதைக் கொண்டாடிய

# மதுரைத் தமிழ்ச்சங்கத்துக் கூட்டம்.

நாளது விசுவாவசு௵ தைமீ 5௳ (17—1—06) மாலை $5\frac{1}{2}$ மணிக்கு சேதுபதிஹைஸ்கூல் விக்டோரியா மண்டபத்தே, மதுரைத் தமிழ்ச்சங்கத்தார், மகாவித்துவான் ஸ்ரீமத்-சாமிநாதையரவர்கள் அரசாங்கத்தாரால் "மஹாமஹோபாத்தியாயர்" என்னும் பட்டஞ் சூட்டப்பெற்றதைக்கொண்டாடிக் களித்தற்பொருட்டு ஒரு சபை கூட்டினார்கள். அச்சபைக்குப் பிரபுக்களும் பிரபலராகிய வக்கீல்களும், உபாத்தியாயர்களும், தமிழ்வித்துவான்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். நம் சங்கத்துபாக்கிராசனாதிபதியும், பிரசித்த வக்கீலுமாகிய ஸ்ரீமத்-பி. எஸ். சுப்பிரமணியஐயரவர்கள் பலரும் வேண்டியவாறு அச்சபையின் அக்கிராசனம் வகித்து, ஸ்ரீ சாமிநாதையரவர்களுடைய கல்வியறிவொழுக்கங்களின் மேம்பாட்டைப்புகழ்ந்து அவர்கள் பெற்ற வரிசையில் மதுரைமாநகரும், முக்கியமாகத் தமிழ்ச்சங்கமும் பேரானந்தங்கொண்டுள்ளனவென்று முடித்தார்கள். பின்பு, சங்க அக்கிராசனாதிபதியவர்களாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கள், ஐயரவர்களது அருமைபெருமைகளையும் அவர்கள் தமிழுக்குழைக்குந் திறத்தையும் விளக்கி, அவர்கட்குக் கிடைத்த இவ்வரிசை தமிழுக்கேயாதலால், இத்தமிழ்ச்சங்கம் அவ்விஷயத்தில் அளவற்ற பெருமை பாராட்டுகின்றதென்றும், இப்பட்டத்தினும் மேலானதொன்றுண்டாயின், அதற்கும் உரியவர்கள் ஐயரவர்களென்றும், நம்மொழியானது, அரசாங்கத்தாராற்புறக்கணிக்கப்படாத கௌரவத்தைஅடையுமாறு தம் அறிவாற்றல்களாற் செய்தவர்கள் ஐயரவர்களேயென்றும், ஆதலால், ஐயரவர்களைச் சார்ந்தே நம் தமிழ் பெருமைபெறுகின்றதென்று சொல்லலாமென்றும் இவ்வாறே தம்முள்ளார்ந்த மகிழ்ச்சியை இனிமையுற விளக்கினார்கள்.

இவர்கட்குப்பின், இந்நகர்ப் பிரபல வக்கீலும், பிரமஞானசங்கத் தலைவருமாகிய ப்ரும்மஸ்ரீ ப. நாராயணையரவர்களும், நேடிவ்காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீமத்—வேங்கோபாசாரியரவர்களும், சேதுபதி ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமத்—எஸ். சாமிநாதையரவர்களும், உத்தமபாளையம் ஸ்ரீமாந் சுப்பிரமணியமுதலியாரவர்களும், அமெரிகன்மிஷன் ஹைஸ்கூல் உபாத்தியாயராகிய ஸ்ரீமத் எம். கோபால கிருஷ்ணையரவர்களும், சேதுபதிஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமத் சேஷையரவர்களும் ஐயரவர்களது அருமைபெருமைகளைத் தாந்தாம் அறிந்தமுறையாலெல்லாம் புகழ்ந்துரைத்து, அவர்கள் பெற்றபேற்றில் தமக்குள்ள மகிழ்ச்சியைக்காட்டினார்கள். இவைமுடிந்ததும், நம்கவர்ன்மெண்டாரால் ஸ்ரீமத் சாமிநாதஐயரவர்கள் "மஹாமஹோபாத்தியாய" ப்பட்டம் பெற்றமைபற்றி இம்மதுரைமாநகரும் தமிழ்ச்சங்கமும் அளவற்ற மகிழ்ச்சியுறுகின்றசெய்தியை, அவர்கட்குத் தந்திமூலமாக அறிவிக்கவேண்டுமென்று முடிவுசெய்யப்பெற்றது. இதன்பின், சேற்றூர்ச் சமஸ்தானவித்வான் ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்களும், இத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகர் ஸ்ரீமத் சுப்பிரமணியக்கவிராயரவர்களும், "செந்தமிழ்" உதவிப்பத்திராசிரியர் ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்களும் ஐயரவர்கள் பெற்றபெருமையில் தாங்களடைந்துள்ள பேரானந்தத்தைச் செய்யுள் ரூபமாகக்காட்டிச் சபையைமகிழ்வித்தார்கள். பின் சபையோர்க்குச் சந்தனபுஷ்பதாம்பூலங்கள் வழங்கவும், அன்று 7 மணிக்கு சபை கலையலாயிற்று.

---